

ஒரு மாணவன்
மகாத்மாவாகிறான்
க.பி.நீலமணி
மணிவாசகர் பதிப்பகம்

12

# ஒரு மாணவன் மகாத்மாவாகிறான்

கே. பி. நீலமணி

மருதமலையான் பதிப்பகம்
33, பொன்னுச்சாமி நாயக்கன் தெரு
ராயப்பேட்டை : : சென்னை—14.

மருதமலையான் பதிப்பக வெளியீடு : 11

உரிமை : ஆசிரியருக்கு

முதற் பதிப்பு : நவம்பர் 1978

குழந்தைகள்
தின வெளியீடு

தயாரிப்பு : தேவகோட்டை லெ. இராமநாதன்

விலை ரூ. 3-75

அச்சிட்டோர் :
வீரபத்திரர் அச்சகம்
சென்னை—600014.

காந்தி . . . .

காந்தி . . . .

காந்தி . . . .

பாபு...பாபு...பாபு... !

நாடு நலம்பெற உழைத்தவர் காந்தி—நாடு வளம் பெற உழைத்தவர் நேரு! நாடு தலைநிமிர அல்லும் பகலும் பாடுபட்டவர் காந்தி—நாடு தலைநிமிர்ந்து நடக்க வழிவகுத்துப் பாதையைச் செப்பனிட்டுக் கொடுத்தவர் நேரு! இங்கே ஒரு மாணவன் காந்தியைப் போலவே வாழ்கிறான். அவரது கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒரு கல்லூரியையே வழி நடத்திச் செல்கிறான் — தன் வசப்படுத்துகிறான். ஒவ்வொரு மாணவனும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு—நேர்மை—நீதி நிலைக்கக் காரணமானவர்கள் காந்தி, நேரு, அண்ணா என்பதை உலகறியும்—

உயர்ந்த உள்ளங் கொண்டவர்கள் அறி வார்கள். அப்படிப்பட்டவர்கள் பிறந்த புண்ணிய பூமியில் நாமும் பிறந்திருக்கிறோம் என்பதே ஒரு பெருமைக்குரிய விஷயம். நல்லதொரு நூலை சுவைபட எழுதியுள்ளார் கே. பி. நீலமணி. சிறந்த எழுத்தாளர்களிலே ஒருவரான கே. பி. நீலமணியின் எழுத்துக் களிலே உணர்ச்சி இருக்கும்—உத்வேகம் இருக்கும் —கருத்து இருக்கும்! நானே இப் புத்தகத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டு போனால்...! தயவுசெய்து நீங்களும் படித்துப் பாருங்களேன்.

அன்பன்

லெ. இராமநாதன்.

# ஒரு மாணவன் மகாத்மாவாகிறான்!

## நுழைவாயில்

### கல்லூரியின் குரல்

அன்பார்ந்த மாணவர்களே!

அது ஓர் அழகிய பழம் பெரும் கல்லூரி. இயற்கையின் எழிலை எல்லாம் ஓர் இடத்திலே குவித்தாற்போல் அதை உருவாக்கியவர்கள் அப்படி அமைத்திருந்தார்கள். அழகுடன் கூடிய, மிகச் சிறந்த அறிவுச்சாலையாகவும் அந்தக் கலைமகள் கல்லூரி விளங்கியது. அக்கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று உயர்ந்தோர்தான் எத்தனை எத்தனை பேர்.

பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், பேராசிரியர்கள், வக்கீல்கள், விஞ்ஞானிகள், பொறி இயல் வல்லுனர்கள். இப்படிப் பலப்பல துறைகளில் மாமேதைகளாக விளங்கினவர்களையும் விளங்குபவர்களையும் எண்ணி எண்ணிப் பெருமையுடனும், உற்சாகத்துடனும் தலை நிமிர்ந்து நிற்கும் அக் கல்லூரியின் அடித்தளத்தில், இன்று ஏதோ மாளாச் சோகம்தான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

என்ன — கல்லூரிக்கு சோகமா!

ஆம்! கல்லும் சிமெண்டும் கொண்டு கட்டப் பட்டுள் ள அதற்கு, உயிரும் உடலும் இல்லைதான்; ஆனாலும், உயிரும் உடலுமாகப் பழகிய — கலைக்கோயிலாகத் தன்னை மதித்துப் போற்றிய எத்தனை பேரை அது பார்த்திருக்கிறது! தன் நிழலில் படித்து வளர்ந்து, முன்னேறி ஆளான எத்தனை எத்தனை உயர்ந்த மாணவமணிகளை அது தன்னுடைய நீண்ட கால வாழ்க்கையில் சந்தித்திருக்கிறது. அதற்காக அதுவும் தான் எவ்வளவு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது! ஆனால் இப்போது —

அக்கல்லூரியின் கரிய விழிகளின் கடையிலே முத்து முத்தாகக் கண்ணீர் பூத்து நிற்கிறது. ஆம்! தன்னிடம் அன்போடும், ஆவலோடும் வந்து நாடி வந்த காரியத்தை மறவாமல், கருமமே கண்ணாகப் படித்து முன்னேறும் மாணவர்களுக்கு மத்தியில், தன் பெயருக்கும் இழுக்கைச் சூட்டி, தங்களுக்கும் இழுக்கைத் தேடிக் கொள்ளும் சில மாணவர்களைத் தன்னுள் சந்திக்க நேர்ந்ததில்தான் அக் கல்லூரிக்கு அத்தனை சோகமும் கண்ணீரும். பொறுப்பற்று தங்களுடைய எதிர்காலத்தை இந்த மாணவர்கள் வீணாக்கிக் கொள்கிறார்களே, பணம் செலவு செய்து படிக்க வைத்திருக்கும் தங்கள் பெற்றோரின் எண்ணற்ற ஆசைக்கனவுகளை அறியாமல் அலட்சியம் செய்து கொண்டு இப்படிவீணான காரியங்களில் பிரவேசித்துத் தங்களின் பொன்னான காலத்தையும் பெயரையும் வீணாக்கிக் கொள்கிறார்களே; இவர்கள் மனம் திருந்தி, நல்லமாணவர்களாக மாட்டார்களா? நாளை உயர்ந்த குடிமகனாகப் பிரகாசிக்க வேண்டியவர்கள் அல்லவா இந்த இளம் உள்ளங்கள்!' — என்பதே இந்தக் கல்லூரியின் கவலை எல்லாம்.

அதன் கவலைக்குக் காரணமான மாணவ மணிகளைச் சந்திக்கலாமா?

இதோ, இடைவேளை மணி அடித்துவிட்டது! தேன் கூட்டை ஒரு குச்சியால் தட்டியவுடன் ஈக்கள் படைதிரண்டு வெளியே வருமே அது போல் அந்த இடை வேளை மணியைத் தட்டியவுடன்தான் மாணவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி.

அத்தனை நேரம் அமைதியாக இருந்த பிராந்தியம் இப்போது ஒரே கூச்சலும், கும்மாளமுமாகக் களை கட்டியிருந்தது.

இதோ கூட்டம் கூட்டமாய் வெளியே திரண்டுவரும் மாணவர்கள், குழாம் குழாமாய்ப் பிரிந்து செல்கிறார்கள்.

அதோ, சற்று ஒதுப்புறமான இடத்தில், அகன்று படர்ந்திருக்கும் அந்த மரநிழலில் சிறு கூட்டமாய்க் கூடியிருக்கிறார்களே-அவர்கள்தான், கல்லூரியின் கவலைக்கும், கண்ணீருக்கும் காரணமானவர்கள்- அவர்களையெல்லாம் நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஓ! நீங்கள்தான் நுழைவாயிலைக் கடந்து, களத்திற் குதித்து கதைக்கு வந்து விட்டீர்களே! இனிமேல் நீங்கள் அவர்களுடன் பழகுவதற்கும், அவர்களைப் புரிந்து கொள்வதற்கும். பின் தொடர்வதற்கும் குறுக்கே நான் நிற்பது நியாயமில்லையல்லவா! அதோ அவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து, ஆவேசமாகப் பேசி அழைக்கிறார்களே; சென்று வாருங்கள்!

# 1. மரத்தடி மகாநாடு

'பேச்சாளர்கள், நல்ல செயலாளர்களாக இருப்பதில்லை' —ஷேக்ஸ்பியர்.

தன்னை ஆதரிக்கும் மாணவர் குழாத்தின் மத்தியில் நின்று கொண்டிருந்த மாஜி லீடர் மூர்த்தி, ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

''நண்பர்களே! நான் இதற்கு முன்பும் உங்களுடன் பல முறை பேசியிருக்கிறேன். இன்றைய என்னுடைய நீண்ட பேச்சைக் கேட்டு நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு கைதட்டி ஆரவாரம் செய்தீர்கள். ஆனால் அதுமட்டும் போதாது. நான் இப்போது உங்களிடம் கூறிய திட்டத்தை நீங்கள் செயலில் காட்ட வேண்டும்.

''நீங்கள் ஹாஸ்டலில் செய்யப்போகும் ரகளைதான் நாம் தீட்டியிருக்கும் திட்டத்திற்குப் போடப் பட்டிருக்கும் பலமான அஸ்திவாரம் என்பதை மனதில் நன்றாக நிலை நிறுத்திக்கொண்டு செயல் படுங்கள்.

''நமது ஒற்றுமையும், தீரச் செயலும் சோம்பேறிச் சுப்பையாவையும், ஹாஸ்டல் வார்டனையும் கடந்து கல்லூரி முதல்வரின் கவனத்தைக் கவரவேண்டும். இந்த உணர்வோடு செயல்படுவீர்களா?'':—மூர்த்தி ஆவேசமாகக் கேட்டான்.

உடனே சுற்றிலும் கூடியிருந்த அவனது கோஷ்டி மாணவர்கள் கூக்குரலிட்டு ஆமோதித்தனர்.

''மூர்த்தியின் கீர்த்தியை மீண்டும் இந்தக் கல்லூரியில் நிலை நாட்டுவோம்.''

''மூர்த்தியை மீண்டும் லீடராக்கும் வரை எங்கள் போராட்டம் ஓயாது.'' என்று கூட்டத்திற்கு மத்தியி லிருந்த ராஜு பெருங்குரலில் கூச்சலிட்டான்.

உடனே ரமேஷும், ''புதிய லீடர் பாபுவின் கொட் டத்தை அடக்கி, அவனைப் பதவி இழக்க வைக்கும் வரை நாங்கள் எதற்கும் பின் வாங்கவோ, தயங்கவோ மாட் டோம்'' என்று சபதமிட்டான்.

மாணவர்கள் அதை ஆமோதிப்பதேபோல், ''ஆம்! ஆம்!'' என்று கோரசாக கோஷமிட்டபடி கைதட்டி வர வேற்றனர்.

மூர்த்தி அவர்களை எல்லாம் அமைதியாகக் கலைந்து செல்லுமாறு பணித்தான். அவனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்கள்போல் அனைவரும் கும்பல் கும்பலாகப் பிரிந்து சென்றனர்.

## 2. ஹாஸ்டல் ரகளை

**'படிப்பின் நோக்கம் ஆட்சேபம் செய்தல்,**
**வாதம் செய்தல், ஆராயாது நம்பிக்கை**
**கொள்ளுதல், இம் மூன்றும் அல்ல.**
**ஆராய்ந்து சீர்தூக்கித் தீர்மானித்தலே'.** —பேங்கன்

காலைச் சூரியன் உற்சாகமாக அந்தக் கல்லூரியின் உச்சி யில் பவனி வந்து கொண்டிருந்தான். அன்று அந்தக் கல்லூரி

ஹாஸ்டலில் நிகழப் போகும் மாணவர்கள் ரகளையை வேடிக்கை பார்க்க விரும்பிய கதிரவனும், ஆவலோடு தன்னுடைய பொன்னிறக் கிரணங்களைப் பாய்ச்சி, அந்த நீண்ட, விசாலமான உணவு அறையில் உலவிக் கொண்டிருந்தான்.

இன்னும் சற்றைக் கெல்லாம், மாணவர்கள் சாப்பிடப் படையெடுத்து வந்து விடுவார்கள். உணவு தயாரிக்கும் அடுக்களைக்கும், உக்ராண அறைக்குமாக, சுப்பையா பரந்து பரந்து ஓடி வேலை செய்து கொண்டிருந்தான்.

ஹெட்குக் ராமசாமி சமையலைச் செய்து முடித்துவிட்டு, லைப்பாய் சோப்பினால் முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு போய் விட்டார். இனி மேல், மீண்டும் நான்கு மணி நேரத்திற்குப் பிறகுதான் அவரை அங்கு பார்க்க முடியும். அது வரை அவருக்கு ரெஸ்ட். அவருடைய காலை டூட்டி முடிந்து விட்டது.

ஆனால், சுப்பையாவினால், ராமசாமியைப்போல் துண்டையோ, சட்டையையோ உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே போய்விட முடியாது. பொழுது விடிந்தால் இருட்டுகிற வரை அவனுக்கு ஏதாவது டூட்டி இருந்து கொண்டே இருக்கும். அதற்கிடையில் அவனைப் பார்த்து எடுத்துக் கொள்வதுதான் ரெஸ்ட். ஏனென்றால், ராமசாமிக் காவது 'ஹெட்குக்' என்கிற பட்டம் உண்டு. அந்தப் பதவிக்குரிய பொறுப்பை தானே முழுமையாக நிறைவேற்றாவிட்டாலும் ராமசாமி ஹெட்குக்தான்.

ஆனால், சுப்பையாவின் பாடு அப்படி இல்லை. பாதி நாட்கள், ராமசாமி தன்னுடைய பாதிவேலையிலேயே சுப்பையாவிடம் சார்ஜை ஒப்பித்து விட்டு எங்காவது வெளியேபோய் விடுவார். அதன் பிறகு அங்கே ஹெட்குக், அசிஸ்டெண்ட் குக், சர்வர், எல்லாமே சுப்பையாதான். அதற்காகச்

சுப்பையா மனம் சலித்துக் கொள்வதோ, முகம் சுளிப்பதோ இல்லாததினாலேயே அவனுடைய வண்டி எவ்வித தங்குதடங்கலுமின்றிச் சென்று கொண்டிருந்தது.

சுப்பையா அங்கு வேலைக்கு வந்து பதினைந்து வருஷமாயிற்றென்றால், ராமசாமி அவனைவிட பத்து வருஷம் சீனியர். அந்த நீண்ட காலத்தில் அவர் தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ள, பல பிரமுகர்களின் ஆதரவையும், அன்பையும் பெற்று பலமான அஸ்திவாரமாகப் போட்டுக் கொண்டு விட்டவர்.

ஆகவே, 'ஹெட்குக்'கைப் பற்றித் தான் எந்த உண்மையான குறைகளையும் சொன்னால்கூட எடுபடாது என்பதை சுப்பையா வேலைக்குச் சேர்ந்த மாத்திரத்திலேயே தன்னுடைய விவேகத்தினால் புரிந்து கொண்டு, ராமசாமிக்கு அனுசரணையாகவே பிழைக்கத் தெரிந்து கொண்டு விட்டான். இதனால் ராமசாமிக்கும், சுப்பையாவிடம் ஒரு அலாதியான ஈடுபாடு.

''நான் இங்கு வேலையை விடும்போது, உன்னைத்தான் என்னுடைய 'ஹெட்குக்' ஸ்தானத்தில் வைத்து விட்டுப் போவேன்'' என்று அடிக்கடி கூறுவார்.

தான் சொன்னபடி ராமசாமி செய்வாரோ செய்யமாட்டாரோ, அந்த ஆறுதலான வார்த்தையும், நன்றியுணர்தலும் சுப்பையாவுக்கு மிகவும் தெம்பை ஊட்டின. அதைப் பற்றி அவன் மனம் ஒவ்வொரு சமயம் கனவுகள்கூடக் காண்பதுண்டு.

திடீரென்று 'டைனிங் ஹாலில்' ஏற்பட்ட மாணவர்களின் ஆரவாரமும், மேஜை நாற்காலிகளின் ஓசையும் சுப்பையாவின் பணியைத் துரிதப்படுத்தின.

ஏற்கனவே சுப்பையா டேபிள்களில் இலையைப் போட்டு, டம்ளரில் தண்ணீர் வைத்து விட்டான். பரிமாறுவதற்குத்

தோதாக வாளியில் சாம்பார், ரசம், மோர், எல்லாம் நிரப்பி வைத்துக் கொண்டு வேகமாகத் தன்னுடைய பணியில் ஈடு பட்டுக் கொண்டிருந்தான்.

அன்று பரிமாறும் போதே, மாணவர்களில் ஒரு கோஷ்டி யினரிடையே, ஏதோமாறுதல்கள் தென்படுவதை சுப்பையா லேசாக உணர்ந்து கொண்டான். ஆகவே, அவனும் அதற் கேற்ற ஜாக்கிரதை உணர்வுடனேயே உணவு பரிமாறினன்.

அவசரப்படாமலும், அதே சமயம் துரிதமாகவும், நிதானமாகவும், குறிப்பறிந்து பறிமாறினன். சாதாரண மாக இருக்கும்போது, பாண்ட் ஷர்ட்மீது சாம்பார் பக்கெட் டோடு சரிந்து விழுந்து விட்டால் கூட சிரித்துக்கொண்டே போய் விடுவார்கள். அவர்களுக்குள் ஏதோ குழப்பமோ —'மூட்' சரியில்லாமலோ இருந்தால், கர்சீப்பில் பச்சைத் தண்ணீர் தெறித்ததற்குக்கூட லஞ்ச் ஹாலே ரெண்டாக்கி அமர்க்களப்படுத்தி விடுவார்கள். இதெல்லாம் சுப்பையா வின் அனுபவப் பாடம்.

ஆனல், சுப்பையாவின் அனுபவத்திற்கும், பொறுமைக் கும் சவாலாக, எப்படியோ மூர்த்தி கோஷ்டியினர் ரகளே யைத் துவக்கி விட்டனர்

பாதி சாப்பிட்டுக் கொண்டே இருந்த ரமேஷ், ''ஓ!... ஓ...'' என்று வாந்தி எடுப்பதுபோல் எழுந்து நின்று குமட் டிக் கொண்டே கத்தினன், ''இந்தச் சாப்பாட்டை எந்த மனுஷனவது சாப்பிடுவான? குடலேப் பிரட்டிக் கொண்டு வாந்தி வருது. கத்தறிக்காய் கறி ஒரே கசப்பு.''

ரமேஷ் கூறி முடிப்பதற்குள் ராஜு குறுக்கிட்டான். ''ஏ சுப்பையா, ரசத்தில் வங்காளக் கடல் புகுந்து விட்டதா? ஒரு கரண்டி வாயில் ஊற்றிப் பாரு. உப்பு விலே மலிவு என் பதற்காக இப்படியா வாரிக் கொட்டுவது.''

''சோற்றை அள்ளி வாயிலேபோட்டா, கல்லும் மண் ணும் பல்லை உடைக்குது. எங்க வயிறு என்ன, கல்லு-உடைக் கிற மிஷிஞ?''—கண்ணனும் தன் பங்கை விட்டு வைக்க வில்லை.

சண்டை களை கட்டி விட்டது என்பதை உணர்ந்து கொண்ட மூர்த்தி இப்போது எழுந்து நின்று கொண்டு பேசிஞன்.

''நண்பர்களே, வீண் பேச்சு எதுவும் வேண்டாம். நீங்கள் அமைதியாயிருங்கள். நான் பேசிக் கொள்கிறேன்,'' என்று நண்பர்களை நோக்கிக் கூறிவிட்டு, சுப்பையாவின் பக்கம் திரும்பி, ''சுப்பையா இன்றையச் சாப்பாடு வெகு மோசமாக இருக்கிறது. எங்களுக்கு வேறே சாப்பாடு போடப் போகிருயா இல்லையா?'' என்று கேட்டான்.

சுப்பையா பொறுமையுடன், ''இங்கே இருக்கிறது இந்த ஒரே சாப்பாடுதான். இதைத்தான் எல்லோருக்கும் போட்டி ருக்கேன். நீங்க எதையோ மனசிலே வெச்சுக்கிட்டு, எங் கிட்டே இப்படிக் கோரஸாக் கத்தறதிஞலே என்ன பிரயோ சனம்?'' என்ருன்.

''உங்கிட்டேக் கத்தாமே, பின்னே யார்கிட்டேப்போய் எங்களைக் கத்தச் சொல்லறே! நீ தானே எங்களுக்குச் சாப் பாடு போடறே?'' என்ருன் ரமேஷ் சூடாக.

''சாப்பாட்டை நான் எங்க வீட்டிலேயிருந்தா கொண்டுவந்து போடறேன்! உங்க 'ஹெட்'சாமான் வாங்கிப் போடருரு; எங்க 'ஹெட்குக்' ஆக்கி வைக்கிருர். நான் அதை உங்களுக்கு 'சர்வ்' பண்ணறேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

''சுப்பையா, சும்மா 'குக்கு, குக்கு'ன்னு பயமுறுத் தாதே. உங்க குக்குக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு?

மாசா மாசம் நாங்க சொளே சொளேயாப் பணம் கட்டல்லே? சோத்துக்குப் பதிலா இப்படிக் கல்லேயும், மண்ணேயும் கொண்டு வந்து கொட்டவா கொடுக்கறேம்?'' என்ற கண்ணனின் கேள்வியைக் கேட்டதும் சுப்பையா லேசாகச் சிரித்தான்.

''தம்பிகளா, கல்லும் மண்ணும் கூடச் சும்மாக் கிடைக் காது; காசு கொடுத்தால்தான் கிடைக்கும்'' என்ருன்.

உடனே ராஜு, ''நாங்க ஒண்ணும் கல்லுக்கும், மண் ணுக்கும் பணம் கட்டலே சுப்பையா,; நல்ல சாப்பாட்டுக் குத்தான் பணம் கட்டறேம். அது எங்களுக்குக் கிடைக்கல் லேன்ன இப்படிக் கூச்சல் போடத்தான் செய்வோம்'' என்ருன்.

''ஓ! நீங்க கூச்சல் போட்டா, நல்ல சாப்பாடு வந்துடுமா, மந்திரத்திலே மாஞ்செடி முளேக்கிறப்பலே. அடே, அப்ப ரொம்ப நல்லதாப் போச்சே! சாமான் வாங்க வேண்டாம்; சமைக்க 'குக்' வேண்டாம்; சர்வ் பண்ண இந்த சுப்பையாவாவது வேணுமா; இல்லே அதுவும் வேண்டாமா? எங்கே, எல்லோரும் ஜோராக் கூச்சல் போட்டு நல்ல சாப் பாட்டை வரவழைச்சுக் காட்டுங்க; உங்க மாயா பஜார் வேலேயை நானும் பார்க்கிறேன்'' என்று சுப்பையா கூறி முடிப்பதற்குள், மூர்த்திக்குப் பிரமாதக் கோபம் வந்து விட்டது.

''சுப்பையா, எங்களேக் கிண்டலா பண்ணறே?'' என்று முறைத்துப் பார்த்தான்.

சுப்பையா அமைதியாக, ''நான் உங்களேக் கிண்டலும் பண்ணல்லே, சுண்டலும் பண்ணல்லே. ஏதோ மாஜிக்லே மாங்காய் வரும்னு சொல்லுவாங்க? நீங்க சத்தம் போட்டே

சாப்பாடு வரவழைப்போம்னு சொன்னீங்க. அதை நானும் பார்க்கக் கூடாதான்னு கேட்டேன் என்றுன்.

உடனே ரமேஷ் தன் ஆட்காட்டி விரலை ஆட்டியபடி, ''வித்தை காட்டறதுக்கு நாங்க ஒண்ணும் மந்திரவாதிங்க இல்லே! நாங்க இப்போ அதுக்காகவும் உங்கிட்டே வரல்லே. ஸ்டூடன்ஸ் கிட்டே மரியாதையா நடந்துக்க நீ முதல்லே க த்துக்கோ'' என்று எச்சரித்தான்.

''ஓ! அப்படீங்களா! ஆனு...நான் படிச்ச பள்ளிக் கூடத் திலே எங்க வாத்தியாரு, எல்லார் கிட்டேயும், எல்லாரும் மரியாதையா நடந்துக்கணும்னுல்லே, சொல்லிக் கொடுத் திருக்காரு,'' என்றுன்.

அத்தனை நேரம் அங்கு நடப்பவற்றையெல்லாம் ரசித்த படி வேடிக்கை பார்த்துக் கொண்டு, ஏதும் பேசாமல் இருந்த கணபதி சட்டென்று. ''ஏன் சுப்பையா, இப்போ நீ சொன் னியே, 'எல்லார் கிட்டேயும் எல்லாரும்...' அப்படீன்ஞ என்ன அர்த்தம்?'' என்றுன்.

உடனே சுப்பையா, ''மத்தவங்களுக்கு மரியாதை கொடுத்தாத்தான், அவங்க கிட்டேயிருந்தும் பதிலுக்கு மரியாதை கிடைக்கும்னு அர்த்தம்'' என்று விளக்கினுன்.

உடனே ராஜு அலட்சியமாக உதட்டைப் பிதுக்கியபடி ''ஆஃப்டர் ஆல், நீ ஒரு சர்வர்: எங்க சம்பளத்தில் பிழைக் கிற உனக்கு நாங்க ஏன் மரியாதை கொடுக்கணும்?'' என்றுன்.

''இதுக்கு நான் பதில் சொன்ஞ, உங்களுக்கு மண வருத்தம் ஏற்படும், 'ஆஃப்டர் ஆல் நீங்க ஒரு மரியாதை

தெரியாத, மமதை பிடிச்ச ஸ்டுடன்ஸ்? நான் அள்ளிப் போடறதைத் தின்னு வயிறு வளர்க்கற உங்களுக்கு மரி யாதை எதுக்கு? என்கிற மாதிரி எங்கிட்டேருந்தும் கோப மாகப் பதில் வரும். ஆனுல் நான் சொல்ல மாட்டேன். கோபப்பட மாட்டேன்.''

உடனே கணபதி குறுக்கிட்டு, ''ஏன் சுப்பையா நாங்க நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரிச் சொல்ல வேண்டியதையெல் லாம் பக்குவமாகச் சொல்லிப்பிட்டியே. இன்னும் என்ன பாக்கியிருக்கு?'' என்ருன்.

உடனே மூர்த்தி கணபதியைப் பார்த்து, ''நீ வேறே அவனே இன்னும் தூண்டி விடறியா?'' என்று அதட்டிவிட்டு ''சுப்பையா, அனுவசிய விவகாரம் வேண்டாம். இந்தச் சாப்பாட்டை எங்களாலே சாப்பிட முடியாது. நீ இப்போ எங்களுக்கு வேறே சாப்பாடு போடப் போறியா, இல்லையா'' என்று கேட்டான்.

''அதைத்தான் நான் முதல்லேயே உங்களுக்குச் சொல் லிப்பிட்டேனே. நான் இப்போப் போட்டிருக்கிறதே. நல்ல சாப்பாடுதான். அதனுலேதான் மற்ற அத்தனே பையன்களும் ஒண்ணும் பேசாமல் சாப்பிட்டுப் போயிருக்காங்க. இதைத் தவிர இங்கே வேறே ரெண்டு சாப்பாடு இல்லே. இதுக்கு மேலே நான் என்னசொல்ல?'' என்ருன் சுப்பையா.

உடனே மூர்த்தி, ''மத்தவங்க வாயை மூடிக்கிட்டுப் போனுங்க என்கிறதுக்காக இது நல்ல சாப்பாடு ஆயிடுமா? அவங்க போவாங்க. எல்லாம் சுத்த பயந்தாங்கொள்ளிப் பசங்க; வாயில்லாப் பூச்சிங்க. ஆனு எங்களே உங்களாலே ஏமாத்த முடியாது. மெஸ்ஸுக்குக் கொடுக்கற பணத்திலே, ஒழுங்கா நல்ல சாமானுவாங்கிப் போடாமெ, நீ, குக்கு, வார்டன், லீடர், எல்லாரும் கோஷ்டியாக கொள்ளேயடிக்

கறீங்க: உங்கஹாஸ்டலோட பேரே கெட்டுப் போச்சு.''
என்று குற்றச் சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போனுன்.

அதற்கு சுப்பையா, ''உங்களுக்கு இவ்வளவு தூரம் விஷயங்கள் எல்லாம் புரிஞ்சிருக்குன்னு உடனே இதைப் போய் மேலிடத்திலே புகார் பண்ணுங்களேன். அதை விட்டு விட்டு வீணுக நீங்க சில பேருங்க மட்டும் குரூப் சேர்ந்துக் கிட்டு, 'குக்' வீட்டுக்குப் போனப்புறம், என்கிட்டே வந்து கத்தி என்ன பிரயோசனம்'' என்று கேட்டான்

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ரமேஷ் சுப்பை யாவை இளக்காரமாக ஒரு முறை பார்த்தான். ''ஏன் பர்ச் சேஸர் பார்த்தசாரதி, லீடர் பாபு, ஹெட்கிளார்க் ஏகாம்பரம் எல்லோரையும் கைக்குள்ளற போட்டுக்கிட்டிருக்கிற தைரியமா? இனிமே உங்க பாச்சா ஒண்ணும் பலிக்காது. மெஸ்ஸுக்கு சாமான் வாங்கப் போற பணத்திலே, கொள்ளை யடிச்சு நீங்க எத்தனைபேரு பங்கு போட்டுக்கறீங்க என்கிற விஷயம் எங்களுக்குத் தெரியும். இனிமேலும் நாங்க சும்மா இருக்கப் போறதில்லே.

ஒண்ணுக்குப் பாதி சாமான் வாங்கறது! அதிலேயும் மட்டச் சரக்கா வாங்கி எங்க வயிற்றைக் கெடுத்தா நாங்க வாயை மூடிக்கிட்டு இருக்கணுமா?'' என்றுன்.

ரமேஷின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுப்பையா வுக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்துவிட்டது. பொறு மைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதுவும் அபாண்ட மாக, அவதூருகத் தன்னைப்பற்றிப் பேசுவதை சுப்பையா வினல் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆயினும், சற்று அவன் தன்னை அடக்கிக் கொண்டே கூறினன்.

ஏனெனில் அவன் தன்னுடைய இத்தனை வருஷ அந்த மெஸ் அனுபவத்தில் பலதரப்பட்ட மாணவர்களைச் சந்தித்

திருக்கிறுன். பழகியிருக்கிறுன் ''எங்க வீட்டிலே கூடஎன்னை இப்படிக் கவனிச்சு, வற்புறுத்திச் சாப்பிட வைக்க மாட்டாங்க சுப்பையா; நீ எங்க அப்பா, அம்மா மாதிரி எங்களை கவனிச்சுக்கறே?'' என்று புகழ்ந்து கூறிய மாணவர்களையும் பார்த்திருக்கிறுன். இப்படித் தூற்றுகிற மாணவர்களையும் பார்த்திருக்கிறுன். ஆனுல் எது எப்படி இருந்தாலும், ஒரு விவகாரம் என்று வந்து விட்டால், அதில் மாணவர்கள் கட்சி தான் எடுபடும்; கடைசியில் சுப்பையா இப்படி நடந்திருக்கக் கூடாது என்கிற தீர்ப்பில்தான் வந்து முடிந்து அவன் அவர்களிடம் வருத்தம் தெரிவித்துக் கொள்வதோடுதான் விவகாரம் முற்றுப் பெறுவது வழக்கம்.

ஆம்! என்ன இருந்தாலும், அவன் ஆபீஸ்பட்ர் ஆல் ஒரு சர்வர்தானே என்கிற எண்ணம். அவன் கொட்டுகிற அன்பிற்கு விலை இல்லை; மதிப்பில்லை; அவன் தவறிப்போய் சிந்தி விடுகிற சில சொற்களுக்குப் பிரமாதமான விசாரணை உண்டு.

இந்த நிலையைக் கண்டு உள்ளூர மனம் வெதும்பிக் கொண்டிருந்த சுப்பையாவின் பொன் உள்ளத்தை,ரமேஷின் சுடு வார்த்தைகள் புண் படுத்திவிட்டன போலும். வார்த்தைகளும் அவனையறியாமல் சூடாகவே வந்து விட்டன. போலும்.

''இந்தாப்பா. தம்பிகளா, நான் இப்போ உங்களை யாரையுமே வாயை மூடிக்கிட்டிருக்கச் சொல்லலியே! ஏன்ன, அது உங்களாலேயே முடியாத விஷயம்.

ஆனு அதுக்காக உங்களுடைய உருட்டலையும் மிரட்டலையும் எங்கிட்டே வெச்சுக்க வேண்டாம். அதுக்கு நான் ஆள் இல்லே; வேணுமானு உங்க புகார்களையெல்லாம்பிரின்சிபால் கிட்டேப் போய்ச் சொல்லிக்குங்க,'' என்று கூறிவிட்டான்.

அவ்வளவுதான் சுப்பையாவினுடைய வாயிலிருந்து இந்த ஒருவார்த்தை வரவேண்டுமென்றுதான் காத்துக் கொண்டிருந்தது போல் மூர்த்தி கோஷ்டியினர் பாதிச்சாப் பாட்டிலே ஆர்ப்பாட்டம் செய்தபடிக் கையைக் கழுவிக் கொண்டு எழுந்து விட்டனர். கூட்டமாக வந்து சுப்பையாவைத் தாக்க ஆரம்பித்தும் விட்டனர். தடுக்கவந்த கணபதிக்கும் இரண்டு கிடைத்தது.

''ஒ! அவ்வளவு தூரத்துக்கு உனக்கு தைரியம் வந்துட்டுதா? இந்தா வாங்கிக்கோ...இப்போ எல்லாத்தையும் சேர்த்து, நீயே முதல்வர் கிட்டேப் போய் புகார் பண்ணிக்கோ,'' என்று அவர்கள் கலைந்து செல்லும்போது கூறிய மூர்த்தியின் வார்த்தைகள் சுப்பையாவின் செவிகளில் தெளிவாக விழுந்து கொண்டிருந்தது.

அவனைச் சுற்றிலும், மேஜை, நாற்காலிகள், டபரா, டம்ளர்கள், இதர சாமான்கள் எல்லாம் ஹால் முழுவதும் தாறுமாறாகச் சிதறி இரைந்து கிடந்தன.

# 3. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்

'மாணவர்கள் பள்ளிகளில் எதைப்படிக்கிறார்கள், எதைப் படிக்கவில்லை என்று நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு நிபந்தனை; அசாதாரணச் சூழ்நிலையில் கூட அச்சமின்றி உண்மையைப் பின் பற்றுபவனே சிறந்த மாணவன்; உண்மையைப் பின்பற்றுபவனே ஆண்மை பெறுகிறான்?

—மகாத்மா காந்தி.

**ஆ**காயம் நிர்மலமாக இருந்தது! மரம் செடி கொடிகள் லேசாகத் தலையசைத்த வண்ணம் நிமிர்ந்து நின்றன. காணு

மிடமெல்லாம் இயற்கையின் அழகு மெருகேற்றப்பட்டு, சூரிய ஒளியில் பளிச்சிட்டு மின்னின. செப்டம்பர் மாதத்தின் நண் பகல் நேரம்; அன்று ஞாயிற்றுக்கிழமை.

ராஜு, ரமேஷ், மூர்த்தி, கணபதி, இன்னும் சில நண்பர்களும் காரசாரமாக எதைப் பற்றியோ பேசியபடி, மெயின் ரோடையும், சிறிய சந்துகளையும் கடந்து ஒரு தென்னந் தோப்பிற்குள் நுழைந்தார்கள்.

கோடையின் வெப்பத்திற்குப் பந்தல் போட்டது போல் வானத்தை மறைத்துக் கொண்டு அடர்ந்து நெருங்கி வளர்ந்திருந்தன மரங்கள். அவற்றின் கிளைகளையும் பரந்து விரிந்த இலைகளையும் துளைத்துக் கொண்டு, கதிரவனின் ஒளி தரையில், தங்க நாணயங்களை வாரி இரைத்தாற்போல் மின்னின.

தோட்டத்தின் மத்தியிலிருந்த ஒரு கிணற்றங் கரையை அடுத்து, உட்காருவதற்கு ஏற்றதாயிருந்த ஒரு இடத்தைத் தேடிப்பிடித்துக் கொண்டு அனைவரும் அமர்ந்தனர்.

சிறிது நேரம், அவர்களில் யாரும் ஒருவருக்கொருவர் ஏதும் பேசிக் கொள்ளாமலே நேரம் மௌனத்தில் கரைந்தது.

அந்த மௌனத்தைக் கலைக்கத்தானோ, அல்லது உண்மையிலேயே நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பின் தாகத்தினால் தானோ என்னமோ, சட்டென்று எழுந்த கணபதி, ''நான் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் குடிக்கப் போகிறேன். உங்களுக்கும் வேண்டுமா?'' என்று கேட்டான்.

''நீ இப்போது எங்கும் எழுந்து போக வேண்டாம், கொஞ்சம் போகட்டும் உட்காரு,'' என்று அவன் கையைப்

பிடித்து இழுத்து அமர்த்திய ரமேஷ், ''என்ன இருந்தாலும், ஹாஸ்டலில் நாம் பண்ணின ரகளை இத்தனை சீக்கிரம் பிரின்ஸ் பாலுக்குப் போய் விடும் என்று நான் எண்ணவே எல்லை,'' என்றான்.

இதைக் கேட்டதும் கணபதி பெரிசாகச் சிரித்தான். ''ஏன்டா ரமேஷ், நீங்க எல்லாருமாச் சேர்ந்து தானே சுப்பையாவை, பிரின்ஸ்பால் கிட்டேப் போய்ச் சொல்லு, சொல்லுன்னு, போட்டு அடிச்சீங்க, சொல்லிப்பிட்டான்.

அது மட்டுமா, நீங்க ஹாஸ்டல் மேஜை நாற்காலிகளை உடைச்சது; பொருட்களை நாசம் பண்ணினது; அதை விசாரிச்ச வார்டனை மரியாதைக் குறைவாகப் பேசி அவமானப் படுத்தினது, எல்லாத்தையுமே போய்ச் சொல்லிப் பிட்டான். இப்ப வந்து பயந்து என்ன பண்ணறது?''

உடனே மூர்த்தி சற்று கோபமாக, ''ஏய் கணபதி, நாங்க பயப்படறதா யாருடா சொன்னது? எங்களையும் உன்னைப் போல கோழைன்னு நினைச்சியா?'' என்று கேட்டான்.

''பார்க்கத்தானே போகிறேன். முதல்வர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?''

''தெரியாமே என்ன! சர்வர் சுப்பையாவை கைநீட்டி அடிச்சது மன்னிக்க முடியாத குற்றமாம். இதிலே சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் சுப்பையா கிட்டே மன்னிப்புக் கேக்கணுமாம், அதுதானே!''

''அது மாத்திரமில்லே ரமேஷ், ஹாஸ்டல்லே நீங்க சேதப்படுத்தினதுக்குண்டான விலையை அபராதத்துடன் கட்டி, வார்டன் கிட்டே மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்கணுமாம். இல்லேன்னு கடுமையான நடவடிக்கை எடுக்கப் போறாராம்.''

கணபதியின் வார்த்தையைக் கேட்டதும் ராஜுவும் ரமேஷும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் முகத்தில் லேசான பீதி படர்ந்திருந்தது. ஆனால் மூர்த்தி கொஞ்சம்கூடச் சலனமே இல்லாமல், ''டேய் கணபதி, அதெல்லாம் ஒன்றும் நடக்காது. முதல்லே பாபுவின் மேலே இருக்கிற குற்றச்சாட்டுகளுக்கு அவன் பதில் சொல்லி ஆகணும். அவன் பண்ணியிருக்கிற அயோக்கியத் தனத்தை ஆதாரத்தோடு முதல்வருக்கு விளக்கி எழுதியிருக்கிறேன். முதலில் அதற்கு அவர் விசாரணை வைத்தாக வேண்டும். அதன் பிறகு வரட்டும், நாங்கள் பதில் சொல்லிக்கொள்கிறோம்,'' என்றான்.

மூர்த்தியினுடைய இந்த வார்த்தையைக் கேட்டதும் கணபதிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் தன்னையும் மீறி, ''என்ன, பாபுவின் மீது குற்றச்சாட்டா? அவன் அயோக்கியத்தனம் பண்ணினானா? என்னால் நம்பவே முடியவில்லையே மூர்த்தி,'' என்றான் கணபதி.

உடனே மூர்த்தி, ''உன்னாலே என்ன; யாருமே நம்ப மாட்டார்கள் நான் நிரூபித்துக் காட்டும்வரை. ஏனென்றால், அவன் அவ்வளவு தூரம் நல்லவனைப்போல எல்லோரையும் ஏமாற்றி வேஷம் போட்டிருக்கான். அதிலே அத்தனை பேரும் ஏமாந்துட்டாங்க. ஸ்டோரிலே, டீ பார்ட்டிக்காக வாங்கி வைத்திருக்கிற எவர்சில்வர் செட்டிலே இருந்து, ஐம்பது பிளேட்டுகளும், நூறு ஸ்பூன்களும் மாயமாய் மறைஞ்சிருக்கு. நான் கண்டுபிடிச்சுக் கேட்டப்போ, சுப்பையாவும், 'குக்'கும் ஆடு திருடின கள்ளன் மாதிரி விழிக்கறாங்க, 'என் கையைப் பிடிச்சுக் கெஞ்சினப்போ, 'கவலைப் படாதீங்க, பாபுவும், வார்டனும் கூட்டாச் சேர்ந்து இதைத் திருடி ஒரு இடத்திலே பதுக்கி வெச்சுருக்காங்க'ன்னு நான் சொன்னதும் அவங்க ரெண்டு பேரும் அப்படியே அசந்து போயிட்டாங்க தெரியுமா?'' என்றான் மூர்த்தி.

கணபதிக்கு ஒருகணம் தன் செவிகளேயே நம்ப முடியவில்லை. அவன் தன்னையும் மீறி, ''சுத்தப் பொய். பாபு நிச்சயமாய் இந்த மாதிரி ஒரு திருட்டைச் செய்திருக்கவே மாட்டான். நீங்களாக அவன் மீது இப்படி ஒரு அபாண்டப் பழியைச் சுமத்தி யிருக்கிறீர்கள்'' என்று கத்தினன்.

உடனே ராஜு, ''ஏன் கணபதி நீ இப்படிக் கத்தறே? நாங்க எதுக்காக பாபுவின்மீது வீண்பழியைச் சுமத்தணும்?'' என்ருன்.

கணபதி மௌனமாக அவர்களை யெல்லாம் ஒரு கணம் தன் அரை விழிகளைத் திறந்து பார்த்தான். அவன் மனம் மிகவும் சங்கடத்திற்குள்ளாகி இருந்தது அவனது முக பாவத்திலல் நன்கு விளங்கியது.

பாபு, மூர்த்தி அவர்கள் எல்லோருமே ஒன்ருகத்தான் இந்தக் கலைமகள் கல்லூரியில் நுழைந்தார்கள். அப்போது அவர்களுக்குள் எவ்விதக் கோஷ்டிப்பூசலும் இல்லை. ஒவ்வொருவர் மீதும் ஒவ்வொருவர் உயிரையே வைத்திருந்தனர். அப்படிப் பழகியவர்கள்தான் இன்று, எலியும் பூனையுமாக எதிர்க்கட்சிகளில் நிற்கின்றனர்.

கடந்துபோன அந்த இனிய நாட்களை எண்ணிப் பார்த்த போது கணபதியின் கண்களில் லேசாகக் கண்ணீர் பூத்தது. பாபுவின் மீது மூர்த்திக்கு இப்படியொரு மனக் கசப்பு எழக் காரணமாயிருந்த பழையதொரு சம்பவத்தை கணபதி இன்னும் மறக்கவில்லை.

ஆனல் அதற்காக, மேலும் மேலும் மூர்த்தியை இப்படியே அவன் வழியில் விட்டு வைக்கவும் கணபதிக்கு விருப்பமில்லை. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், பாபு மீது திருட்டுப் பட்டம் கூடச் சுமத்த மூர்த்தி துணிந்துவிட்ட பிறகும். தன் மனத்திலுள்ளதைக் கூறி, நண்பனைத் திருத்தா

விடில், மூர்த்தியோடு தானும் உடந்தையாயிருந்த பாவத்திற்கு ஆளாக நேரிடும் என்று கணபதியின் உள் மனம் கூறியது.

நான் கூறப் போவது மூர்த்தி கோஷ்டியினருக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் சரி, தன் மனத்திற்குச் சரி என்றுபட்டதைச் சொல்லியே தீரவேண்டும் என்கிற முடிவிற்கு கணபதி வந்துவிட்டான். பேசத் துவங்கும்போதே அவனது குரல் கரகரத்தது.

''என் இனிய நண்பர்களே, நான் கூறப் போவது உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும், கசப்பான சில உண்மைகளை நான் கூறியே ஆகவேண்டும். ஏனெனில் நான் உங்கள் நண்பன். உங்களோடு தீய காரியங்களில் ஒத்துழைக்காவிடினும், உங்கள் நலனில் அக்கறை உள்ளவன். ஆகவே நான் சொல்லுவதை தயவு செய்து கேளுங்கள்.

பாபுவின்மீது வீண் பழி சுமத்தி, அவனை அவமானத்திற்குள்ளாக்க வேண்டாம். உங்களுக்கெல்லாம் பாபு செக்கரட்டரியாகி விட்டதே பெரிய அதிர்ச்சி. அந்தத் தோல்வியை ஏமாற்றத்தை ஜீரணிக்க உங்களால் இயலவில்லை. இந்தத் தடவையும் தானே வென்று, பழைய மாதிரி வார்டனையும் கைக்குள் போட்டுக் கொண்டு, ஸ்டோர்ஸ் சாமான்களில் கமிஷன் அடிச்சு தன்னுடைய 'குரூப்'பைக் குஷியாக வைத்துக் கொள்ளலாம் என்று மூர்த்தி கனவு கண்டான். மெஸ்ஸிலே பழைய மாதிரியே உங்களுக்கெல்லாம் ஸ்பெஷல் மரியாதை, விசேஷக் கவனிப்பு எல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தீர்கள். ஆனால், பாபு எல்லா விஷயத்திலும், எல்லோர் விஷயத்திலும் கண்டிப்பும் நேர்மையுமாக இருக்கிறான். மாணவர்கள் மெஸ்ஸுக்குக் கொடுக்கிற பணத்தை மோசடி பண்ணவோ, அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகமோ செய்யமாட்டேன்னு உங்ககிட்டே ஒப்பனுச் சொல்லிப்பிட்டான். அந்தக் கோபத்தை, நீங்க இப்படி அவன்

மேலே பழி சுமத்தி வஞ்சம் தீர்த்துக்கிறீங்க. இதுவேணும்; நல்லதில்லே; நான் அவ்வளவுதான் சொல்லுவேன்;'' என்றான்.

கணபதியின் நீண்ட பேச்சு அங்கு எவர்களையும் சிந்திக்கத் தூண்டியதாகத் தெரியவில்லை. மாறாக, ரமேஷ் கணபதியைப் பார்த்து சற்று கோபமாகவே கூறினான்:

''கணபதி, நீ ஒண்ணும் எங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டாம். நாங்க உன் கிட்டே இங்கே உபதேசம் வாங்கிக்க வரல்லே'', என்றான்.

கணபதியும் பதிலுக்கு, ''நானும், எதையும் உங்களுக்கு உபதேசம் பண்ணறதா எண்ணிச் சொல்லல்லே: அப்படியே பண்ணினாலும், அதெல்லாம், உங்க காதிலே ஏறாது என்கிறதும் எனக்குத் தெரியும். ஆனாலும், நண்பர்கள் என்கிற அளவில் என் மனதில் பட்டதைச் சொன்னேன்; நீங்கள் கேட்க மாட்டீர்கள்.

மூர்த்தி இந்தப் பதவியில் இருந்து ருசி கண்ட பூனையாகி விட்டான். அவனது செயலில், நடத்தையில், நம்பிக்கை இல்லாத மாணவர்கள்தான், இந்த முறை பாபுவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மூர்த்தியை நான் வெறுக்கவில்லை; ஆனாலும் மூர்த்தியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, வீணாக ஒரு கெட்ட காரியத்துக்கு விதை விதைக்க வேண்டாம் என்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

எழுச்சியுற்ற புதிய மாணவர் சகாப்தத்தின் பிரதிநிதியாகப் பாபு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான்; அவன்மீது அவதூறுச் சேற்றை வாரி இறைக்க எண்ணும் உங்கள் சதித் திட்டம் ஈடேறாது ரமேஷ்'' என்றான்.

''பார்ப்போமா கணபதி, இதை ஒரு சவாலாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் மனசு வைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை. எங்களிடம் ஆதாரம் இருக்கிறது.

பாபுவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாமல் ஓயமாட்டோம். இதற்காக நாங்கள் யாரை வேண்டுமானாலும் பார்த்து, எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யத் தயாராயிருக்கிறோம். ஹாஸ்டல் தகராறை கல்லூரி அளவில் கொண்டுபோய் ஸ்டிரைக் செய்வோம். நமது கல்லூரிக்கு ஆதரவாக அனைத்துக் கல்லூரிகளின் ஆதரவையும் திரட்ட எங்களால் முடியும். அது இந்த ஊருடன் நில்லாமல், மாவட்டத்திலுள்ள கல்லூரிகள் அனைத்துக்கும் பரவ வகை செய்வோம். பிறகு பொது மக்களின் ஆதரவையும், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளின் ஆதரவும் பெற்று போராடுவோம். பின், எங்கள் பிரச்னைக்குத் தீர்வு காணத் தலையிடாமல் இருக்க மந்திரிகளால் இயலாது. அப்போது மந்திரியிடம் மூர்த்தி எத்தனை மகஜர்களைச் சமர்ப்பிக்கப் போகிறான் என்பதை நீ பார்க்கத்தான் போகிறாய்.''

''எல்லாம் வீண் கனவு, ஒன்றும் நடக்காது. கலாட்டா, ஸ்டிரைக், என்றெல்லாம் நீங்கள் கனவு கண்டு கொண்டிருக்கிற காலம் மலை ஏறிப் போய்விட்டது. இனி அதெல்லாம் பலிக்காது. பொதுமக்கள் நம்மைப் புரிந்து கொண்டு விட்டார்கள். இன்று விழிப்புற்ற மாணவர் சமுதாயமும், தீயனவெல்லாம் மறந்து, அல்லது அவற்றிலிருந்து தெளிந்து, ஒரு புதிய முற்போக்குப் பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. பாபுவைப் போன்றவர்களே அதற்கு முன்னோடிகள், வழிகாட்டிகள்.

எந்த அரசியல், அல்லது தனிப்பட்ட மனிதர்களின் செல்வாக்கினாலும் இனி மாணவர்களை திசை திருப்பி இரை யாக்கிவிட முடியாது. கல்வி ஒன்றே அவர்கள் லட்சியமாக இருக்கும். உங்கள் கோஷ்டிப் பூசலும், தீய முயற்சிகளும் தோற்றுப் போவது திண்ணம்.

தங்களை இப்படி முகத்துக்கு நேரேயே தாக்கிப் பேசிய கணபதியின் பேச்சைக் கேட்டதும், மூர்த்தியின் முகம்

று. வார்த்தைகளும் கோபமாகவே வந்தன் ' கணபதி, எங்களிடம் உபதேசப் பிரசங்கமா செய்யறே? இதோ பார் கணபதி, நம்ம 'குரூப்'பிலே இருந்த சுந்தரத்தை உனக்கு நன்ருகத் தெரியும். அவனை நான் உயிருக்குயிராய் நேசித்தேன். ஆனால், அவனும் உன்னைப்போலவே தான் சதா பாபுவைப்பற்றி என் எதிரிலேயே புகழ்வான். நான் செய்கிற காரியங்களை எல்லாம் எதிர்த்து வந்தான் அவனுக்கு நான் சரியான புத்தி புகட்டி, என் கோஷ்டியிலிருந்து விரட்டினபோது, என் முகமூடியைக் கிழித்து, அவமானப்படுத்தாமல் விடப்போவதில்லை'' என்று அந்தக் கருங்காலி சவால்விட்டு விட்டுப் போனது உனக்குத் தெரியும்.

இன்று வரை அவனால் என்னை என்ன செய்ய முடிந்தது. உங்களைப் போன்ற இரண்டு மூன்று பேரை நம்பி நான் நிற்கவில்லை. நான் விரல் அசைத்தால் அதை உடனே நிறைவேற்ற, ஒத்துழைக்க எண்ணற்ற மாணவர்கள் பலம் என்னிடமிருக்கிறது. நான் இந்த காலேஜ் எலக்ஷனில் வென்ருலும் சரி, தோற்ருலும் சரி அவர்கள் என்றுமே என் பக்கம்தான். அவர்களுக்கு என்னிடமுள்ள அன்பும், விசுவாசமும் அத்தகையது.

ஆகவே நான் உனக்குச் சொல்லுவதும் இதுதான். நீ இனியும் இப்படியே பாபுவுக்கு சப்போர்ட்டாகப் பேசிக் கொண்டிருப்பதானுல் நீ அவன் கட்சியிலேயே சேர்ந்து விடு. 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனுக' இருக்க உன்னை நான் இனி அனுமதிக்கப் போவதில்லை. என்ன சொல்லுகிருய்?'' என்ருன் மூர்த்தி படபடப்புடன்.

''ஆல் ரைட்... உங்க இஷ்டம். நான் என்ன சொல்லப் போகிறேன். ஆனல் யார் கட்சியுமல்லாத என்னைப்பற்றி நீ கூறிய ஒன்றை மட்டும் நான் மறுத்தே ஆகவேண்டும். நான் பாபுவுக்கு சப்போர்ட்டாக அவன் பக்கம் பேசுகிறேன் என்ருல், அதை நான் இந்த நிமிஷம் வரை மறுக்கவில்லை

ஏனென்றால் அவன் பக்கம், நீதி இருக்கிறது, நேர்மை இருக்கிறது, நியாயம் இருக்கிறது. ஆகவே நான் அவனை ஆதரித்துத்தான் பேசுவேன். ஆனால், என்னைப் பார்த்துச் சொன்னீர்களே, 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்று, அதைத்தான் நான் உங்களுக்கு விளக்கியாக வேண்டும்.

இந்தக் கணபதி, பாலுக்குக் காவலாக மட்டுமே இருக்க விரும்புபவன்; என்னுடைய மனம் எப்போதாவது கெட்டுப் போய், பூனைக்குத் தோழனாக உங்களுடன் இருக்க ஆசைப் பட்டால், முழுக்க முழுக்க பூனைக்குத் தோழனாக இருப் பேனே தவிர--ஆனால், அப்போதே--பாலைக் காவல் காக்கிற தொழிலை விட்டுவிடுவேனே தவிர, உங்களைப்போல இரட்டை வேடம் போட்டு ஏமாற்ற எனக்குத் தெரியாது; அது என் விருப்பமுமல்ல; நான் வருகிறேன்,'' என்றான்.

கணபதி தன் மனதிலுள்ளதை யெல்லாம் கொட்டி விட்டுத் திரும்பும்போது ராஜுவும் ரமேஷும் ஏகோபித்த குரலில், ''நீ வரவேண்டாம் கணபதி, அங்கேயே இரு. புதன்கிழமை நடக்கப் போகிற விசாரணைக் கூட்டத்திலே, பாபு எப்படி 'சரண்டர்' ஆகி அவமானப்படப் போகிறான் என்று அவன் பக்கத்திலேயே நின்று கொண்டு பாரு, 'குட்பை' என்று கூறிய சொற்கள் அவன் செவிகளில் தெளிவாக விழுந்தது. ஆனால் கணபதி அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அந்த நீண்ட தென்னந் தோப்பை வேகமாகக் கடந்து சென்று கொண்டிருந்தான்.

# 4. நாய் வால்

'அறிவும் திறமையும் பெறுவது
மட்டுமல்ல கல்வியின் நோக்கம்.
பிறருடன் ஒத்துவாழ நம்மைப்
பக்குவப்படுத்துவதே அதன் முக்கிய நோக்கம்.'

-டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

கூலவாணர் நகர ஏழாவது கிராஸ் தெருவிலுள்ள ஸ்டாப் வந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்கிய கணபதி நேராக பாபுவின் வீட்டை நோக்கி நடந்தான்.

மாடிக்குச் சென்றபோது, பேசிக் கொண்டிருந்த பாபுவும், சேகரும் கணபதியைப் பார்த்துவிட்டு ஆர்வத்துடன் வரவேற்றனர்.

''கணபதி வா...வா, நானும் பாபுவும் இப்ப உன்னைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்,'' என்றான் சேகர்.

''ஆமாம் கணபதி, பேசிய வாய் மூடவில்லை, நீ வந்து விட்டாய்.'' என்று பாபுவும் ஆமோதித்தான்.

''அப்படியா? என்ன விஷயம் பாபு?' என்று கணபதி ஆவலோடு கேட்டான்.

''ஒன்றுமில்லை, முதலியார் தென்னந் தோப்புக்குள் நீயும், மூர்த்தியும், ராஜுவும், ரமேஷும், போனதையும், அங்கு ஏதோ, காரசாரமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்ததாகவும், நம்ம சுபாஷ் வந்து சொல்லிவிட்டுப் போனான்,'' என்றான் பாபு.

' ஓ! அதுக்குள்ளற உனக்கு நியூஸ் வந்துட்டுதா, சபாஷ் அதிருக்கட்டும், உனக்கு உடம்பு சரியில்லே, ஜுரம்னு லீவ் போட்டிருந்தியே, இப்போ எப்படி இருக்கு?''

''ஹ ஹ ஹா....ஜுரமாவது, கிரமாவது. ஒரு முக்கிய மான விஷயத்தை டிரேஸ் பண்ணத்தான் அப்படி அவசரமா ஒரு லீவ் போட்டேன் கணபதி'' என்றான் பாபு.

அதென்ன விஷயம் பாபு?'' என்றான் கணபதி ஆர்வத் துடன்.

''ஊ ஹூம், அது பெரிய 'சஸ்பென்ஸ்' அதை இப்போ அவுட் ஆக்கக் கூடாது.''

''எனக்குக் கூடத் தெரியக் கூடாதா பாபு?'' என்றான் கணபதி.

''நீ இல்லே, சேகர் இல்லே இன்னும் நம் கோஷ்டியிலே இருக்கிறவங்க மட்டுமில்லே, மூர்த்தி கோஷ்டிக்குக் கூடத் தெரியாது, தெரிந்து கொள்ள முடியாது; தெரிந்து கொள் ளக்கூடாது. உரிய சமயத்திலே அதை நான் தெரிவிக்கிற போது, நீங்க, மூர்த்தி கோஷ்டி. ஏன் நம் காலேஜே கூட அசந்து போயிடும்.''

''சரி பாபு, விஷயத்தை சொல்லமாட்டேங்கறே; வீணா ஆர்வத்தை மட்டும் ஏன் தூண்டிவிடறே? அது போகட்டும். நம்ம ஹாஸ்டல் ரகளை எப்படியெல்லாம் கிளைவிட்டுப் படர்ந் திருக்குன்னு தெரியுமா?''

''யாரைக் கேக்கறே கணபதி என்னையா, இல்லே, சேகரையா?''

''ரெண்டு பேரையுந்தான் கேக்கறேன்.',

உடனே பாபு, ''எனக்கு நீ இப்போச் சொல்லப்போகிற விஷயம் தெரியும். அதை நான் இன்னும் சேகர் கிட்டேக் கூடச் சொல்லல்லே. ஹாஸ்டல்லேருந்து நான் எவர்சில்வர்

சாமான்களைத் திருடிக் கொண்டு போனது பற்றித்தானே?'' என்றான்.

இதைக் கேட்டதும் சேகர் அசந்து போய்விட்டான். ''என்ன பாபு உளரறே? ஹாஸ்டல்லேருந்து நீ திருடினியா?'' என்றான் எல்லைமீறிய ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும்.

''ஆமாம் சேகர் ஹாஸ்டலில் அவர்கள் நடந்து கொண்ட ஒழுங்கீனத்தைப் பற்றி விசாரிக்க முதல்வர் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் அல்லவா? என்மேலுள்ள அந்தக் கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு ஒரு சதியை உருவாக்கி யிருக்கிறான் மூர்த்தி. ஐம்பது எவர்சில்வர் தட்டுக்களையும், நூறு ஸ்பூன்களையும் நான் ஹாஸ்டலிலிருந்து திருடியதற்கு முதலில் எனக்கு விசாரணை நடத்திவிட்டு, பிறகு தன் கோஷ்டியினரின் குற்றங்களை விசாரிக்குமாறு முதல்வருக்கு மூர்த்தி எழுதியிருக்கிறான். 'வேலியே பயிரை மேய்ந்து விட்டது' என்று.

''என்ன பாபு இது?, புதுக் குழப்பமாக இருக்கிறது? என்றால் நம்பவே முடியவில்லையே! இதெல்லாம் முன் ஏற்பாடா? உனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் சேகர்.

''எப்படியோ தெரியும். என்மேல் இப்படியொரு திருட்டுப் பட்டத்தைச் சுமத்தி எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்திப் பழிக்குப் பழி வாங்க அவன் போட்ட திட்டமிது.''

''சே! இந்த மூர்த்தி கும்பலாலே நம்ம கலைமகள் கல்லூரிக்கே கெட்ட பெயர் வந்து விடும் போலிருக்கே.''

''காலேஜுக்கு எந்தப் பேர் வந்தா அவங்களுக்கு என்ன சேகர்? 'தான் கற்ற கல்லூரியில் நற்பெயரைச் சம்பாதித்துக் கொள்ள இயலாத மாணவனால், தான் பிறந்த நாட்டிற்கும் பெருமை தேடித் தர இயலாது,' என்று எங்கள் லெக்சரர் அடிக்கடி சொல்லுவார்.

எலக்ஷனில், தன்னுேடு போட்டி போடும் பாபு ஜெயிக்கக் கூடாதுன்னு மூர்த்தி எவ்வளவு 'டிரை' பண்ணினுன். எத்தனை குறுக்கு வழிகளில் எல்லாம் முயற்சி செய்தான். அத்தனையும் முடியாமல் தோற்றுப் போனுன். அந்தக் கோபம் இன்னும் அவனுக்கு அடங்கல்லே.'

''அதுக்காக இப்படியெல்லாமா செய்யறது கணபதி?''

''பின்னே என்ன செய்யறது? இதுக்கு முன்னே அவன் லீடரா இருந்தப்போ பழைய வார்டனைக் கைக்குள் போட்டுக்கொண்டு, திறையச் செலவுக்கு கமிஷன் அடிச்சான் மூர்த்தி. இப்போ அவரும் இல்லே; அந்தப் போஸ்ட்டும் அவனுக்குக் கிடைக்கல்லே. பாபு மேலே ஆத்திரப் படருன்.''

''இதிலே ஆத்திரப்பட என்ன இருக்கிறது கணபதி. தேர்தல்லே, வெற்றியும், தோல்வியும் சகஜம். தோற்றுப் போய் விட்டதுக்காக மனம் போனபடி எதுவேணும்னுலும் செய்யறதா?''

''இதையேதான் சேகர் நானும், மூர்த்தியோட முகத்துக்கு நேரேயே தென்னந் தோப்பிலே கேட்டேன். உடனே அவங்களுக்குப் பிரமாதக் கோபம் வந்து விட்டது. நான் ஒரு கட்சியிலேயும் இல்லேன்னு. வெளவால் மாதிரி நீ இங்கேயும் அங்கேயும் பழகறதை நாங்கள் வெறுக்கிறேம். என்னை, என் லட்சியத்தை, என் கொள்கைகளைப் பிடிந்திந்தால், என்னுேடு மட்டும் இரு; இல்லாவிட்டால், பாபுவின் பக்கமே போய்விடு'' என்று குட்டை கூறிவிட்டான் நானும், சரி என்று திரும்பிப் பார்க்காமலே வந்து விட்டேன் என்றுன் கணபதி.

''ஆமாம், இந்த மூர்த்திக்கு, ஒரு லட்சியம், கொள்கைன்னு வேறே இருக்காக்கும்? சரியான சுயநலக்காரன் தன் எண்ணப்படி எதைச் செய்யவும் தயங்கமாட்டான்.

பணக்கார ராஜுவையும், ரமேஷையும் கைக்குள் போட்டுக் கொண்டு, எவ்வளவு ஒற்றுமையாயிருந்த நம் மாணவர் யூனியனை இரண்டாகப் பிளவு பண்ணி விட்டு என்ன ஆட்டம் போடுகிறான்! எனக்கென்னமோ, உள்ளூர பய மாகவே இருக்கிறது'' என்றான் சேகர்.

''பயமா?'' ஆச்சர்யத்துடன் கேட்டான் கணபதி.

''ஆமாம் கணபதி, ஏற்கனவே சுந்தரம் அவனை விட்டு வந்துவிட்டான். இப்போது நீ வேறே அவனுக்கு விரோதி ஆயிட்டே. பாபு மேலே இருக்கிற பகையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இந்தக் கோபத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு, மாணவர்கள் மனதை யெல்லாம் கலைத்து, காலேஜ் லெவல்லே ஏதாவது ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணிவிடக் கூடாதேன்னு தான் பார்க்கிறேன்.

''நீ ஏன் அப்படி நினைக்கறே சேகர் என்றான் கணபதி.''

உடனே சேகர், ''காலேஜ் மாணவர் யூனியன் பிரசி டெண்ட் வாசு, மூர்த்தியோட டியர் ஃப்ரண்ட் ஆச்சே. அவன் ஆதரவோடு இந்த எல்லாப் பிரச்னைகளையும் பெரிசு படுத்தி, பிரின்ஸ்பாலுக்கு எதிரா ஒரு மாணவர் மோதலை உருவாக்கி விடுவானோன்னு கவலைப்படறேன்'' என்றான்.

அத்தனை நேரம் மௌனமாயிருந்த பாபு சட்டென்று ''அந்தக் காலம் மலை ஏறிப்போச்சு சேகர். நீ கவலைப்படு கிற மாதிரி எதுவும் நடக்காது. அத்துமீறின தகாத காரி யங்களில் ஈடுபட்டு, தங்களுடைய எதிர்கால வாழ்க்கையை மாணவர்கள் பாழாக்கிக் கொள்ள மாட்டார்கள். மாண வர்கள், நல்லது கெட்டது பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

அவர்களை இனியாரும், தங்கள் இஷ்டம் போல், பக டைக் காயாக உருட்டி விளையாட முடியாது.

நமது அரசாங்கம் மாணவர்களுடைய நலனிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு திட்டம் தீட்டி வருகிறது. ஒவ்வொரு மாணவனும், கல்வியில் தீவிர கவனம் செலுத்திப் படித்து, கல்லூரியில் சிறந்த மாணவனாகவும், நாட்டிற்குப் பயனுள்ள நல்ல பிரஜையாகவும் உருவாக வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

அதற்காகவே, மாணவர்களுக்கு மலிவு விலையில் புத்தகங்கள், ஹாஸ்டலுக்கு நியாயமான விலையில் தரமான உணவுப் பொருட்கள், ரேடியோ, டெலிவிஷன் வசதி இது போன்று மாணவர்களுடைய நன்மைக்காக அரசு அநேக ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

மாணவர்களுக்குத் தங்கள் கல்வியைத் தவிர வேறு சிந்தனைகளுக்கே இனி இடம் இல்லை.

நாடு முன்னேற்றப் பாதையை நோக்கி விரைந்து செல்வதில்தான் நமது முன்னேற்றமும் இருக்கிறது. இதற்குக் கடின உழைப்பையும், காலத்தை வீணாக்காத விடா முயற்சியையும் தவிர வேறு வழியில்லை என்பதை இன்றைய மாணவர் சமுதாயம் உணர்ந்துவிட்டது'' என்று கூறினான்.

பாபுவின் உணர்ச்சி வசப்பட்ட, நீண்ட பேச்சைக் கேட்டு, கணபதியும் சேகரும் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

''சபாஷ் பாபு. உன்னுடைய இன்றையப் பேச்சு, நம்முடைய மாணவர் மீட்டிங் ஹாலில் நடந்திருக்க வேண்டும். அத்தனை பிரமாதம். ஆனால் பாபு, நீ சொல்லுகிறபடி, எண்ணுகிறபடி, அப்படிப் பூரணமாக மாணவர்கள் இன்னும் மாறிவிடவில்லை. அதற்கான ஆரம்பம்தான் ஆகியிருக்கிறது'' என்றான் சேகர்.

உடனே பாபு, ''இருக்கட்டுமே, ஒரு சிறந்த காரியத்துக்கான, அல்லது முன்னேற்றத்திற்கான மனமாற்ற ஆரம்பமே ஒரு நல்ல அறிகுறி தானே? ஆனால் நீ எண்ணிப் பேசுவது

எனக்குப் புரிகிறது. எங்காவது அத்தி பூத்தாற்போல், இங்கும் அங்கும், மூர்த்தியைப் போன்றவர்கள் இருக்கத் தான் செய்வார்கள்.

ஆனுல், அவர்களும் என்ருவது ஒருநாள், தங்களை உணர்ந்து திருந்தத்தான் போகிருர்கள். அது வரை, அன்பு வழியில், சகிப்புத் தன்மையோடு, விட்டுக் கொடுத்து மன்னிக்கும் மனப்பான்மையோடுதான் அவர்களை அணுக வேண்டும்'' என்ருன்.

அதற்கு உடனே சேகர் மிகவும் அதிருப்தி தோய்ந்த குரலில் ''பாபு, யார் எத்தனை முயன்ருலும், நாய் வாலை நிமிர்த்துவது போன்றதுதான் மூர்த்தியைப் போன்றவர் களைத் திருத்துவதும்,'' என்ருன்.

பாபு சேகரின் முதுகை லேசாகத் தட்டி, சிரித்தபடி கூறினுன்: ''நான் உன்னிடம் நாய் வாலை நிமிர்த்த முடியும் என்ரு சவால் விட்டேன் சேகர்? எந்த மனித மனத்தையும் கடவுள் நாய் வாலாகப் படைக்கவில்லை. வேண்டுமாஞல் மெழுகைப் போன்ற இளகிய மனமற்று இரும்பைப்போன்ற கடின நெஞ்சத்தவர்களாக இருக்கலாம். அதற்காக அவர் களை வெறுத்து புறக்கணிப்பதுதான், அவர்களை மாற்ற முடி யாமல் செய்கிற காரியம்.

'அன்பு' என்னும் அற்புத அமிலத்தில், கரைந்து உரு காத மனமே இல்லை. பகைக்கு மாற்று—அல்லது பரிகாரம் பகையல்ல; அன்பே அருமருந்து.

மூர்த்தி என்னை எத்தனை தூற்றிஞலும், நான் அவனிடம் வெறுப்படையவில்லை. அவன் தன்னை உணர்ந்து திருந்து வான் என்கிற நம்பிக்கையை இழக்கவில்லை; அதற்கான முயற்சியையும் விடமாட்டேன்.'' என்ருன்.

—''எல்லா சக்தியும் உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் எதையும் சாதிக்கலாம். எல்லாவற்றையும் சாதிக்கலாம்.

நம்புங்கள். 'நாம் பலவீனர்கள் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள்''—என்று கூறிய விவேகானந்தரின் வாக்கை நான் முழுமையாக நம்புகிறேன் என்றான் பாபு.

அதற்கு சேகர், ''உன் முயற்சியும், அன்பும், நம்பிக்கையும் வென்றால் எங்களுக்கும் மகிழ்ச்சிதான் பாபு; ஆனால் மூர்த்தி உனக்குப் படுகுழி அல்லவா தோண்டி வைத்திருக்கிறான். அதிலிருந்து நீ மீண்டல்லவா அவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்,'' என்றான்.

''பிறருக்குக் குழிபறிக்கிறவர்கள் எல்லாம் தாங்கள் தோண்டிய குழியில் தாங்களே விழுவதுதான் வழக்கம். அப்படி விழுந்தவனை தூக்கிவிட எதிரிக்கு மனமிருந்தால் போதும், பிறகு குழிபறிப்பவனே இருக்க மாட்டான் என்பது என் நம்பிக்கை. என்ன சொல்கிறீர்கள்?''

''எங்களைக் கேட்டால், உன் நம்பிக்கைக்கு எங்கள் அனுதாபங்களைத்தான் சொல்லுவோம் பாபு. பொல்லாத மூர்த்தியையும் நினைத்து, அவன் உன்மேல் சுமத்தியிருக்கிறதிருட்டுக் குற்றத்தையும் நினைத்து, பிரின்சிபால் நடத்தப் போகிற புதன்கிழமை விசாரணையின் கடுமையையும் நினைத்தால் எனக்கு வயிற்றைக் கலக்குகிறது,'' என்றான் கணபதி.

சேகரும் அதற்கு, ''உனக்கு மட்டும்தானா கலக்குகிறது கணபதி? அந்த அயோக்கியராஸ்கல் மூர்த்திக்கு எவ்வளவு தைரியமிருந்தால் இப்படித் துணிந்து ஒரு திருட்டுப்பழியை பாபு மீது சுமத்தியிருப்பான்? அவனைச்சொல்லிக் குற்றமில்லை கணபதி; அவனுக்கு இன்னும் அனுதாபம் காட்டுகிற பாபு மேல்தான் எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது. பெரிய மகாத்மா இவரு,'' என்று கேலியாகக் கூறினான்.

உடனே கணபதியும், வேடிக்கையாக, ''ஏன்டாசேகர், ''பாபு'', என்றாலும் ''மகாத்மா'' என்றாலும் ஒன்றுதான். இது தெரியாதா உனக்கு?'' என்றான்.

இதைக்கேட்டு பாபுவும் அவர்களோடு சேர்ந்து சிரித்தான்.

# 5. ரமேஷ் வீட்டில் ரகசியக் கூட்டம்

''எது அநீதி?—கோபமோ, அச்சமோ, இன்பமோ, துன்பமோ, பொறுமைகளோ, ஆசைகளோ நம்மை ஆட்டிவைக்கும்போது நாம் செய்யும் செயல்களுக்குப் பெயர்தான் அநீதி.
—பிளேடோ

ரமேஷின் வீட்டு மாடியிலுள்ள விசாலமான ஹாலில் அவனது கல்லூரி நண்பர்கள் எல்லாம் வந்து கூடி இருந்தார்கள். ரமேஷின் பெற்றோர்கள், ஒரு திருமணத்திற்காக ஊருக்குப் போயிருந்ததால் வீடு காலியாக இருந்தது. பாட்டி மட்டும்தான் துணைக்கு இருந்தாள். அதனாலேயே, அந்த அவசர ஆலோசனைக் கூட்டத்தைத் தன் வீட்டு மாடியில் வைத்துக் கொள்ளலாம் என்று மூர்த்தியிடம் கூறியிருந்தான்.

மூர்த்திக்கும் அதுவே சரி என்று பட்டது. அவனது அழைப்பிற்கிணங்கி அவன் கோஷ்டியினர் எல்லாம் திரண்டு வந்து விட்டனர். அந்த விசாலமான மாடி ஹால், மாணவர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது

புதன்கிழமை விசாரணையின்போது பாபுவின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை சமர்ப்பிக்க பெருமளவு மாணவர்களைத் தன் பக்கம் திருப்பியிருந்தான் மூர்த்தி. அவனது பேச்சில் மயங்கிய, பாபுவின் கட்சியைச் சேர்ந்த சில மாணவர்கள் கூட அவன் பக்கம் சேர்ந்துவிட்டனர்.

இதையெல்லாம் வரவேற்று, இன்னும் பல முக்கியமான விஷயங்களைக் கூறப் போவதாக மூர்த்தி அறிவித்திருந்தான். ஆகவே அவன் கூறப் போவதைக் கேட்கப் போகும் ஆர்வம் மாணவர்களின் முகத்தில் பொங்கிவழிந்து கொண்டிருந்தது.

ஹாலின் மத்தியில், ஒரு தலைவருக்கு உரிய மரியாதையுடன் போடப்பட்டிருக்கும் மேஜையின் முன் மூர்த்தி அமர்ந்திருந்தான்.

அமர்ந்திருந்த நாற்காலியைவிட்டு பேசுவதற்காக மூர்த்தி எழுந்து நின்றபோது, மாணவர்கள் கைதட்டி அவனை வரவேற்றார்கள். அந்தக் கரவொலிக்கு நன்றி தெரிவித்து விட்டு மூர்த்தி தன் பேச்சைத் துவக்கினான்.

''என் அன்பார்ந்த தோழர்களே, மற்றும் நம் கல்லூரி யில், இதே நேரத்தில் பாபு கூட்டியிருக்கும் கூட்டத்தைப் புறக்கணித்து, மாற்றுக் கட்சியிலிருந்து மனம் மாறி இன்று எங்களுடன் சேர்ந்திருக்கும் புதிய நண்பர்களே, உங்கள் எல்லோருக்கும் முதற் கண் என் நன்றியையும், அன்பு கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நம்முடைய ஹாஸ்டல் மாணவ நண்பர்கள், ஒரு நெருக்கடியான பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டிய நிர்ப் பந்தத்திற்கு இலக்காகி இருக்கிறார்கள்.

இங்கு கூடியிருப்போர் எண்ணிக்கையில் குறைவுதான். ஆயினும், கண்ணியத்தில், ஆற்றலில் மிக்கவர்களாகக் கூடி யிருக்கிறோம். காடு நிறையக் குள்ள நரிகளும், ஓநாய்களும் கூடி இருந்தாலும், அவற்றை விரட்டியடிக்க ஒன்றிரண்டு சிங்கங்களே போதும் என்பது போல் கூடியிருக்கிறோம். நமது செகரட்டரி பாபுவின் உண்மைச் சொரூபத்தை வெளிப் படுத்தப் போகும் சிங்கங்களாக இங்கு நாம் கூடியிருக்கி றோம்.''

மாணவர்கள் கைதட்டி அவன் பேச்சை ரசித்தனர். அந்த ஓசை அடங்கு முன் மூர்த்தி பேச்சைத் தொடர்ந் தான்.

''நண்பர்களே, வளர்த்த கடா மார்பில் பாய்வதே போல், நம்முடைய ஆதரவான ஓட்டுக்களைப்பெற்று செகரட் டரி பதவிக்கு வந்த பாபுவுக்கு நம்மை இலட்சியம் செய்கிற அளவிற்கு தலைக்கனம் வந்து விட்டது. ஏற்றிவிட்ட ஏணியை எட்ட உதைக்கும் நன்றி கெட்ட பாபுவின் ஆணவம், இன்று ஹாஸ்டலில் கொடி கட்டிப் பறக்கிறது. ஆணவக்

[வீ]ரர்கள் அழிவைச் சந்தித்ததைத் தான் சரித்திரம் நமக்குப் புகட்டியிருக்கிறது. ஆகவே, பாபுவின் ஆணவமும் அழியப் போவது திண்ணம்.

ஹாஸ்டல் நிர்வாக ஊழல், உணவின் தரம் தரை மட்டத்திற்கு வந்து விட்ட தெல்லாம் நாம் அனைவரும் அறிந்ததே. அதைப் பற்றிப் பலமுறை கூறியும் செகரட்டரியோ, வார்டனோ, கவலைப்படுவதாகக் காணோம்.

ஹாஸ்டலுக்கு அரசு அளிக்கும் தரமான உணவுப் பொருட்கள் நமக்கு எட்டினால் மட்டும் போதுமா? அது நம் வாய்க்கு எட்டுவதில்லையே!

வாங்குகிற உயர் உணவுப் பொருட்களில் பாதிக்குமேல், ஹாஸ்டலை விட்டு அவை போய்ச் சேர வேண்டிய இடங்களுக்குப் போய் விடுகின்றன. மீதிப் பாதி கலப்படமாகி வழங்கப் படுகிறது.

கிலோ நூறு ரூபாய் கொடுத்து பாதாம் ஹல்வாவிற்கு என்று உயர்ந்த பாதாம் பருப்பு வாங்குகிறோம். ஆனால், [அ]ன்று நாம் சாப்பிட்டுக் கொண்டிருப்பதெல்லாம், முந்திரிப் [ப]ருப்பு ஹல்வாவும், மனிலாக் கொட்டை ஹல்வாவும்தான். பாதம் எஸன்ஸ்ஸோடு நமக்கு அது பாதாம் ஹல்வாவாக வழங்கப்படுகிறது.

அன்று சுப்பையா கூறியது போல், 'அள்ளிப் போடுவதைப் பேசாமல் தின்று விட்டுப் போவதைத் தவிர; இது அசல் பாதாம் ஹல்வா அல்ல, பேசவே உரிமை இல்லாத போது, நம்மால் அதை கிண்டி இன்ஸ்டிடியூட்டிற்கா அனுப்பி ஆராய்ச்சி செய்ய முடியும்?

போகட்டும், நமது குறைகளை, கோரிக்கைகளை ஏற்க வேண்டாம், நடவடிக்கைகள் கூட எடுக்க வேண்டாம்; நம்மை அவமதிக்காமலாவது இருக்கலாமல்லவா?

நம்முடைய பணத்தில் ஊழியம் பார்க்கும் சர்வர் [சு]ப்பையா நம்மைக் கேலி செய்கிறான். அவனைத் தட்டிக்

கேட்டதற்கு, நம்மையே மட்டம் தட்டுவதுபோல் முதல்வர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். என்ன தெரியுமா? சர்வர் சுப்பையாவிடம் நாம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம். இதைவிட நம்மை அவமானப்படுத்தும் ஆணை இருக்க முடியுமா?

மூர்த்தியின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்போல் பல குரல்களில் 'முடியாது... முடியாது...' என்று கோஷமிட்டனர்.

மூர்த்தி, மேஜையைத் தட்டி அமைதியை நிலை நாட்டினான்.

சுப்பையாவின் கூற்று—துடுக்கான பேச்சு நமக்கு ஆத்திர மூட்டிற்று. ஆத்திரத்தினால், சில எதிர்பாராத விளைவுகள் ஏற்படுவது சகஜம். இதற்கு நியாயமான விசாரணை ஏதுமின்றி செகரட்டரி, வார்டன், சுப்பையா, இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு முதல்வர் பிறப்பித்த உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து தன் மானத்தை இழப்பதா? அநீதிக்கு அடி பணிவதா?'' என்று எல்லோரையும் பார்த்துக் கேட்டான் மூர்த்தி.

''ஒருக்காலும் கூடாது; ஒருக்காலும் கூடாது'' என்று மாணவர்கள் பதில் குரல் எழுப்பினர்.

உடனே மூர்த்தி, ''மாணவர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டிய செகரட்டரி—ஆதரவு காட்டவேண்டிய செகரட்டரி—அதிகாரத்திற்கு அடிமையாகி விட்டார். இப்படிப் பட்ட பாபுவால் இனி நமக்கு என்ன நன்மை செய்து விட முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள்.'' என்றான்.

''ஷேம்...ஷேம்...கருங்காலி பாபுவே, பதவியை ராஜினாமாச் செய்; அல்லது உன்னைச் செய்யவைப்போம்,'' என்று ஆவேசமாகச் சவால்விட்ட சகாக்களை மூர்த்தி அமைதிப் படுத்தினான்.

''நண்பர்களே, நாம் இங்கு அவசரமாகக் கூடியதின் நோக்கமே அதுதான், நாம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நமது செகரட்டரியினால் தொடர்ந்து தன் பதவியை

வகிக்கமுடியாது. தானாகத் தன் பதவியை ராஜினாமாச்செய்ய வேண்டிய அளவுக்கு பாபு ஒரு திருட்டுக்குற்றத்தில் வசமாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறான்; அதற்கான புகாரையும் முதல்வரிடம் கொடுத்தாயிற்று என்பதையும் இந்த நேரத்தில் உங்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களில் பலருக்கு 'பாபுவின் மீது திருட்டுக் குற்றமா?' என்று ஆச்சர்யமாக இருக்கலாம். ஆனால் நான் அபாண்டமாக யார் மீதும் எந்தக் குற்றச் சாட்டுக்களையும் ஆதாரமில்லாமல் சுமத்துபவனல்ல என்பது உங்களுக்குத் தெரியும்.

நம் ஹாஸ்டல் ஸ்டோரிலிருந்து டீபார்ட்டிக்காக வாங்கி வைத்திருக்கும் எவர்சில்வர் செட்டிலிருந்து ஐம்பது பிளேட்டுக்களையும், நூறு ஸ்பூன்களையும் பாபு கடத்திக் கொண்டு போனதைக் கண்ணாரக் கண்ட அவன் கட்சியைச் சேர்ந்த ஒருவன் என்னிடம் வந்து சொல்லித்தான் எனக்குத் தெரியும். பாபு அவற்றை எங்கே பதுக்கி வைத்திருக்கிறான் என்கிற ரகசியத்தையும் அந்த நண்பன் என்னிடம் கூறியிருக்கிறான். அவனது பெயரை நான் இச்சந்தர்ப்பத்தில் கூறுவது முறையாகாது. நாளை, நான் முதல்வருடனும் அந்த நண்பனுடனும் பாபுவின் திருட்டை வெளிப்படுத்தும்போது உங்களுக்குப் புரியும். இப்படிப்பட்ட பாபுவா நமக்கு செகரட்டரியாக இருப்பது?'' என்று கேட்டான் மூர்த்தி.

''ஷேம்...ஷேம்...பாபுவின் பகல் வேஷத்தைக் கலைத்து அவனிடம் அன்பு கொண்டு அவனை நம்பிக் கொண்டிருக்கும் நம் தோழர்களைக் காப்பாற்றியாக வேண்டும்'' என்று மாணவர்கள் கோஷமிட்டனர்.

உடனே மூர்த்தி, ''நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். நமது முதல்வர் இந்தக் கேவலமான திருட்டுக் குற்றத்தைப்பற்றி விசாரணை நடத்தி பாபுவுக்கு உரிய தண்டனை வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன். திருடர்கள் இருக்க வேண்டிய இடம் எது என்றும் கல்லூரி அல்ல என்றும்

உங்கள் எல்லோருக்கும் தெரியும்? என்று மூர்த்தி கூறி முடிக்கு முன்னர், கூடியிருந்த மூர்த்தி கோஷ்டியினர், ''எங்களுக்குத் தெரியும், மாணவர்களின் பொதுச் சொத்தைத் திருடிய பாபு இருக்க வேண்டிய இடம் சிறைதான்'' என்று உணர்ச்சியோடு கூச்சலிட்டனர்.

மூர்த்தி அவர்களை அமைதிப் படுத்தி, ''நண்பர்களே, பாபுவைப் பற்றிய செய்திகளைக் கேட்டு நீங்கள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு இருப்பதை உணர்கிறேன். உணர்ச்சிகளைக் காட்டும் நேரம் இப்போது இல்லை ஆனால் நான் 'இப்போது இல்லை' என்று தான் உங்களுக்குக் கூறினேனே தவிர என்றுமே, எப்போதுமே உணர்ச்சியற்றிருங்கள் என நான் உங்களுக்கு உபதேசிக்கவில்லை. பாபுவின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் நேரத்தில் அவன் ராஜினமாச் செய்ய வேண்டும் என்று கூறும் நேரத்தில் இந்த உணர்ச்சி வெள்ளம் பொங்கி வழியட்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.'' என்று கூறி மூர்த்தி தன் ஆசனத்தில் அமர்ந்து விட்டான்.

உடனே அருகில் இருந்த ரமேஷ் பேச எழுந்து மேஜையின் அருகில் வந்து நின்று கொண்டான், பணக்கார வீட்டுப் பிள்ளையான அவனுக்கு மூர்த்தியிடம் அளவு கடந்த அன்பு. அதைப் பயன் படுத்திக்கொண்டு மூர்த்தி அவனையும்தன்னைப் போலவே நன்கு தயார் படுத்திவைத்திருந்தான். ஆகவே அவனுடைய பேச்சும் கிட்டத்தட்ட மூர்த்தியினுடைய பாணியிலேயே இருந்தது.

''அன்பார்ந்த என் இனிய நண்பர்களே தலைவர் மூர்த்தியினுடைய பேச்சைக் கேட்டு, உற்சாகத்தோடு இருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பேச்சு உங்கள் உற்சாகத்தைக் குறைத்து விடக்கூடாதே என்கிற அச்சத்துடனேயே பேசத் தயங்கினாலும், வந்தவர்களை வரவேற்று, நன்றி கூற வேண்டிய கடமைக்காகவே இரண்டொரு வார்த்தைகள் கூறுகிறேன்.

மாணவர்கள் நலனின் அதிக அக்கரையும், ஆர்வமும் கொண்டுள்ள நம் அருமை நண்பர் மூர்த்தியைப் பற்றி நான் உங்களுக்குப் புதிதாய் எதுவும் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை என்பதை நான் அறிவேன். அத்தகைய திறமைசாலியான மூர்த்தி இந்த ஆண்டு அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பாபுவிடம் அதிலும் மிகக் குறைவான வோட்டு எண்ணிக்கை வித்தியாசத்தில் —தோற்றுப் போனார். ஏன்?

இங்குதான் சிந்திக்க வேண்டும்? வோட்டுப் போட்டதில் அவற்றை எண்ணியதில் ஏற்பட்ட தில்லு முல்லுகள்; பாபு வின் தாராளப் பணப்புழக்கம் ஆகியவைதான் மூர்த்தியின் தோல்விக்குக் காரணம் என்று நாம் கரடியாகக் கத்தினோம்; காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. மறு தேர்தல் நடத்தும் படி வேண்டினோம். அதற்கு மறுபதிலே வரவில்லை. ஆனால் பாபுவுக்கு வெற்றியைத் தேடித்தந்த பலர், இன்று மனம் மாறி இங்கு வந்திருக்கிறார்கள் என்றால் ஏன் வந்திருக்கிறார் கள்?'' என்று ரமேஷ் கூறிக் கொண்டிருக்கும்போதே, கூட்டத்திலிருந்த பலர், ஒகோபித்த குரலில்,'' மூர்த்தியின் சேவை எங்களுக்குத் தேவை.'' என்று கூறினர்.

உடனே ரமேஷ் அவர்களை நோக்கி, ''மிக்க நன்றி, நண்பர்களே, உங்கள் மூர்த்தி மீண்டும் வெற்றி பெறப் போவது உறுதி; அது வரை நாம் ஓயப் போவதில்லை. இது ஒரு சாதாரணப் பதவிச்சண்டையல்ல; தன் மானப்பிரச்னை. அதனாலேயே இங்கு மான முள்ளவர்கள் எல்லாம் கூடிவந் திருக்கிறார்கள்.

இறுதியாக உங்களிடம் ஒரு விஷயத்தைக் கூறிவிட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், நம்மிடம் அன்போ, அக்கரையோ இல்லாதவர்கள் பாபுவை ஆதரிக்கும் சுந்தரம், கணபதி, போன்ற ஐந்தாம் படையினர்; அந்தத் திருட்டுக் கும்பலைச் சேர்ந்த இன்னும் பலர் இங்கு நடப்பதை உளவ றிந்து செல்ல வந்திருக்கிறார்கள்.

அழையா விட்டாலும், வலியவந்த விருந்தினரை வர வேற்பது நமது தமிழ்ப்பண்பு. அவர்களையும் வரவேற்றுநன்றி கூறி விடை பெறுகிறேன். மாணவ நண்பர்களுக்கெல்லாம் நினைவிருக்கட்டும். புதன்கிழமை நம் கல்லூரி சரித்திரத்தில் ஒரு புனித நாள். புல்லுருவிகளின் விழி பிதுங்கும் நாள். தவ றாமல் மாணவ நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்'' என்று கூறி ரமேஷ் தன் பேச்சை நிறுத்தினான்.

ஒரு நல்ல திரைப்படத்தை டெலிவிஷனில் பார்த்து விட்டுத் திரும்பும் கூட்டம் போல் ரமேஷின் பங்களாவி லிருந்து மாணவர்கள் கூச்சலும் கும்மாளமுமாகப் புறப் பட்டுச் சென்று கொண்டிருந்தனர்.

# 6 பாபுவின் பதவித் துறவு

'தன்னை ஒதுக்கும் தியாகம்—இதுவே
இறைவன் மனிதனுக்கு அருளியுள்ள
தலைசிறந்த ஞானமாகும்.

—கார்லைல்.

ரமேஷின் வீட்டில் மூர்த்தியின் கூட்டம் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில், கல்லூரியிலும் வார்டன் பிரகாஷ் தலைமையில் பாபுவின் மீட்டிங் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அவன் தன்னுடைய முக்கியமான சில கருத்துக்களை மாணவர்கள் மத்தியில் தெரிவிக்கவே அவ்வளவு அவசர மாக அன்றையக் கூட்டத்தைக் கூட்டியிருந்தான். பாபு வின் அழைப்பிற்கிணங்கி காலேஜ் திரண்டு வந்தது போல் ஏராளமான நண்பர்கள் கலந்து கொண்டிருந்தனர். ஆயி னும் அவர்கள் எவ்வித ஆரவாரமோ, அவசரமோ காட்டா மல் அமைதியாகவே அமர்ந்திருந்தனர்.

ஒவ்வொருவர் முகத்திலும், 'பாபுவின் இந்த அவசரக் கூட்டம் எதற்கு?' என்கிற கேள்விக் குறியே முளைத்து நின்றது. சமீபத்தில் ஹாஸ்டல் ரகளை; அதனால் மாணவர்களிடையே எழுந்த மனக்கசப்பு; பாபுவுக்கும் மூர்த்திக்குமிடையே சிறு கீறலாக இருந்த பிளவு, இப்போது பெரிய இடைவெளியோடு பல பிரச்னைகளுக்கும் காரணமாகி ஒரு நீண்ட விசாரணையையே முதல்வர் மூலம்உருவாக்கி நிற்பது, ஆகிய அனைத்தையும் கல்லூரி மாணவர்கள் அனைவரும் அறிவர். அதற்கு மத்தியில் பாபு இப்போது அவசரமாகக் கூட்டியிருக்கும் கூட்டத்திற்கு ஏதோ ஒரு முக்கியக் காரணம் இருக்க வேண்டும் என்கிற ஆர்வத்திலேயே அவர்கள் அனைவரும் கூடிவந்திருந்தனர்.

ஹாஸ்டல் ரகளைக்குப் பிறகு ஹாஸ்டல் பொருட்கள் காணமற் போனது பற்றி எழுந்த புகாரும், அந்தப் பழி எப்படியோ சுற்றி வளைத்து பாபுவின் தலை மீது வந்து விடிந்திருக்கிறது. அப்படி ஒரு பேச்சு அடிபடுகிறது என்கிற செய்தியும் வதந்திகளாகப் பரவி பல மாணவர்களின் செவிகளுக்கு எட்டியேயிருந்தது.

அந்தச் செய்தி, பாபுவின் நேர்மையையும் அவனது உயர்ந்த பண்புகளையும் கடமை உணர்ச்சியையும் அன்பு இதயத்தையும் அறிந்திருந்த மாணவர்கள் பலருக்கு மன வேதனையை அளித்தது. ஆனால், மூர்த்தியின் சொற்ஜாலங்களில் மயங்கி அவனுடைய குணாதிசயங்களால் ஈர்க்கப்பட்டவர்களுக்கோ அந்தச் செய்தி தேனாக இனித்தது.

எப்படியோ மாணவர்களிடையே, இரு மாறுபட்ட மனோ பாவத்தையுடையவர்கள் உருவாக்கிவிட்டார்கள். இனிப்பை நாடும் நண்பர்கள் மூர்த்தியின் தேன் சிந்தும் பேச்சைக் கேட்க ரமேஷின் வீட்டிற்குச் சென்றிருந்தனர். பாபுவின் பால் மட்டற்ற பாசமும், நம்பிக்கையும் கொண்டிருக்கும் மாணவர்கள், தங்களுடைய அனுதாபத்தையும் தொடர்ந்த ஆதரவையும் காட்டி பாபுவை மீண்டும் உற்சாக

மூட்ட வேண்டும் என்கிற ஆர்வத்துடனேயே கூடி வந்திருந்தனர்.

இவர்களுக்கெல்லாம் நன்றி கூறி, வரவேற்றுப் பேச எழுந்தான் பாபு:

''தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய வார்டன் பிரசாத் அவர்களே, என்பால் மட்டற்ற அன்பும், பாசமும் கொண்டுள்ள பிரியமுள்ள நண்பர்களே வணக்கம்.

நெருக்கடியான நேரத்தில் ஓர் அவசர நிமித்தம் உடனடியாக நான் ஒரு கூட்டத்தைக் கூட்டி உங்களை வரவழைத்திருக்கிறேன். உங்கள் மத்தியில் என்னை வேதனைப்படுத்தும் எண்ணங்களைக் கொட்டி, அன்பும் சத்தியமும் நிலைத்திருக்கும் வரை பண்பும், பாசமும் பிளவுபடாமல் என்னை நான் உங்களுக்குத் தொடர்ந்து தொண்டு செய்யத் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்கிற மனச் சாட்சியின் நிர்ப்பந்தமே உங்களை நான் இத்தனை அவசரமாகச் சந்திக்க அழைத்ததின் காரணம்.

வீட்டுச் சண்டை வீதிச் சண்டையாகி ஊர்ச் சண்டையாக வளர்ந்தது போல் ஹாஸ்டலில் ஏற்பட்ட ஒரு ரகளை, என்னையும் வார்டனையும் மீறி முதல்வரின் கைக்குப் போகும் படியான ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது. இது வருந்தத்தக்கதாகும்.

தன் பணியைச் செய்து ஊதியம் பெறும் சர்வர் சுப்பையா, ஹாஸ்டல் வேலைக்குத்தான் வந்திருக்கிறுரே தவிர, பிறரால் அநியாயமாக அடிக்கப்படுவதற்காக எடுத்த பிறவி அல்ல. அதே போல, ஹாஸ்டலில் இடம் பெற்றுள்ள விலையுயர்ந்த பொருட்கள் எல்லாம் மாணவர்களின் உபயோகத்திற்காக வாங்கி வைக்கப்பட்டுள்ளவையே அன்றி, சிலரின் கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டி போட்டு உடைப்பதற்காக வாங்கி வைக்கப் பட்டவை அல்ல.''

பாபு இதைக் கூறியதும் கூடியிருந்த மாணவர்கள் ''ஷேம், ஷேம்,'' என்று பெரிதாகக் கைகொட்டிக் கோஷமிட்டனர்.

''என் இனிய நண்பர்களே, நான் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டது எவரையும் தாக்கிப் பேசவோ எவர் மனமும் புண்படவோ கொண்ட எண்ணத்தினுல் அல்ல என்பதைவிட நீங்கள் இப்படிக் கைதட்டி, கேலிக் குரல் எழுப்பியதுதான் என் மனத்தை மிகவும் புண்படுத்துகிறது இது முன்னதை விடக் கடுமையானது.

நியாயத்தை மதிப்பவர்களால் தான். நியாயத்தை உணர்பவர்களால் தான் - நியாயத்தை வழங்கவும், அதை நிலை நாட்டவும் முடியும். அவர்கள் தான் அதற்குத் தகுதி படைத்தவர்கள்.

சுப்பையாவைத் தாக்கியது, ஹாஸ்டல் பொருட்களுக்குச் சேதம் விளைவித்தது ஆகியவை எந்த நியாயத்தையும் நிலைநிறுத்தியதாகாது. அதனுலேயே அதைச் செய்தவர்கள் தவறு செய்தவர்கள் ஸ்தானத்தில் இருக்கிருர்கள். அந்தச் தவறைச் செய்தவர்களும் நம் அனைவரின் நண்பர்களே; அவர்களும் தங்கள் தவறை உணர்ந்து திருந்தச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அப்படி அளிக்கப் பட்டுள்ள சந்தர்ப்பத்தை நாம் அவர்களைப் பற்றி அவர்கள் செய்துள்ள தவறைப் பற்றி, கேலி செய்வது அவர்கள் மனம் மாறச் செய்யும் முயற்சியைப் பாதித்துவிடும். ஆகையினுலேயே உங்கள் சார்பாக நீங்கள் ''ஷேம், ஷேம்,'' என்று கூறியதற்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது என்னிடம் கோபு வந்து நமது கட்சியிலுள்ள சிலர் ரமேஷின் பேச்சைக் கேட்டு மூர்த்தியின் கட்சிக்குப் போய் விட்டதாகக் கூறி வருந்தியதைக் குறிப்பிட வேண்டும்.

இதைக் கூறுகையில், ''ரோஜாச் செடியில் முள் இருப்பதற்கு வருந்தாதே; முட்செடியில் மலர் இருப்பதற்கு மகிழ்வாய்''—என்று அறிஞர் ஆவ்பரி கூறிய வார்த்தைதான் நினைவிற்கு வருகிறது.

என்னிடம் அன்பு கொண்டிருப்பவர்களை என் கட்சியிலிருப்பவர்களை - (எனக்கென்று ஒரு கட்சியும் இல்லை. ஆயினும் அப்படி மற்றவர்கள் குறிப்பிடுவதால் நானும் குறிப்பிட்டேன்; அவ்வளவுதான்) - கலைப்பதற்கு ரமேஷைப் போன்றவர்களும்; அப்படிக் கலைந்து வருபவர்களைக் கரம் நீட்டி வரவேற்க மூர்த்தியைப் போன்றவர்களும் காத்திருக்கும் போதுகூட இன்னும் என்னிடம் நம்பிக்கை வைத்து என்னுடனேயே இருக்கிறீர்களே நீங்கள் இத்தனை பேரும் இதை எண்ணி மகிழ்வதை விடுத்து அதையா எண்ணி என்னை வருந்தச் சொல்கிறீர்கள்?

என்னுடைய கவலை எல்லாமே என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவர்களைப் பற்றியும் அவர்களுடைய நம்பிக்கைக்கு நான் பாத்திரமானவன் தான் என்பதைப் பற்றியும் மட்டுமே தான்.

சுப்பையாவைத் தாக்கியது, ஹாஸ்டல் பொருட்களுக்குச் சேதம் விளைவித்தது ஆகியவை, என்னாலும் எனக்கு மேற்பட்டவர்களாலும் விசாரணைக் குறியவை மட்டுமே. அதுவும் உங்களுக்காகவே உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட செகரட்டரி என்கிற பதவி வகிக்கிற காரணத்தினால்தான்.

ஆனால் நானே இப்போது ஹாஸ்டலில் திருடு போன பொருட்கள் பற்றி விசாரணைக்குட்படும் சூழ்நிலை உருவாகியிருப்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்'', என்று பாபு கூறி முடிக்கும் முன்னர் ''எங்களுக்குத் தெரியாது'' என்கிற குரல்களும், ''பாபு மீது விசாரணையா? இந்த அக்கிரமத்தை அனுமதியோம்'' என்கிற குரல்களும் கூட்டத்தின் பல மூலைகளிலிருந்தும் ஒலித்தன.

தலைமை வகித்திருந்த வார்டன் அவர்கள் அனைவரையும் அமைதியாயிருக்கும்படி அன்புடன் வேண்டுகோள் விடுத்தார். மாணவர்கள் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மௌனமானதும் பாபு தன் பேச்சைத் தொடர்ந்தான்:

''நண்பர்களே, ஹாஸ்டலுக்குச் சொந்தமான பொருட்கள் காணமற் போயிருக்கின்றன. அவற்றைத் தேடிக் கண்டு பிடிப்பதிலும் அதற்குக் காரணமானவர்களைக் கண்டறிவதிலும் உங்களுக்கு எவ்வளவு பொறுப்பும் அக்கரையும் இருக்கிறதோ அதைவிட என்னுடைய பொறுப்பும் கவலையும் அதிகம். ஏனெனில், என்னுடைய நிர்வாகத்தில் நிகழ்ந்த ஒழுக்கக் கேடு இது.

ஆகவே நான் என்னுடைய அதிகமான நேரத்தையும் சக்தியையும் செலவிட்டு இதற்குக் காரணமான தீயவர்களைத் தேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறேன். இந்த நேரத்தில்தான் 'காணமாற்போன ஹாஸ்டல் பொருட்களைத் திருடியவனே நான் தான்' என்கிற தீப்பழியை என் மீது மூர்த்தி சுமத்தியிருக்கிறார்.

ஆகவே, குற்றவாளி ஸ்தானத்தில் தற்போதுள்ள நான், இனி அவ்வழக்குபற்றி முடிவு தெரியும் வரை எதுவும் விமரிசிப்பது முறையாகாது என்பது மட்டுமல்ல இந்தக் குற்றச்சாட்டைச் சுமந்து கொண்டு நான் உங்களுக்குப் பதவியில் இருந்து கொண்டே தொண்டு செய்வதும் நியாயமாகாது. இது அந்தப் பதவியின் பவித்திரத்தையே பாழ்படுத்திவிடும் என்று நான் நம்புவதால் எனது பதவியை ராஜினமா செய்து முதல்வருக்குக்கடிதம் அனுப்பிவிட்டேன். ஆகவே, இப்போதிருந்து எனது அருமை நண்பர்கள் என்னை பதவியற்ற பாபுவாகவே பாவித்து என்னுடன் பழகவும் என்னுடன் தொடர்பு கொள்ளவும் வேண்டுகிறேன். வணக்கம்,'' என்று கூறி பட்டென்று தன் ஆசனத்தில் அமர்ந்து விட்டான்.

பாபுவினுடைய நீண்ட நேரப் பேச்சை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் அவன் இறுதியாகக் கூறிய தன்னுடைய பதவியைச் செய்யாத ஒரு குற்றத்தின் நிமித்தம் யாரோ சிளப்பிவிட்ட அபாண்டத்திற்கு அடி பணிவது போல், ராஜிநாமாச் செய்து விட்டதாகக் கூறி யதை ஜீர்ணிக்க இயலாதவர்கள் போல் கோஷித்தனர்.

"பாபு பதவி விலகக் கூடாது; உண்மைக் குற்றவாளி யைக் கண்டுபிடித்து மூர்த்தியின் முகத்தில் கரியைப் பூசாமல் விடமாட்டோம் என்று கூட்டமாகக் கூச்ச லிட்டனர்.

அமைதிப்பட்டிருந்த உணர்ச்சி மீண்டும் அதன் புதிய உத்வேகத்தோடு பீறிட்டு விட்டதைக் கண்ட வார்டன் கணநேரம் குழம்பிப் போனார். பாபுவினால் பாபுவிற்காக எழுந்த மாணவர்களின் உணர்ச்சியை உள்ளக் கொந்த ளிப்பை பாபுவினால்தான் சமாதானப்படுத்த முடியும் என்று எண்ணியோ என்னமோ அவர் பாபுவையும் மாணவர் களையும் மாறி மாறிப் பார்த்தார்.

பாபு மீண்டும் ஒரு முறை தன்னுடைய ஆசனத்திலிருந்து எழுந்தான். அவனுடைய மனமும் உடலும் மிகவும் சோர்ந்து போயிருந்தது. பலதரப்பட்ட உணர்ச்சிகளால் அவன் உள்ளம் தவித்தது. தன் மீது மாணவர்கள் வைத் திற்கும் அன்பைக் கண்டு பெருமை கொள்வதற்கு மாறாக அவன் மனம் துயரமே கொண்டது. ஆம்! அவர்களின் அன்புச் சுமையை அவனால் தாங்க முடியாததே அதற்குக் காரணம்.

எழுந்து நின்ற அவன், மாணவர் களிடம் அமைதியா யிருங்கள் என்று வேண்டுகோள் கூட விடுக்கவில்லை; பாபு எழுந்துநின்ற சில நிமிஷங்களுக்கெல்லாமே கூட்டம் அமைதி கொண்டு விட்டது. பாபு பேசத் தொடங்கினான். ஆனால் அவன் குரலில் முன்பிருந்த உத்வேகம் இல்லை; உணர்ச்சி இருந்தது. ஓரக்க ஒலிக்கவில்லை — தீர்க்கமாக இருந்தது தெளிவாகக் கேட்டது.

''என் உயிரினுமினிய நண்பர்களே, நீங்கள் என் மீது சொரியும் பாசம் என் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது. நான் இப்போது பிரமாதமாக என்ன செய்து விட்டேன்; நான் தொடர்ந்து பதவி வகிக்காவிடில் என்ன குடி முழுகிப் போய்விடும் என்று எண்ணி இப்படிக் கோஷிக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

''உங்களில் தலைவனாக இருக்க விரும்புபவன் உங்களுக்கு ஊழியனாக இருக்கக்கடவன்''— என்று கூறிய கிருஸ்துவின் வாக்கு உங்களுக்கு நினைவில்லையா?

தொண்டு செய்வதற்கு பதவி வேண்டுமென்பதில்லையே! பதவியிலிருப்பவனும் தொண்டனே, தொண்டாற்றியவனே. அந்தப் பதவியை அவன் வகித்து வருவதும் ஒருவித நிர்ப்பந்தமான தொண்டேயல்லவா?

என்னைப் பொறுத்தவரை பதவி என்பது ஒரு 'பாட்ஜ்' மாதிரியே என எண்ணுபவன் நான். பலர் விரும்பி, அதை நம்மில் மாட்டும் போது பெருமையாக இருப்பதாகக் கருதினால் சிலர் நம்மிடம் 'அது' இருப்பதை விரும்பாவிட்டாலோ அல்லது அதை அணிய நமக்குத் தகுதியில்லை என்றும் கருதினால், உடனே அந்த 'பாட்ஜை' எவ்வித காழ்ப்புணர்ச்சியுமின்றிக் கழற்றி வைத்து விட்டு பாட்ஜ் இல்லாத தொண்டனாக நிமிர்ந்து நிற்கவும் நெஞ்சுக்கு உரம் வேண்டும்.

ஆகவே நண்பர்களே! பதவி என்னும் பாட்ஜுக்கு என்னால் களங்கம் ஏற்படும் என்று இனி எண்ணமாட்டார்கள். நான் செய்யும் எந்தத் தொண்டையும் அதற்காக துறந்து விடுவேன் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். நான் இப்போது 'பாட்ஜ்' அணியாத உங்களைப் போன்ற தொண்டன், அவ்வளவே! இதற்காக நீங்கள் இத்தனை முக்கியத்துவம் கொடுத்து வேதனைப் பட ஒன்றுமில்லை.

நேர்மையும், சத்தியமும் வெல்லும் போது நான் கழற்றி வைத்த பாட்ஜும் கழற்றிய இந்தக் கரங்களும் எங்கே போய் விட்டன. காலம் வரும்வரை காத்திருப்போமே!

இதோ அடுத்தபடியாக நமது வார்டன் உங்களுடன் பேசப் போகிறார் அவருடைய இனிய பேச்சுக்கும் உங்களுக்கும் இடையே இனி நான் நிற்பது அழகல்ல, வணக்கம்'' என்று கூறியபடி பாபு தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

''அன்புள்ள மாணவர்களே, பாபு இத்தனை நேரம் மிக விரிவாக உங்கள் மத்தியிலுள்ள பிரச்னைகளை விளக்கிக் கூறி விட்டார். இனியும் நான் அதிக நேரம் பேசி உங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. வார்டன் என்கிற முறையில் ஓரிரு வார்த்தைகள் கூறி என் உரையை முடித்து விடுகிறேன்'' என்கிற பூர்வ பீடிகையுடன் வார்டன் தமது உரையைத் துவக்கினார்:

''இங்கு ஒன்று கூடியிருக்கும் நாமெல்லோரும் உருவத்தால் மனிதர்களாயிருப்பினும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் விதம் விதமான கருத்துகளும் கருத்து வேறு பாடுகளும் குற்றம் குறைகளும் இருப்பது சகஜமே.

ஆனால் அப்படிப்பட்ட குற்றம் குறைகளுக்கான தீர்ப்பை, அல்லது தண்டனையை நாமே வழங்க முற்பட்டு விடாமல் உரியவர்களிடம் விட்டு விடவேண்டும். கட்டுப் பாடாக அப்படி நடந்துகொள்ளாமல் அதிகாரத்தை அல்லது ஆதிக்கத்தை நாமே கையில் எடுத்துக்கொண்டுவிடும் போதுதான் பிரச்னைகள் தோன்றுகின்றன. வன்முறைகள் உருவாகின்றன. அராஜகம் அல்லது அழிவு ஏற்படுகிறது.

கட்டுப்பாடாக நடந்து கொள்ளுவது என்பது கௌரவக் குறைவோ கையாலாகாத தனமோ ஆகிவிடமாட்டாது.

மூர்த்தி கோஷ்டியினரின் ஹாஸ்டல் விவகாரம் அவனுக்கு மேலுள்ள செகரட்டரி, வார்டன் ஆகிய இருவர் களாலேயே தீர்த்து வைக்கப்பட்டிருக்க முடியும். அதற்கு மூர்த்தி சற்று விட்டுக் கொடுத்து பொறுமையைக் கையாண்டிருந்தாலேபோதும். சுப்பையா அப்படியொன்றும் பொல்லாதவனல்ல; வார்த்தைக்குக் கட்டுப் படாதவனும் மல்ல; விவகாரமும் அன்றே தீர்ந்து போயிருக்கும்.

மாணவர்களே, தவருன இடத்தில் ஒரு பாதையைக் குறுக்கே கடந்த அந்தப் பாதசாரியைக் கண்டிக்க ஒரு போலீஸ்காரர்தான் வருவார். அவர் வருவதும் பாதசாரியின் நன்மைக்காகவேதானே. அவர் செய்த தவறைச் சுட்டிக் காட்டி, ''நீங்கள் இப்படிக் கண்ட இடத்தில் ரோட்டைக் கடந்தால் உயிருக்கல்லவா ஆபத்து ஏற்படும், ஏன் கடந்தீர் கள்?'' என்று எச்சரிக்கை செய்த போலீஸ்காரரைப்பார்த்து ''அதைக் கேட்க நீர் யாரைய்யா?'' என்று பாதசாரி கேட் டாலே தமாஷ்தான். ஆனுல் அதையும்மீறி அந்த பாதசாரி ''ஐ.ஜி வந்து சொல்லட்டும் கேட்டுக் கொள்கிறேன், நீ யார் என்னைத் தடுக்க?'' என்று துடுக்காகப் பேசி அத்துடன் அந்தப் போலீஸ்காரரையும் அதற்காக அடித்தும் விட்டால் பிறகு விஷயம், ஐ.ஜி வரை போகாவிட்டாலும், ஸ்டேஷன் வரையாவது போய்த்தானே தீரும்?''

அந்தப்பாதசாரி செய்த தவறைத்தான் மூர்த்தியும் செய்தான். ''நாம் செய்ததை இந்த பாபுவும் வார்டனும் என்ன விசாரிப்பது - இவர்களுடைய வார்த்தைக்கு நாம் என்ன கட்டுப்படுவது?''—என்கிற மூர்த்தியின் ஆணவமான எண்ணந்தான் அவனை அதற்கு மேலும் அடுக்கடுக்கான தவறுகளைச்செய்யத் தூண்டி இன்று அதில் அவனே மாட்டிக் கொள்ளும்படி அது ஒரு ஆபத்தான-அவமானமான நிலைமை யையும் தோற்று வித்து விட்டது. பாவம், அது அவனுக்கே கூடத் தெரியாது என்று வார்டன் கூறிக் கொண்டிக்கும் போதே, பல மாணவர்கள் எழுந்து ''என்ன சார் செய் தான்? எப்படி சார் மாட்டிக்கொண்டான்?'' என்று கேள்வி கேட்டனர்.

வார்டன் அவர்களை நோக்கி கையமர்த்தியபடி, ''மூர்த்தி என்ன செய்தான், எப்படி ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிருன் என்பதைப் பற்றியெல்லாம் நான் ஏதும் சொல்ல மாட்டேன். அவனுக்கே இதுவரை தெரியாம லிருக்கிற விஷயத்தைப் பற்றி நான் உங்களிடம் விளக்க லாமா! அது ஒரு 'சஸ்பென்ஸ்.'

ஒ. மா.—!

அந்த 'சஸ்பென்ஸை' உரிய நேரத்தில் உங்களிடம் நம் முதல்வரே விளக்குவார். ஆனால் மூர்த்திக்கு ஆபத்தோ, அவமானமோ எதுவும் நம்மால் ஏற்பட்டதல்ல; அவன் விதைத்த வினையை அவன்தானே அறுவடை செய்தாக வேண்டும்?

மாணவர்களே! உங்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அன்போடு பழகுங்கள் - உண்மையோடு உயருங்கள்- ஒற்றுமையோடு வாழுங்கள்.

தவறு செய்வது மனித சுபாவமாக இருக்கலாம்; ஆனால் செய்த தவறுக்காக வருந்துவது அதை எண்ணித் திருந்துவது-உயர்ந்த மனித சுபாவமல்லவா?

அடிபட்ட சுப்பையாவிடம், காலங்கடந்தாவது மனம் திறந்து மூர்த்தி, ''ஸாரி,'' என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலே போதும். பிரச்னை அப்போதே தீர்ந்திருக்கும் என்பதற்காகவே சொன்னேன். ஆனால் அதற்கு மனம் வேண்டும். அன்பைப்பெற வேண்டுமானால், அன்பைத்தான் அதற்கு விலையாகக் கொடுத்தாகவேண்டும். ஆகவே அனைவரும் அன்போடு பழகுங்கள் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்'' என்று வார்டன் தன் பேச்சை நிறுத்தினார்.

## 7 அறுவடை நேரம்

''உண்மைகள் எல்லாவற்றையும்
நீங்கள் சொல்ல வேண்டும் என்பதில்லை.
நீங்கள் சொல்லுபவை எல்லாம்
உண்மையாக இருக்கட்டும்.''

—ஹொரேஸ்மான்.

கல்லூரியில் வகுப்புகள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும்போது மூர்த்தி கட்டிடத்திற்கு வெளியே மறைவாக ஒரு இடத்தில் அமர்ந்து பாடிவுக்கு எதிரான

பொய் மகஜர்களைத் தயாரித்துக் கொண்டிருந்தான். இடை வேளை மணிக்காகக் காத்துக் கொண்டிருந்த அவன் மணி அடித்ததும் நேராக முதல்வரின் அறையை அடைந்தான்.

முதல்வர் தன் அறையில் மும்முரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அறைவாசலில் ஸ்டூலில் அமர்ந்திருந்த பியூன் பொன்னுசாமி, ''என்ன விஷயம்?ஐயாவைப் பார்க்கணுமா?'' என்று கேட்டான்.

''ஆமாம்,'' என்று கூறிய மூர்த்தி, ஒரு சிறு துண்டுக் கடிதத்தை பொன்னுசாமியிடம் கொடுத்து அனுப்பினன்.

சற்றைக் கெல்லாம் உள்ளேயிருந்து வெளியே வந்த பொன்னுசாமி மூர்த்தியிடம் ''ஐயா உங்களை உள்ளே வரச் சொன்ஞரு'', என்ருன்.

முதல்வருக்கு வணக்கம் செலுத்தி விட்டு நின்ற மூர்த்தியை எதிரில் இருந்த நாற்காலியில் அமரும்படிக் கூறிய முதல்வர் ''நானே உன்னைக் கூப்பிட்டு அனுப்ப வேண்டுமென்றிருந்தேன். நீயே வந்து விட்டாய். என்ன விசேஷம். பாபுமீது நீ செய்திருக்கிற துஷ்பிரசாரம் நல்ல சூடு பிடித்திருக்கிருர் போலிருக்கே!'' என்ருர்.

உடனே மூர்த்தி, ''மன்னிக்க வேண்டும் சார்; உங்களுடைய வாயிலிருந்து இப்படியொரு வார்த்தையை நான் எதிர்பார்க்கவில்லை. மற்றவர்கள் பொறுப்பில்லாமல் என்னைப் பற்றிப் பேசினல் தாங்கிக் கொள்வேன், ஆனல் நீங்களே இப்படிப் பேசியது என் மனத்தைப் புண் படுத்தி விட்டது சார்'' என்று மெதுவான குரலில் கூறினன்.

''நான் இப்போது என்ன சொல்லி உன் மனதைப் புண் படுத்தி விட்டேன் மூர்த்தி?'' என்று முதல்வர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஒரு குற்றச்சாட்டு உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய புலன் விசாரணையே ஆரம்பமாகவில்லை; அதற்குள் நீங்கள் தீர்ப்பு

வழங்கி விட்டீர்களே சார். இது என்ன நியாயம்?'' என்றான் மூர்த்தி.

''நான் எப்போது தீர்ப்பு வழங்கினேன் மூர்த்தி!'' என்றார் மேலும் தன் வியப்பை அடக்க மாட்டாமல்.

''இப்போது சொன்னீர்களே சார்; பாபுவைப் பற்றி நான் துஷ்பிரசாரம் செய்கிறேன் என்று.''

''ஓ! அதைச் சொல்லுகிறாயா?'' என்றார் முதல்வர்.

''ஆமாம் சார், அதைத்தான் சொல்லுகிறேன். பாபுவும் சரி நானும் சரி மற்றும் உங்கள் கீழ் இக்கல்லூரியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்குமே தாங்கள் தான் முதல்வர். அதே போல் அனைத்து மாணவர்களிடமுமே பாரபட்ச மற்ற அன்பைக் காட்டவும், அறிவைப் புகட்டவும் கடமைப்பட்டவர்கள் என்று நான் கூறினால் அது தவறாகாது என எண்ணுகிறேன்.''

''நீ சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி, உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குற்றங் குறைகள் இருப்பினும், நீங்கள் அனைவருமே என் இரு கண்மணியைப் போன்றவர்கள். உங்கள் அனைவரையும் சமமாகவே நான் பாவிக்கிறேன்; அன்பு காட்டுகிறேன். குற்றங் குறைகளுக்காக ஒவ்வொருவரையும் ஒதுக்கிக் கொண்டே போனால் இறுதியில் ஒருவன்கூட மிஞ்சமாட்டான். இதில் உனக்கென்ன சந்தேகம் மூர்த்தி?''

''என் சந்தேகம் தெளிந்து விட்டது சார். பாபு என்னை எதிர்த்துப் போட்டி போட்டு ஜெயித்தவன். ஆனால் அதற்காக அவன் மீது வீணாகத் திருட்டுப் பழி சுமத்தி துஷ்பிரசாரம் செய்ய வேண்டுமென்பது என் விருப்பமல்ல சார்.

பாபு மெஸ்ஸிலிருந்து எவர்சில்வர் சாமான்களைத் திருடியிருப்பது உண்மை. அதை அவன் வீட்டிலுள்ள கார் ஷெட்டில் ஒளித்து வைத்திருப்பது உண்மை. நீங்கள் இப்போதே என்னுடன் வந்தால் அதை நான் நிரூபித்துக் காட்டத் தயார் சார்'' என்று மூர்த்தி அடித்துப் பேசினான்.

அவனுடைய உறுதியான பேச்சைக் கேட்ட முதல்வர், ""நீ சொல்லுவதைக் கேட்கும்போது எனக்கே நம்பிக்கை பிறக்கிறது'' அவன் அதைத் திருடும்போதும் பதுக்கி வைக்கும்போதும் நீ ஒளிந்திருந்து பார்த்தாயோ'' என்றார்.

''நான் நேரில் பார்க்கவில்லை சார். ஆனால், பார்த்த மாதிரிதான் சார். உண்மை இது. அவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு நண்பன் கண்ணாரப் பார்த்ததாகக் கூறினான்.

முதல்வர் லேசாகச் சிரித்தார். ''ஆக மொத்தம் பாபு திருடிக் கொண்டு போனதையோ, அதை அவன் தன்வீட்டில் ஒளித்து வைத்ததையோ நீ கண்ணாரப் பார்க்கவில்லை. சரி, போகட்டும். இப்போது நீ என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''என்னுடன் தாங்கள் தயவு செய்து கூட வந்தால் பாபுவின் வீட்டில் அதைத் தேடிப் பிடித்துக் கண்டு பிடித்து விடலாம் சார்.''

முதல்வர் இப்போது சற்று வாய்விட்டே சிரித்தார். ''மூர்த்தி, நீ கண்ணால் பார்க்காத ஒரு திருட்டை உன்னுடைய ஒரு நண்பன் கூறியதைக் கேட்டு வந்து நீ என்னிடம் பாபுவின் வீட்டை சோதனை போட வேண்டுமென்று கூறுகிறாய்?...'' என்று முதல்வர் பேசிக் கொண்டு வரும்போதே குறுக்கிட்ட மூர்த்தி, ''அதைக் கூறியவன் என்னுடைய நண்பன் அல்ல சார். அப்படி இருந்தால் கூட நான் இத்தனை தூரம் நம்பியிருக்க மாட்டேன்'' என்று மூர்த்தி கூறிக் கொண்டுவரும்போதே, முதல்வரும் குறுக்கிட்டுக் கேட்டார்.

' ஏன், உன்னுடைய நண்பர்களிடம் உனக்கே நம்பிக்கை இல்லையோ?''

''அப்படி இல்லை சார்.'' பாபுவைப் பற்றித் தவறாக எதையாவது பேசி, என் அதிக அன்பைச் சம்பாதித்துக் கொள்ளலாம். அப்படிப் பேசுவது எனக்குப் பிடிக்கும்,

திருப்தியளிக்கும் என்று அவர்கள் எண்ணக் கூடும் என் பதற்காகவே கூறினேன். ஆனால் இதை என்னிடம் கூறிய வன் பாபுவிடம் உயிரையே வைத்திருப்பவன். அதனால் தான் என்னால் அதை நம்பாமலிருக்க முடியவில்லை என்றான் மூர்த்தி.

உடனே முதல்வர், ''இப்போது அவன் மனம் மாறி உன் கட்சியில் சேர்ந்து விட்டானோ?'' என்று கேட்டார்.

''அப்படி வந்திருந்தால் கூட 'கட்சிமாறி வருவதற்காக ஏதோ புளுகுகிறான்' என்று விட்டிருப்பேன். ஆனால், அவன் இன்னும் பாபுவின் கட்சியில்தான் இருக்கிறான். எப் படியாவது தன் இனிய நண்பன் பாபுவை நான் திருத்த வேண்டுமென்றுதான் என்னிடம் வந்து கூறினான்.''

இதைக் கேட்ட முதல்வர் மூர்த்தியினுடைய முகத் தையே சில விநாடிகள் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த முகத்திலிருந்து அவர் புரிந்து கொண்ட விஷயங்கள் அவருடைய உள்ளத்துக்கு வேதனையூட்டின. அந்த வேதனையுடனேயே அவர் கூறினார்.

''மூர்த்தி, அது பாபுவினிடம் அளவிற்கு மீறி அன்பு வைத்திருக்கிற ஓர் உயிர் நண்பன் செய்கிற காரியமாகத் தெரியவில்லையே. தன் அன்பிற்குப் பாத்திரமான பாபு திருட்டுத் தொழிலில் ஈடுபடுவதைக் கண்ணாரக் கண்ட அந்த நண்பன், அதை உன்னிடம் வந்து சொல்லி ஊர் அறியச் செய்வதைவிட அவனே அதைப் பற்றிப் பாபுவிடம் கண்டித் திருப்பதல்லவா விவேகம்? அதுவல்லவா உயர் நட்பின் இலக்கணம். நல்ல பயனையும் அளித்து, தவறை உணர்ந்து திருந்த தன் நண்பனுக்கு அப்படியொரு சந்தர்ப்பத்தையல் லவா பாபுவின் நண்பன் உண்மையானவனாக இருந்திருந் தால் அளித்திருப்பான். நீ கூறியவற்றைக் கேட்டதிலிருந்து அவன் பாபுவின் உயிர் நண்பனாக இருக்க முடியாது; ஒரே ஐந்தாம் படை நண்பனாகத்தான் இருக்க வேண்டும்.

''மூர்த்தி, நீயும் அந்தத் திருட்டைக் கண்ணுரக் காண வில்லை. அதைப் பற்றி உன்னிடம் வந்து கோள் சொல்லி யிருப்பவன் எவனுக இருந்தாலும் அவன் பாபுவின் நண்ப ஞக நிச்சயமாக இருக்க முடியாது. நண்பனைப்போல் அவனிடம் பழகி வரும், அந்தக் கருங்காலியின் பேச்சைக் கேட்டுக் கொண்டா பாபுவின் வீட்டைச் சோதனை போட என்னை அழைக்கிறுய்?'' என்று கேட்டார்.

முதல்வருடைய மாறி மாறி வந்த குறுக்குக் கேள்வி களும், வாதங்களும் மூர்த்தியின் மூளையை ஒரேயடியாகக் குழப்பி விட்டன. 'பளிச் பளிச்' சென்று பதில் கூறி வந்த அவன், மேற்கொண்டு என்ன பதில் கூறுவதென்று புரியா மல் ஒரு கணம் தடுமாறினுன். மூர்த்தி நல்லவனே கெட்ட வனே அது ஒரு புறம் இருக்கட்டும். நல்லவனுகவோ கெட்டவனுகவோ எப்படியும் தன்னைப் பக்குவமாக உரு மாற்றிக் கொள்ளுமளவிற்குச் சிறந்த புத்திசாலி மாணவர் கள் மத்தியில் அவன் ஒரு ஹீரோ. பேச்சில் அவனை இது வரை யாரும் மடக்கி வென்றது கிடையாது.

ஆனுல், பரந்த அறிவும் அநுபவமும் கொண்ட முதல் வர் முன் அவனுடைய திறமையான வாதங்கள் எல்லாம் தோற்றுப்போனதுபோல் கணநேரம் மௌனமாக நின்று கொண்டிருந்தான். முதல்வர் மென்மையான குரலில் கேட்டார்.

''மூர்த்தி, சற்று ஆழ்ந்து யோசித்தாயானுல் நான் கூறுவதே உனக்கும் சரி என்று படும். நீ நேரில் பார்க்காத போது ஒரு போலி நண்பனின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பொறுப்புள்ள ஒரு பதவி வகிக்கும் பாபுவின் வீட்டைச் சோதனை போடப் புறப்படுவதும் அவனே குற்ற வாளி என்று கூறுவதும் என்ன நியாயம்? ஹாஸ்டல் பொருட்கள் காணுமற் போனதில் என்னைவிட யாருக்கு அதிகம் அக்கரை இருக்கமுடியும்?ஆனுல் அதற்காக அவசரப் பட்டு ஒரு காரியம் செய்யலாமா! உண்மைக் குற்றவாளிக்கு உரிய முறையில் தண்டனை அளிக்கவே நானும் காத்திருக்

கிறேன்.'' என்று முதல்வர் கூறி முடிக்குமுன் மூர்த்தி சற்று படபடப்பாகவே குறுக்கிட்டான். அவனுடைய பேச்சில் கோபம் புறையோடிக் கொண்டிருந்தது.

''சார், நீங்கள் காத்திருப்பதற்குள் காரியம் எல்லாம் கெட்டுப் போய்விடும்—அல்லது தலைகீழாக மாறிவிடும். எந்தத் திருடனாவது போலீஸ்காரனை பக்கத்தில் வைத்துக் கொண்டா திருடுவான்? நான் பார்க்கா விட்டால் என்ன, என்னிடம் வந்து கூறிய நண்பனின் வார்த்தைகளை நான் நம்புகிறேன்.

அவன் ஐந்தாம் படையாகவோ, ஆறும் படையாகவோ இருந்து விட்டுப் போகட்டும். திருட்டுப் போயிருப்பது உண்மை; அந்தத் திருட்டைப் பற்றிச் சிறிது ஆதாரம், அல்லது துப்புக் கிடைத்தாலும் உடனே சோதனைக்குப் புறப்படுவது தானே சார் நியாயம்? அதைவிட்டுவிட்டு பாபுவுக்காக நீங்கள் பரிந்து பேசினால் எப்படி சார்? பாபு வீட்டில், நான் கூறியபடி அந்தப் பொருட்கள் இல்லா விட்டால் அவன் நிரபராதி என்பது நிரூபணமாகி விடுகிறது அதன் பிறகு தவறான தகவல் கொடுத்ததற்காகவோ அல்லது வேண்டுமென்றே பாபுவின் நற்பெயருக்கு இழுக்கைத்தேடித் தர முனைந்தேன் என்று குற்றஞ் சாட்டியோ எனக்கு எந்தத் தண்டனை கொடுத்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன் சார்'' என்று உறுதியோடு கூறினான் மூர்த்தி.

அதற்கு மேலும் மூர்த்தியினிடம் பொறுமை காட்டி அவனுக்கு உபதேசித்துக் கொண்டிருக்க முதல்வரின் மனம் இடங் கொடுக்கவில்லை.

—'கர்வமுள்ளவன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். கோபக்காரனோ தன்னையே இழக்கிறான்'—என்கிற அறிஞர் ஹால்லின் வார்த்தையை அப்படியே நிரூபித்து விட்டாய் மூர்த்தி. சரி புறப்படு. இனி நான் தாமதிக்கவோ தயங்கவோ செய்யும் ஒவ்வொரு நிமிஷ

மும் பாபுவின் மீது கொண்டுள்ள பரிவினல் வீணுக்குவ தாகவே உனக்குத் தோன்றும் என்று கூறியபடி முதல்வர் தன் மேஜை மீதிருந்த மணியை அடித்தார்.

உள்ளே வேகமாக வந்த பியூன் பொன்னுசாமியிடம், டிரைவரிடம் காரை இங்கே எடுத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டு பாபு கிளாசுக்கு வந்து விட்டால் நான் கூப் பிடுவதாகக் கையோடு அழைத்து வா என்று கட்டளை இட்டார்.

மூர்த்தி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முதல் வரை மட்டும் தனியாகத் தன்னுடன் அழைத்துச் சென்று சோதனை போடவேண்டுமென்று அவன் விரும்பியதற்கு மாருக முதல்வர் பாபுவையும் அழைத்து தன்னைச் சந்திக்க வைப்பார் என்று அவன் எண்ணவே இல்லை.

டிரைவர் காரை எடுத்துக்கொண்டு வந்து முதல் வரின் அறைக்கு எதிரில் உள்ள போர்டிகோவில் நிறுத்தி கதவைத் திறந்து விட்டார். பின் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்ட முதல்வர் மூர்த்தியையும் தன் அருகில் அமரும் படிக் கூறினர்.

பரவாயில்லை சார் நான் முன் சீட்டில் உட்கார்ந்து கொள்கிறேன் என்று மூர்த்தி மிகவும் தயங்கியபடிக் கூறினன்.

உடனே முதல்வர், பரவாயில்லை. நீ என் பக்கத்தி லேயே உட்காரு; முன் சீட்டில் பொன்னுசாமி உட்கார்ந்து கொள்ளுவான் என்று அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே பொன்னுசாமி பாபுவையும் அழைத்துக் கொண்டு காரின் அருகே வந்து நின்ருன்.

பொன்னுசாமி ரூமைப் பூட்டிவிட்டு நீயும் எங்களு டன் புறப்பட்டுவா என்று உத்தரவு பிறப்பிக்கும்போது தான் பாபு காரினுள் முதல்வர் இருப்பதைக் கண்டான். ஆனல் அதே சமயம் வேறு எங்கோ முகத்தைத் திருப்பிக்

கொண்டு முதல்வர் அருகில் அமர்ந்திருக்கும் மூர்த்தியைக் கண்டதும் பாபுவுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. கண நேரத்திற்குள் அவன் உள்ளத்தில் எண்ணற்ற விவரம் புரியாத சிந்தனை அலைகள் எழுந்து அலைமோதின. ஆயினும் தன்னுடைய உணர்ச்சிகள் எதையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் 'என்னைக் கூப்பிட்டீர்களாமே சார்' என்று கேட்டான். உடனே முதல்வர் 'ஆமாம் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள். உன் வீட்டிற்கு நாங்கள் எல்லோரும் வருகிறோம்' என்று கூறினர்.

அதற்கு மேல் பாபு, ஏன்? எதற்கு? என்று எவ்வித கேள்வியும் எழுப்பாமல், மௌனமாக முதல்வரின் மறுபக்கமாக வந்து அமர்ந்து கொண்டான். இவ்வளவையும் பார்த்துக்கொண்டு, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் மூர்த்தி ஏதோ பெரிய யோசனையில் ஆழ்ந்திருப்பவனைப் போல் காரிலிருந்தபடியே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதற்குள் முதல்வரின் அறையைப் பூட்டிக்கொண்டு பொன்னுசாமியும் வந்துவிடவே முன்புறக் கதவைத் திறந்து விட்டார் டிரைவர். பொன்னுசாமி ஏறி அமர்ந்துகொண்டதும் யார்மீதோ வாரி இறைப்பதுபோல் புழுதியைக் கிளப்பிக் கொண்டு கார் வேகமாகக் காம்பௌண்டைக் கடந்து சென்று கொண்டிருந்தது.

## 8 மூர்த்தி மூர்ச்சையானன்

'முதலில் தூசியைக் கிளப்பிவிடுகிறோம்.
பின்னல், பார்க்க முடியவில்லையே
என்று முறையிடுகிறோம்.

—பிஷப் பார்க்லி.

பாபுவின் வீட்டு வாசலில் வந்து கார் நின்றது. அதிலிருந்து முதலில் கீழே இறங்கிய பாபு, முதல்வரையும் மூர்த்தியையும், ''வாருங்கள்'' என்று அன்புடன் கூறி தன் வீட்

டிற்குள் வரவேற்ருன். அவனுடைய குரலில் அன்பு தெறித்தது.

பாபுவினுடைய இந்தச் செய்கை முதல்வரின்—ஏன் மூர்த்தியினுடைய உள்ளத்தையும்கூட ஏதோ செய்வது போலிருந்தது. புறப்படும்போது முதல்வர் அவனிடம் ஏதும் கூருமலேதான் பாபுவைக் காரில் ஏறிக்கொள்ளச் சொன்ஞர்.' ஆனல், வழியில் நடைபெற்ற சம்பாஷணைகளி லிருந்து அவனுக்கு அவர்கள் எல்லாம் எதற்காகத் தன் வீட்டிற்கு வருகிருர்கள் என்பது நன்கு புரிந்திருக்கும். ஆனல் அதன் பிறகும் அவனிடம் எவ்வித மாற்றமும் காணப் படவில்லை.

அவனுடைய முகம் நிர்மலமாக இருந்தது. கண்களில் காந்தக் கல்லின் ஒளி வீசிற்று. அதைப் பார்க்கவே துணிச்ச லற்றவன் போல் மூர்த்தி முதல்வரைப் பின் தொடர்ந்தான்.

இவர்கள் வந்த சமயம் பாபுவின் அப்பா வீட்டில் இல்லா ததால், பாபுவின் தாயாரே அனைவரையும் அன்புடன் வர வேற்று அமரும்படி கூறினுள். ''இவர்தான் என் அம்மா'' என்ருன் பாபு. முதல்வர் வணங்கிஞர். பிறகு பாபு தன் னுடைய ம்மாவுக்கு முதல்வரையும் மூர்த்தியையும் அறிமுகப்படுத்திவிட்டுத் திரும்பும்போது, ''மூர்த்தியை எனக்குத் தெரியாதாடா என்ன?'' என்னும் உரிமை யுடன் சிரித்தபடி கூறிக்கொண்டே வேகமாக அடுக்களைக்குச் சென்ருர்.

அதன் குறிப்பறிந்த முதல்வர், பாபுவைத் தன் அருகில் அழைத்து ரகசியமாக காதில் ஏதோ கூறிஞர். உடனே பாபு ' பரவாயில்லை சார்...'' என்ருன். ஆனல் முதல்வர். ''நான் சொன்னதை முதலில் உன் அம்மாவிடம் போய்ச் சொல்லி விட்டு வா'' என்று சற்று கண்டிப்பான குரலில் கூறவே, வேறு வழியின்றி பாபு சோர்ந்த முகத்துடனேயே அடுக் களையை நோக்கிச் சென்ருன்.

சற்றைக்கெல்லாம் வேகமாக வெளியே வந்த பாபுவின் அம்மா, ''என்ன அப்படிக் கண்டிப்பான உத்தரவு போட்டு அனுப்பியிருக்கிறீர்கள்? கல்லூரியிலிருந்துதானே வருகிறீர்கள்? பிறர் வீட்டில் ஒன்றும் சாப்பிட மாட்டீர்களா?'' என்று உரிமையோடு கேட்டாள்.

உடனே முதல்வர், அப்படியொன்றுமில்லை, இனியொரு சமயம், சாவகாசமாய் வந்து சாப்பிடுகிறேன்.'' என்று அவர் கூறி முடிக்கு முன்னர் பாபுவின் அம்மா குறுக்கிட்டு, ''பரவாயில்லை; எங்கள் வீட்டிற்கு முதன் முதலாக வந்திருக்கிறீர்கள்; காபியோ, ஓவலோ கொண்டு வருகிறேன்'' என்று திரும்பியபோது, முதல்வர் சற்று உரத்த குரலில் மறுத்தார்!

''தயவு செய்து இந்தமுறை ஏதும் நான் சாப்பிடமாட்டேன்; இனியொருமுறை கண்டிப்பாக உங்கள் வீட்டிற்கு வந்து நீங்கள் கொடுப்பதையெல்லாம் சாப்பிடத்தான் போகிறேன். இப்போது வற்புறுத்தாதீர்கள்'' என்றார்.

''பரவாயில்லை, பாபு உள்ளே என்னிடம் எல்லாம் சொன்னான். நீங்கள் எங்கள் வீட்டைச் சோதனை போடப் போவதற் ம் இதற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. இது லஞ்சம் கொடுத்ததாக ஆகிவிடாது; மூர்த்தி அப்படியெல்லாம் சொல்லமாட்டான்; அவனும் எனக்கு பாபு மாதிரி தான்'' என்றபடி அவர்கள் எதிரில் கையிலிருந்த காபி டிரேயை வைத்துவிட்டு பாபுவை உள்ளே கூப்பிட்டாள்.

மூர்த்தி குனிந்த தலை நிமிராமல் இருந்தான். முதல்வருக்கு அங்கு நடப்பவை எல்லாம் ஏதோ ஒரு புதிய உலகைப் பார்ப்பது போல் இருந்தது. இத்தனைக்கும் அவர் அந்த வீட்டிற்கு வருவது அதுவே முதல் தடவை. ஆனால் பலநாள் பழகியது போல் பாபுவின் தந்தை இல்லை என்கிற குறை தெரியாதபடி வந்தவர்களை எவ்வளவு கண்ணியமாய் வரவேற்று நடத்துகிறாள்? அதுவும் எப்படிப்பட்டதொரு சூழ்நிலையில்? இது எப்படி சாத்தியம்? என்று

முதல்வர் மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, பாபு உள்ளே இருந்து இரண்டு டம்ளர் காபியை ஏந்திய படி வாசலை அடைந்து ஒன்றை பியூன் பொன்னுசாமிக்கும் ஒன்றை டிரைவரிடமும் கொடுத்து விட்டுத் திரும்பினுன்.

இதைக் கண்டு வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்ட முதல்வர், "என்ன மூர்த்தி சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி; சீக்கிரம் சாப்பிடு, வேலையை ஆரம்பிக்க வேண்டாமா?'' என்று அவன் விரலால் கூடத் தொடாதிருந்த காபியை டிரேயிலிருந்து எடுத்து நீட்டினுர்.

''எனக்கு வேண்டாம் சார்'' என்று சட்டென்று தன் ஆசனத்திலிருந்து எழுந்து இரு கரமும் கூப்பி வேண்டினுன் மூர்த்தி.

உடனே அருகிலிருந்த பாபு, முன்பு கூட அவன் எப் போது எங்கள் வீட்டிற்கு வந்தாலும் இப்படித்தான் சார் மறுப்பான். அவனுக்கு ரொம்ப சங்கோஜம். ஆனுல் இவன் வீட்டிற்குப் போய், வேண்டாம் என்று மறுத்தால், "மரி யாதையாக் குடிக்கிறியா; இல்லே சட்டை மேலே ஊத்தவா?'' என்று பயமுறுத்துவான்.

''அந்தக் காபியை என்னிடம் கொடுங்க சார்; இப்ப இவன் வாங்கிக் குடிக்கல்லேன்னு நிஜமாகவே சட்டையிலே தான் சார் ஊற்றப் போகிறேன்; என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்'' என்று கூறியபடி முதல்வர் கையிலிருந்த காபியை வாங்கி மூர்த்தியின் முன் நீட்டியபடி நின்ருன் பாபு.

மூர்த்திக்குத் தலையே சுழல்வது போலிருந்தது. ஏதோ அன்புச் சுழலுக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டது போல் சிக்கித் தவித்தது அவன் மனம். விழிகளில் தளும்பிக் கொண்டிருந்த நீர் இமையை உடைத்துக் கொண்டு வந்துவிடும் போலிருந்தது.

பாபுவின் கையிலிருந்த காபி டம்ளரை மூர்த்தி பெற்றுக் கொண்டபோது இருவரது விரல்களும் ஸ்பரிசித்துக்

கொண்டன. ஆதியில் இருவரும் ஒருவரை யொருவர் கட்டிப் புரண்டுகொண்டு இதே வீட்டில் விளையாடின நாட்கள் அவன் நினைவைத் தாக்கின. மறு நிமிஷம், இமைகள் கரை உடைத்துக் கொண்டுவிட்டன.

''— ம் ... சீக்கிரம் குடி, அப்புறம் எங்க வீட்டுக் காபி உப்புக் கரிக்கிறதென்று சொன்னால் மற்றவங்க நம்ப மாட்டாங்க'' என்று தன் காதருகே கூறிய பாபுவை, அப்போதுதான் மூர்த்தி நேருக்கு நேராகப் பார்த்தான். அப்போது— 'ஓ! இப்படி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டும் கேலி செய்து கொண்டும் எத்தனை நாட்களைக் கழித்திருப்போம்' என்று தான் இருவர் உள்ளங்களிலும் எண்ணங்கள் ஓடியிருக்க வேண்டும்.

மூர்த்தி காலி செய்து கொடுத்த டம்ளரை பெற்றுக் கொண்டு பாபு உள்ளே சென்றதும், மூர்த்தியிடம் முதல்வர் ''என்ன, சோதனையை ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டார்.

மூர்த்தி ஒன்றுமே பேசவில்லை.

''என்ன பதில் பேசாமல் இருந்தால் எப்படி மூர்த்தி? புறப்பட்டு வந்துவிட்டோம். எதற்காக? இங்கே காபி குடித்ததைப்பற்றி ஒன்றும் யோசிக்காதே! அதொன்றும் செஞ்சோற்றுக் கடன் ஆகிவிடாது. அதை பாபுவின் அம்மாவே நமக்கு விளக்கி விட்டாள். யாரானாலும் குற்றத்திற்குரிய தண்டனை உண்டு. சொல்லு சீக்கிரம். பாபு எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்று குறிப்பாக ஏதாவது தெரியுமா? இல்லை வீடு முழுவதுமே சோதனை போடுவோமா?'' என்று கேட்டார் முதல்வர்.

உடனே மூர்த்தி, ''எனக்கு எப்படி சார் தெரியும்? நான்தான் கண்ணால் பார்க்கல்லேன்னு சொன்னேனே,'' என்று மூர்த்தி தழதழத்த குரலில் கூறிக்கொண்டிருக்கும் போதே, ''ஏண்டா முட்டாள், கல்லூரியிலே நீ இதைச்

சொன்னப்போ நான் சொன்னதைக் கேட்டியா. அப்போ சவால் விட்டு நீ பேசினதையெல்லாம் இப்போ நினைவுபடுத்தணுமா?'' என்று கோபமாக முதல்வர் கேட்டதும் மூர்த்தி தன்னைச் சட்டென்று தயார்ப் படுத்திக்கொண்டு விட்டான்; —'நாய் வேஷம் போட்டால் சரியாகக் குலைக்க வேண்டாமா?'

''கார்ஷெட்டுக்குப் பக்கத்திலே இருக்கிற அவுட் ஹவுஸிலே கொண்டு போய் பாபு வைத்திருக்கிறதாகத்தான் அவன் சொன்னான்'' என்றான் மூர்த்தி.

உடனே முதல்வர்! ''சரி, அதை உடனே சொல்ல வேண்டியதுதானே; எதற்காக இத்தனை தயக்கம். திருடின பாபு கூசாமல் நிற்கிறான்; அதைக் கண்டு பிடிக்கப் போகிற நீ வீரனைப்போல் அல்லவா வரவேண்டும்! போகலாம் வா'' என்று புறப்பட்டவர் தன்னோடு கூடவரும் பாபுவிடம் ''அவுட் ஹவுஸ் திறந்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

''இல்லை, பூட்டி இருக்கிறது. இதோ சாவியோடுதான் சார் வருகிறேன்'' என்றான்.

பாபுவிடமிருந்து பெற்றுக்கொண்ட சாவியை பொன்னு சாமியிடம் கொடுத்து பூட்டைத் திறக்கச் சொன்னார். இரண்டு கதவையும் நன்றாகத் திறந்துவிடச் சொன்னார். அவுட் ஹவுஸ் என்று பெயரே ஒழிய ஏறத்தாழ விசால மான ஒரு கார் ஷெட் மாதிரித்தான் அது இருந்தது. ஆனால் அது சமீபத்தில் தான் சுத்தமாகப்பெருக்கிமெழுகிக்கோலம் போடப்பட்டதுபோல் பளிச்சென்று இருந்தது. ஜன்னல்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டன. ஒன்றிரண்டு ஜன்னலுக்கு கதவுகளே இல்லை. வெளிச்சம் உள்ளே தங்கு தடையின்றிப் பாய்ந்து, ''இதுக்குள்ளே, பிளேட்டும் இல்லே; ஸ்பூனும் இல்லே; நல்லாப் பார்த்துக்குங்க'', என்று கூறுமல் கூறின.

உள்ளே அடசல், பரணை ஏதாவது இருந்தால் அல்லவா குடைந்து தேடிப் பார்ப்பதற்கு; விரித்த உள்ளங்கை போல் திறந்து கிடந்த அறை வெறிச் சென்று இருந்தது.

''இங்கே யாராவது குடியிருந்தார்களா? இவ்வளவு சுத்தமாக இருக்கிறதே '' என்று கேட்டார் முதல்வர்.

உடனே பாபு, ''இது குடியிருக்க லாயக்கில்லை. அவுட் ஹவுஸ் என்று பெயர்தானே ஒழிய—லம்பர் ரூமாகத்தான் ரொம்ப வருஷம் பூட்டிக் கிடந்தது. போனவாரம் காசிக்குப் போகிற வழியில் எங்க பாட்டி இங்கே வந்து இரண்டு நாள் தங்கினாள். அவளுக்கு ஆசாரம் அதிகம். தன் அடுப்பில் தானே சமைத்துத்தான் சாப்பிடுவாள். அதற்காக அம்மா இதிலிருந்த குப்பை கூளங்கள், தட்டுமுட்டு சாமான்களை எடுத்து ஷெட்டுக்குப் பின்னால் போட்டுவிட்டு வேலைக் காரியை விட்டு இந்த அறையை அம்மா பாட்டிக்காகச் சுத்தம் செய்து கொடுக்கச் சொன்னாள். பாட்டி நேற்றுத் தான் ஊருக்குப் போனாள்'' என்று பாபு பதில் கூறினான். ஆனால் அந்த விரிவான பதிலைக் கேட்ட மூர்த்தியின் முகம் ஏனோ கண நேரத்திற்குள் பேயறைந்ததுபோல் மாறி விட்டது. அதை முதல்வர் கவனித்தபடியே, ''அப்புறம் என்ன மூர்த்தி; அவுட் ஹவுஸில் இல்லை என்று ஆகிவிட்டது; ஆனால் அதை ஏன் பாபு இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றி வைத்திருக்கக் கூடாது? வந்தது தான் வந்தோம், வீட்டையும் சோதித்துவிடுவோம் வா'', என்று கூறியபடி முதல்வர் திரும்பும்போது, ''சார் உங்களுக்கு ஒரு 'போன்' கால் வந்திருக்கிறது'' பாபுவின் அம்மா வெளியே வந்து கூறினாள்.

பொன்னுசாமியிடம் அவுட் ஹவுசைப் பூட்டிச் சாவி யைக் கொண்டுவருமாறு உத்திரவிட்டுவிட்டு முதல்வர் வேகமாக உள்ளே சென்றார். பாபுவும், மூர்த்தியும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

''ஹலோ....நான்தான் பிரின்சிபால் சிவராமன் பேச றேன். யாரு இந்தர்சந்தா?'' என்று கேட்டார் முதல்வர்.

''ஆமாம் சார்....காலமே பத்தரை மணிக்கே வர்ரதா சொன்னீங்களே! இப்போ மறுபடி காலேஜுக்கு போன்

பண்ணினேன். நீங்க இங்கே இருக்கிறதா ரைட்டர் நம்பர் கொடுத்தாரு. அவங்க ரெண்டு பேரையும் காலமேருந்து கடையிலேயே உட்கார வெச்சிருக்கேன் சார்; உடனே புறப் பட்டு வர்றீங்களா?''—கட்டைத் தொண்டையில், 'பஸ்ஸார்' ஒலிபோல் டெலிபோனின் மறு முனையிலிருந்து வந்த குரல் ஒலித்தது.

''உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன், அவங்க அங்கேயே இருக்கட்டும், இன்னும் பத்து நிமிஷத் திலே நான் உங்க கடைக்கு வந்துவிடுகிறேன்'' என்றார் முதல்வர்.

''பர்வாயில்லே சார்; அப்போ நான் போனை வெச்சுடட்டுங்களா?''

''வெச்சுடுங்க; தாங்ஸ்!'' ரிசீவரை போனில் இணைத்து விட்டுத் திரும்பிய முதல்வர், ''என்ன மூர்த்தி, எனக்கு நேரமாகிறது; இன்னும் இங்கே எங்கெல்லாம் தேடிப் பார்க்கணுமோ, எல்லாம் பார்த்துவிடு. அப்புறம், என்னைக் குற்றம் சொல்லக்கூடாது. கடமை என்று ஒரு காரியத்தைச் செய்ய முனைந்துவிட்டால் பிறகு அதில் தாட்சண்யம் பார்க்கக்கூடாது; பாரபட்சம் பார்க்கக்கூடாது; ஏன், பயப்படக் கூட கூடாது. பொன்னுசாமியைக் கூப்பிடவா; தேடிப்பார்க்க?'' என்று கேட்டார்.

உடனே மூர்த்தி, ''வேண்டாம் சார்; அவன் பேச்சை நம்பி மோசம் போயிட்டேன்; என்னை மன்னிச்சிடுங்க'' என்று கூறினான். அப்போது அவனுடைய குரல் கரகரத்து, பரி தாபமாக ஒலித்தது. ஆனால் அதை லட்சியம் செய்யாத முதல்வர்,

''உன்னை மன்னிச்சுட்டா ஹாஸ்டல் சாமான் கிடைச் சுடுமா? கண்டவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு சோதனைக்குப் புறப்படாதே என்று கல்லூரியில் நான் சொன்னபோது உன் காதில் ஏறவில்லை. பாபுமேலே திருட்டுப் பழியைப் போட்டு, காலேஜ் பூரா பிரசாரம்

பண்ணி அவன் பேரைக் கெடுத்திருக்கியே; அது என்ன ஆச்சு? உன் மேலே அவன் மான நஷ்ட வழக்கே போட லாமே?'' என்று முதல்வர் கூறிக்கொண்டிருக்கும்போதே, கல்லூரியிலிருந்து விஷயமறிந்து சேகர், கணபதி, நேதாஜி, சுந்தரம் எல்லோரும் அடக்க முடியாத ஆவலோடு பாபு வின் வீட்டைத் தேடிவந்து விட்டனர். அப்போது—

முதல்வருடைய கேள்விக்கு மூர்த்தி தயங்கியவாறு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்:

''நான் பாபுமீது கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிக் கொண்டுவிடுகிறேன் சார்?''

''ஓ! நீ யாரைப்பற்றி எது வேண்டுமானலும் இஷ்டத் துக்கு என்னிடம் புகார் எழுதிக்கொடுக்க வேண்டியது; அவமானப்படுத்த வேண்டியது; அகப்பட்டுக்கொண்ட வுடன் பல்டி அடிப்பது; இல்லே வாபஸ் வாங்குவது—இது தான் நீ மாணவர்களைத் தலைமை தாங்கி நடத்திச்செல்லுகிற லட்சணமோ?''

மூர்த்தி தணிந்த குரலில், ''நான்தான், என்னிடம் வந்து சொன்னவன் பேச்சைக் கேட்டு ஏமாந்து போனேன் என்று சொன்னேனே சார்!'' என்று கூறினன்.

உடனே முதல்வர், ''நீ இன்று நண்பன் சொன்னன் என்பாய்; நாளை கணபதி லைப்ரரியைக் கொள்ளையடித்துக் கொண்டு போனதை நானே இரண்டு கண்ணல் பார்த்தேன்; விசாரணை தேவை என்பாய்; உன் பேச்சைக் கேட்டு உன் பின்னல் இப்படியெல்லாம் நானும் ஓடிவரவேண்டும்; இல்லா விட்டால் என்னைப்பற்றி காலேஜ் சுவற்றிலெல்லாம் தாறு மாருக எழுதுவாய். இதுதானே உன் தொழில்? அந்தத் தொழிலுக்கு ''ஜே'' போட, நல்ல மாணவர்களை எல்லாம் கெடுத்து உன் பின்னல் ஒரு கூட்டத்தை வேறு கூட்டி வைத்திருக்கிருய். உன்கூடச் சேராததற்காக பாபுவின்மீது பழி;—அப்படித்தானே?''

''இனிமேல் அப்படி எல்லாம் நடக்காது சார்''.

பாபுவின்மீது கொடுத்த புகாரை வாபஸ் பெற்றுக் கொண்டுவிடுகிறேன்.

மூர்த்தியின் இந்த வார்த்தைகளைக்கேட்டதும் முதல்வர் தன்னுள் பொங்கி எழுந்த கோபத்தை அடக்க மாட்டாமல், ''முட்டாளே உன்னுடைய புகாரையும் வாபஸையும் பற்றி யார் கேட்டார்கள். காணமல் போன அந்தப் பொருட்களுக்கு என்ன பதில் சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

உடனே மூர்த்தி, ''என்னைக் கேட்டால், எனக்கு என்ன சார் தெரியும்?'' என்று கூறி முடிக்குமுன், ''திருட்டு ராஸ்கல்'' என்று முதல்வர் மூர்த்தியைப் பார்த்து அதட்டிய கத்தல் அந்த அறை முழுவதும் எதிரொலித்தது.

பாபுவும், மற்றும் அங்கு கூடியிருந்த அனைவருமே ஒரு கணம் பயந்து விட்டனர். முதல்வருக்கு இப்படியொரு கோபம் வந்து அவர்கள் யாருமே அத்தனை நாளில் பார்த்ததே இல்லை. அந்த வீடே கணநேரம் நிசப்தத்தில் மூழ்கியிருந்தது.

முதல்வர் தன்னுடைய கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையால் கண்கள், நெற்றி, முகம் எல்லாம் துடைத்துக் கொண்டார். அந்தச் செய்கைகளின் மூலம் அவர் தன்னையும் மீறி உணர்ச்சி வசப்பட்டுவிட்டதற்காக வருந்துவது போல் இருந்தது.

மிகவும் தனிந்த குரலில் கையிலிருந்த மூக்குக்கண்ணாடியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே தன்னுடைய தவறை உணர்ந்ததும், தானே வருந்தித் திருந்துபவன் முதல்ரகம்; தன் தவறைப் பிறர் உணர்த்தும்போது உணர்ந்து மனம் திருந்துபவன் இரண்டாம் ரகம்; தவறையும் செய்துவிட்டு கடைசிவரை சாதித்துக் கொணடு கையும் மெய்யுமாகப் பிடிபட்டவுடன்மட்டுமே காலைப்பிடித்துக் கொள்ளும் மூன்றாவது ரகத்தைச்சேர்ந்தவன் மூர்த்தி நீ.

உன்னை நான் அவமானப்படுத்தக்கூடாது கௌரவமாக இந்த விவகாரத்தை முடிக்க வேண்டும் என்று உனக்கு நான் அளித்த சந்தர்ப்பத்தை யெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாதென்கிற அலட்சியத்தில் இழந்து விட்டாய். உன்னுடைய பிடிவாதமும் கர்வமும் இன்னும் அடங்கவில்லை. எதையோ எதிர்பார்த்து இன்று இங்கு ஒரு நாடகத்தை ஆரம்பித்தாய். அதன் மூலம் பாபுவைக்கையும் மெய்யுமாகத் திருட்டுப் பழிக்குள்ளாக்கி வெற்றி வாகை சூடலாம் என்கிற தீய மகிழ்ச்சியோடு என்னையும் அழைத்து வந்தாய்.

''ஆனல் நானோ, நீ இங்கு வந்த பிறகு எப்படி ஏமாறப் போகிருய் என்பதைப் பார்ப்பதற்காக உன்னோடு வந்தேன். மூர்த்தி நீ ஆரம்பித்த நாடகத்தின் முடிவு உனக்கே தெரியவில்லை பார்த்தியா? உன் விரலே உன் கண்ணைக் குத்தப் போகிற உன் நாடகத்தின் முடிவை நான் உனக்குக் காட்டுகிறேன். புறப்படு'' என்ற முதல்வர் டிரைவரைக் கூப்பிட்டுக் காரை எடுக்கச் சொன்னர்

பாபுவின் தாயாரிடம் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிக்கொண்ட முதல்வர், மூர்த்தியைக் கூப்பிட்டார். அவன் வரத் தயங்கியபடியே 'எங்கே சார்போகிறோம்?' என்றுன். அவன் குரல் தீனமாக ஒலித்தது.

''நிச்சயமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு இல்லை. தைரியமாக வா'' என்று கூறிய முதல்வர் ''பாபு நீயும் வந்து உட்காரு'' என்றுர். அது ஒரு கட்டளையைப் போல் இருக்கவே, பாபு மறு பேச்சின்றி அவர் அருகில் சென்று அமர்ந்து கொண்டான். மறு நிமிஷம் கார் வந்தது போலவோ ஃபுல் லோடுடன் புறப்பட்டது.

அவ்வளவுதான் கார் கிளம்பிய மறுநிமிஷமே கணபதி, சேகர், நேதாஜி ஆகிய எல்லோரும் தங்கள் சைக்கிளில் ஏறிக் கொண்டு ரேஸ் விடுபவர்கள் போல் படுவேகமாக அந்தக் காரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

பல கோணல் மாணலான தெருக்களேக் கடந்து சென்று கொண்டிருந்த கார் இறுதியில் கடைத்தெரு முனையிலிருந்த 'இந்தர்சந்த்' வட்டிக்கடை முன்பு சென்று நின்றது.

காரிலிருந்து இறங்கிய முதல்வர் மூர்த்தியையும் கூடவே அழைத்துக் கொண்டு கடையினுள் நுழைந்தார். உள்ளே சென்ற மூர்த்தி மார்வாடியின் மேஜைமீது அடுக்கி வைத் திருக்கும் ஹாஸ்டல் பிளேட்டு, ஸ்பூன்களேயும் சற்று ஓர மாக மூலையில் காலேக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக் கும் பாபுவின் வீட்டு வேலேக்காரியையும் அவள் பக்கத்திலி ருக்கும் ஒருவனேயும், பிரமிப்போடுவைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

மறுகணம் மூர்த்தி அங்கு அப்படியே மூர்ச்சையாகி விட்டான்.

# 9 ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

''ஜீவராசிகள் அனைத்திடமும் அன்பு செய்யத் தூண்டுவதே உண்மையான கல்வி. ஆனந்தம் அளிப்பதும் அதுவே.''

—ரஸ்கின்

அன்று விசாரணை தினம். அந்த நாளேத்தான் மூர்த்தி கோஷ்டியினர் தீபாவளியைப்போல் வரவேற்று திருவிழாவைப் போலக் கொண்டாடத் திட்டமிட்டு இருந்த னர். தன்னுடைய நண்பர்களே எல்லாம் கண்டிப்பாக வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கட்டளே இட்டிருந்தனர்.

ஏனெனில் அதற்குள் பாபுவின் ஹாஸ்டல் திருட்டைத் தங்கள் தலைவர் கண்டு பிடித்து அன்று அதற்காகக் குற்ற வாளிக் கூண்டிலேறி நிற்கும் பாபுவை மூர்த்தி சரமாரியாகக் கேள்விகள் கேட்டுக் கதறவைப்பதைத் தன் நண்பர்கள் பார்த்து மகிழ வேண்டாமா?—இது தான் அவர்களுடைய ஆசை. ஆனால் இன்று—

தங்களுடைய நண்பர்களில் ஒருவர் கூட இன்று இங்கு வராதிருக்க வேண்டுமே என்று தான் அவர்கள் ஒவ்வொரு வரும் எண்ணி வெட்கப் பட்டுக்கொண்டிருந்தனர். ஆம்? அவர்களுடைய சதித் திட்டங்கள் எல்லாம் தவிடு பொடி யாகி விஷயமே எல்லாம் தலைகீழாகவல்லவா மாறிவிட்டன.

குற்றவாளியாக நிற்க வேண்டிய பாபுவுக்குப் பதில் மூர்த்தியல்லவா இன்று அந்தக் கூண்டில் ஏறி நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதை கணபதியும், சேகரும், இரண்டு நாட்களுக்கு முன்பே அம்பலமாக்கி விட்டார்களே!

பாபுவின் வீட்டிற்கு சோதனை போட முதல்வரை மூர்த்தி அழைத்துச் சென்றதையும் அங்கு மூர்த்தி பல்பு அடித்ததையும், முதல்வர் மூர்த்தியை மார்வாடி கடைக்கு காரில் அழைத்துச் சென்றதையும், அங்கு அடுக்கி வைத் திருக்கும் ஹாஸ்டல் பொருட்களைப் பார்த்து மூர்த்தி மூர்ச் சித்து விழுந்ததையும் தங்களுக்குத் தெரிந்தமட்டில் காலேஜ் முழுக்க அத்தனை பேரிடமும் கணபதியும் சேகரும் தம்பட்டமல்லவா அடித்துத் தீர்த்திருக்கிறார்கள்! இன்று கல்லூரி கலை அரங்குக் கட்டிடத்தில் கூட்டம் விழி பிதுங்கு கிறது என்றால் அதற்கு அவர்கள் செய்திருந்த பிரசாரமும்— ஊட்டியிலிருந்த 'சஸ்பென்ஸ்' நிறைந்த ஆர்வமும்தானே காரணம்?

மூர்த்தி கோஷ்டியினர் இதையெல்லாம் எண்ணித்தான் வெட்கித்து வெளியே வரமுடியாமலும் பயந்து ஒளிந்து கோழையாகி விடவும் முடியாமல் சிக்கித் தவித்தனர்;

மூர்த்தி இப்படி மாட்டிக்கொண்டு காலை வாரி விடுவான் என்று ரமேஷ் கூட எண்ணவில்லை.

பார்க்கப்போனால், அன்று உண்மையில் அது ஒரு விசாரணை தினமே அல்ல. விசாரிப்பதற்கும் ஏதும் இல்லாமல் தீர்ப்புக் கூறுவதற்கும் ஒன்றுமில்லாமல் எல்லாமே இயல்பாய் நடக்க வேண்டிய விதத்தில் நடந்து முடிந்து போன ஒரு சம்பவத்தைப் பற்றிய விளக்கம் தரும் நாள் என்று தான் கூறவேண்டும்.

பேசுவதற்காக எழுந்து நின்ற முதல்வர், தன் எதிரே முழுமியிருக்கும் மாணவர் கூட்டத்தைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்து விட்டார். அப்போது அட்டெண்டன்ஸ் எடுத்தால் பரீட்சைக்குக் கூட இப்படி ஆஜராகியிருக்க மாட்டார்கள் போலிருக்கிறது—அப்படி ஒருவர் பாக்கி இல்லாமல் வந்திருந்தனர்.

முதல்வர் தன்னுடைய பேச்சைத் துவங்க ஆரம்பித்த போது முன் வரிசையில் இருந்த ஒரு மாணவன் எழுந்து வந்து, இக்கல்லூரியின் 'நல் மாணவர் சங்க' சார்பில் இம் மலர் மாலையை அணிவிக்கிறேன் என்று ஆளுயர ரோஜா மாலையொன்றை முதல்வரின் கழுத்திலிட்டான். மாணவர்கள் கை தட்டி ''நீதிக்கும் நேர்மைக்கும் புகழ் பெற்ற நம் மதிப்பிற்குரிய முதல்வர் வாழ்க!'' என்று பெரிதாகக் கோஷமிட்டனர்.

அது அடங்கு முன், வேறு இரண்டு மாணவர்கள் கையில் மாலையுடன் மேடைக்கு வந்தனர். உடனே முதல்வர் அவர்களைப் பார்த்து, ''இப்படி இங்கே வந்திருக்கிற எல்லோருமே போட ஒவ்வொரு மாலை கொண்டு வந்திருக்கிறீர்களோ?''— என்று சிரித்தபடிக் கேட்டார்.

உடனே அவர்கள், இல்லை சார், இதோடு சரி, நீங்கள் பேச்சைத் தொடரலாம் என்று கூறியபடி ''புதிய நல் மாணவர் சங்க'' சார்பில் இந்த மலர் மாலையை மதிப்பிற்குரிய வார்டனுக்கு அணிவிக்கிறேன் என்று ஒரு மாணவ

னும், மற்றெருவன், ''சுப்பையாவின் சார்பிலும், கல்லூரி சிப்பந்திகள் சார்பிலும், இம் மலர் மாலையை தோழர் பாபுவுக்கு அணிவிக்கிறேன்'' என்று கூறியபடி பாபுவின் கழுத்தில் மாலையைப் போட்டு விட்டுத் திரும்பும்போது முதல்வர் அவனைத் தடுத்துத் தன் அருகில் நிறுத்திக் கொண்டு எனக்கு ஒரு சந்தேகம் கேட்கலாமா?'' என்று கேட்டார்.

''கேளுங்கள் சார்'' என்று மிகவும் தணிந்து அவன் பதிலளித்தான்.

உடனே முதல்வர், ''அதென்ன, 'நல்மாணவர் சங்கம்' 'புதிய நல் மாணவர் சங்கம்,' அப்புறம் இன்னும் 'மிகப் புதிய நல்மாணவர் சங்கம்' 'புத்தம் புதிய ந. ம. சங்கம்' இப்படியெல்லாம் வேறு இருக்கிறதா? இதை எல்லாம் எப்போது, யார் ஆரம்பித்திருக்கிருர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த மாணவன், புதிதாக அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை சார். முன்பு க. க. மா. சங்கம் (கலைமகள் கல்லூரி மாணவர் சங்கம்) என்றிருந்தது மூர்த்தி எலக்ஷனில் ஜெயித்து தலைவஞக வந்ததும். அத்தனை நீளமான பெயர் வேண்டாம் என்று 'மூர்த்தி மாணவர் சங்கம்' என்று மாற்றினன். பிறகு மூர்த்தி தோற்று பாபு ஜெயித்ததும் சங்கப் பெயரை 'பாபு மாணவர் சங்கம்' என்று இன்னும் அழகாகச் சுறுக்கி மாற்ற வேண்டும் என்று அவன் ஆதர வாளர்கள் கூறினர்.

பாபு இதை வன்மையாக எதிர்த்தான். மூர்த்தியின் பெயரிலேயே சங்கம் இருக்கட்டும் என்றுன். ஆனல் பாபு வின் கட்சியினர் கேட்கவில்லை. மூர்த்தி கோஷ்டியினரும் தங்கள் மாஜித் தலைவரின் பெயரை சங்கம் மாற்ற அனுமதிக்க வில்லை. அதன் பிறகு வேறு வழியின்றி, சங்கம் இரண்டு பிரிவாகி, மூர்த்தி மா. சங்கம்; பாபு மா. சங்கம் என்கிற பெயரில் இயங்கி வந்தது.

ஆனுல், நான்கு நாட்களுக்கு முன்பு, பாபு தன்னுடைய செகரட்டரி பதவியையும் ராஜினுமாச் செய்துவிட்டு தன் பெயரில் எந்தச் சங்கமும் எந்தக் கூட்டமும் இருக்கக் கூடாது என்று கண்டிப்பாக கூறிவிட்டு பாபு மா. சங்கத்தை 'நல் மாணவர் சங்கம்' என்கிற பெயரிலும் மாற்றி விட்டான்.

அதன் பிறகு கணபதி, சேகர் மூலம் மூர்த்தி விஷயம் கல்லூரி முழுவதும் அம்பலமாகி விடவே பலர் மூர்த்தி சங்கத்திலிருந்து விலகி 'நல் மாணவர் சங்கத்தில்' சேர்ந்து விட்டனர். அப்படி மேலும் சேர்ந்து இணைய மனமில்லாத ரமேஷ், ராஜு போன்றவர்கள் மூர்த்தியின் பெயரை நீக்கி விட்டு ஆரம்பித்திருப்பதுதான் 'புதிய நல்மாணவர் சங்கம்'

ஆனுல் இது ஒன்றிலும் சம்பந்த மற்ற சர்வர் சுப்பையா தன் அன்பைத் தெரிவிக்கும் பொருட்டு, தன் சொந்தப் பணத்திலிருந்து பத்து ரூபாய்க்கு ஒரு மாலை வாங்கி என்னிடம் கொடுத்து இதைக் கல்லூரி சிப்பந்திகள் சார்பில் என்று கூறி, பாபுவுக்குப் போட்டுவிடும்படிக் கூறினுன். ஆனுல் ஏழைச் சுப்பையாவின் அன்புள்ளம் கடலில் கரைத்த பெருங்காயமாக இருக்கக்கூடாது என்று நானுகத்தான் அவன் பெயரை முதலில் குறிப்பிட்டு அவனுக்கு ஒரு பப்ளிசிடியை ஏற்படுத்த வேண்டும் என்று அவ்விதம் கூறினேன். இது சுப்பையாவுக்குப் பிடித்திருக்காது. ஆனுல் எனக்கு பிடித்திருக்கிறது செய்து விட்டேன் என்று கூறி அந்த மாணவன் நிறுத்தியதும் அனைவரும் கைதட்டி 'சுப்பையா வாழ்க, தோழர் பாபு வாழ்க' என்று பலமாக கோஷமிட்டனர்.

முதல்வர் எதிரிலிருந்த மேஜையைத் தட்டி, அவர்களை அமைதிப்படுத்தியபடிக் கேட்டார். "என் இனிய மாணவர்களே 'சுப்பையா வாழ்க, பாபுவாழ்க' என்று வானளாவக் கத்திய உங்களுக்கு மூர்த்தியும் வாழ்க" என்று முணுமுணுக்கக் கூட உதடுகளில் ஒருவருக்கும் மன மில்லையே!

"வெட்ட வெட்ட, வெறுப்போ, விரோதமோ பாராட்டாது, மீண்டும் மீண்டும் தொடர்ந்து நிழலை அளிக்க வளர்ந்து கொண்டே இருக்கும் மரங்களைப் பார்த்துக்கூட மனிதன் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்வதில்லை. பெரியவர்களிடமே ஏற்படாத இந்த மாறுதலை மாணவர்களாகிய உங்களிடம் எதிர்பார்க்க முடியாதுதான்; ஆயினும் நாளை நீங்களும் பெரியவர்களாகப் போவதாலேயே இதனைக் கூறினேன்.

இன்றைய கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டிருந்தது; பின் அது எப்படி எல்லாம் உருமாறிவிட்டது என்பதெல்லாம் உங்களில் பலருக்கு இதற்கு முன்பே தெரிந்திருக்கும் என நம்புகிறேன். ஆகவே அதுபற்றி நீங்கள் அறியாததை மட்டும் கூறுகிறேன்.

தன் வகுப்பறைக்குள்ளிருந்து ஒரு மாணவனைப்பற்றி ஆசிரியர் அறிந்து கொண்டிருப்பது என்பது வேறு; வெளியுலகில் அவனைப்பற்றி அவர் அறிந்து கொள்வது என்பது வேறு. ஆனால் முன்னதற்கு மட்டுமே பொதுவாக ஒரு ஆசிரியருக்கு வாய்ப்பு இருப்பதால் அதை வைத்துக் கொண்டு மட்டுமே தன் மாணவனை அவர் எடைபோட வேண்டியவராயிருக்கிறார். ஆனால், இரு துருவங்களிலும் மாணவர்களின் மனநிலையை ஆராய்ந்து அறிய எனக்கு வாழ்க்கையில் நிறைய வாய்ப்புக் கிட்டியுள்ளது. இந்த அனுபவம் எனக்கு உணர்த்திய உண்மையைத்தான் நான் இன்று உங்களுக்குக் கூறப் போகிறேன்.

வெயில் பட்டாலே உருகிவிடும் வெண்ணையைப் போன்ற புறத்தோற்றமுள்ள மாணவர்களைப்பற்றி எல்லோருக்குமே புரியும்; யாருக்குமே பிடிக்கும்.

ஆனால் கடின ஓட்டினுள் இனிய மணத்தையும் அரிய சுவையையும் அடக்கிக்கொண்டுள்ள விளாம்பழம் போன்ற மாணவர்களும் உண்டு. ஓடு உடையும் போதுதான் அவர்களை நாம் புரிந்துகொள்ள முடியும்; அதன் பிறகே இனிய

மணமும், அரிய சுவையும் தன்னுள்ளிருப்பது அவர்களுக்கே கூடப் புரியத் துவங்கும்.

அப்படி ஒடு உடைந்த அல்லது உடைக்கப்பட்ட மூர்த்தியின் ஹாஸ்டல் வரலாற்று சம்பவத்திலிருந்து நீங்கள் அறிந்திராத — அறிந்து கொள்ள வேண்டிய அதிசய நிகழ்ச்சியை மட்டும் நான் இப்போது உங்களுக்குக் கூறுகிறேன்? மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கும் என்பதாலேயே!

'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்பது சரியான பழமொழியல்ல என்பது என் கருத்து. அணைக்கவே தெரியாத பல கைகள் அடிப்பதைப் பார்க்கிறோம். அடிக்கிற கைக்கு அணைக்கவும் தெரிந்திருக்க வேண்டும். அப்போது தான் அந்தக் கை தன்னுடைய உரிமையைச் சரியாகப் பயன்படுத்தியதாகும்.

ஆனால் அணைக்கவே தெரியாத-அல்லது பாரபட்சமின்றி யாருடனும் அனுசரித்தோ பணிந்தோ போகவே தெரியாத மூர்த்தியைப் போன்றவர்கள் கையைக் கட்டிக் கொண்டிருக்கிறவரையில்தான் கௌரவம். அதைவிட்டு சர்வர் சுப்பையாவை அடித்ததோடும் நில்லாமல் மேலும் மேலும் தவறுகளைச் செய்துவிட்டு, 'விசாரணை வேண்டும்' 'விசாரணை வேண்டும்' என்று ஓயாமல் கூச்சல் போட்டான்.

அந்த மூர்த்தி இப்போது எங்கே?—

திருடியதாகக் கூறப்பட்டுள்ள பாபு இதோ என் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான்: ஆனால் அவன் திருட்டை உங்களுக்கெதிரில் அம்பலப்படுத்தப் போவதாகக்கூறிய—குற்றஞ் சாட்டிய மூர்த்தியால் பாபுவைப்போல் என் பக்கத்தில் அமரவோ அல்லது நிற்கவோ கூட முடியவேண்டாம்; கூட்

டத்தோடு கூட்டமாய் உங்கள் மத்தியில் உங்களில் ஒருவனாகவாவது எதிரில் நிற்க முடிகிறதா?

இது நான் மூர்த்தியை உங்கள் மத்தியில் அவமானப் படுத்த வேண்டும் என்பதற்காகக் கூறிய வார்த்தையல்ல. இதற்காகவோ அல்லது வேறு எதற்காகவும் மூர்த்தியை உங்களில் ஒருவர்கூட மரியாதைக் குறைவாகப் பேசவோ, ஏன், எண்ணவோ கூட நான் அனுமதிக்கமாட்டேன். ஆனால் உப்பைத் தின்றவன் தண்ணீரைக் குடித்தே ஆக வேண்டும் என்பதற்காகவே இதைக் கூறினேன்.

உங்களில் சிலருக்குத் தெரிந்தும் பலருக்குத் தெரியாதது மான ஒரு உண்மையைக் கூறப்போகிறேன்; அதைக்கேட்டு விட்டு யாரும் எவ்விதக் கூச்சலோ கோஷமா எழுப்பக் கூடாது. கேளுங்கள் ஹாஸ்டலிலிருந்த எவர்சில்வர் பிளேட்டுகளையும் ஸ்பூன்களையும் ரகசியமாகத் திருடிச் சென்ற குற்றவாளி மூர்த்தியே என்று முதல்வர் கூறியதும் அவர் முன்னமே கேட்டுக் கொண்டதாலோ என்னவோ கூச்சலும் கோஷமும் இல்லாவிட்டாலும் அங்கு மாணவரிடையே பெரும் பரபரப்பு மூண்டதென்னவோ உண்மையில் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இயல்பான அந்த கணங்களை அதன் போக்கிலேயே அனுமதித்துவிட்டு சற்று அமைதி ஏற்பட்டதும் முதல்வர் தன் பேச்சைத் தொடங்கினார்.

திருடுவது மட்டும் நோக்கமாக இருந்தால்கூட மன்னிக்கலாம். ஆனால் நிரபராதியான பாபுவை திருட்டு வழக்கில் சிக்கவைக்க வேண்டுமென்கிற கெட்ட எண்ணத்திற்காகவே மூர்த்தி இந்தத் திருட்டை செய்திருக்கிறான். பிறகு பாபுவின்மீது அந்தப் பழி விழுவதற்கான காரியங்களில் முனைந்திருக்கிறான். ஆகவே ஒரே சமயத்தில் திருட்டு, சதி ஆகிய இரு குற்றங்களை மூர்த்தி செய்தவனானான்.

இத்தனை செய்தும் மூர்த்தி வெற்றி பெற்ருஞ என்ருல் அதுதான் இல்லை; மூர்த்தியால் மட்டுமல்ல சத்தியத்தை வெல்ல யாராலும் முடியாது.

அதனுலேயே, மெய்யும் பொய்யும் கைகலக்கட்டும். பகிரங்கமாகக் கை கலந்து போர் புரியின் என்றேனும் மெய் தோல்வி யடைந்ததைக் கண்டவர் உளரோ?— என்று மேதை **மில்டன்** வினவினுன்.

எலக்ஷன் விவகாரத்தினுல் பிரிந்து போனுலும் ஆதியில் பாபுவும் மூர்த்தியும் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த இணைபிரியாத நண்பர்களாகயிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். அதனுல் பாபுவின் வீட்டு நிலவரம் மூர்த்திக்கு நன்கு புரியும்.

அவுட் ஹவுஸ் என்கிற பெயரில் பாபுவின் வீட்டின் முன் ஒரு அறை இருந்தது. அதை யாரும் உபயோகிப்பது இல்லை. தேவையற்ற சாமான்களை அதில் போட்டு வைத்திருந் தார்கள். பல வருஷங்களாக அது பூட்டப்பட்டுக் கிடந்தது.

யாருமறியாமல் ஹாஸ்டலில் இருந்து மூர்த்தி, தான் திருடிக் கொண்டு வந்த பொருட்களை நள்ளிரவில் அந்த அறையின் ஜன்னல் வழியாக உள்ளே போட்டுவிட்டான்.

இதைப் பற்றி பாபுவுக்கு ஒன்றுமே தெரியாது. அந்த தைரியத்தில்தான் பாபுவின் வீட்டை சோதனை போடக் கூட என்னை அழைத்துச் சென்ருன். ஆனுல் விதி மூர்த்தியை சதி செய்து விட்டது.

பாபுவின் வீட்டிற்கு திடீரென்று ஒரு நாள் காசிக்குப் போற பாட்டி வந்து இறங்கினுள். மிகுந்த ஆசாரமுள்ள அவளுக்காக பாபுவின் அம்மா 'அவுட் ஹவுசை' ஏற்பாடு

செய்தாள். புழக்கத்தில் பல வருஷம் இல்லாத அந்த அறையைப் பெருக்கி மெழுகி சுத்தம் செய்து வைக்க பாபுவின் அம்மா வேலைக்காரி கையில் சாவியைக் கொடுத்து அனுப்பினாள்.

வேலைக்காரி நல்ல கெட்டிக்காரி. வீட்டு நிலவரம் தெரிந்தவள். குப்பை கூளத்துக்கு மத்தியில், ஒரு பை நிறைய புத்தம் புதிய எவர் சில்வர் பாத்திரங்களைப் பார்த்த வளுக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. அவுட் ஹவுசி லிருந்த அந்தப்பையை வேலிக்குப் பக்கத்தில் பத்திரப் படுத்தி வைத்து விட்டு மற்ற சாமான்களை எல்லாம் ஒழுங் காக வீட்டினுள் ஒப்பித்தாள். பிறகு நன்றாகப் பெருக்கி மெழுகி ரூமைப் பூட்டி சாவியை பாபுவின் அம்மாவிடம் கொடுத்தாள்.

பிறகு இருட்டிய பிறகு வேலைக்காரி வீட்டிற்குப் போகும் போது ஓசைப்படாமல் பையை மறைத்து எடுத்துச் சென்று விட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் பையைத் தன் வீட்டில் பானைக் கடியில் வைத்து விட்டு பாபுவின் வீட்டிற்கு வேலைக்கு வந்து விட்டாள்.

வேலைக்காரியின் புருஷன் ஒரு குடிகாரன். அன்றையக் குடிச் செலவுக்கு அவனிடம் காசில்லை. வீட்டில் தன் பெண் சாதி எங்காவது காசு ஒளித்து வைத்திருக்கிறாளா என்று ஒவ்வொரு இடமாய்க் குடைந்து கொண்டிருந்தவன் கண் ணில் பை நிறையப் பளிச்சிடும் எவர் சில்வர் சாமான் பட்டுவிட்டது.

அன்றையச் சாராயப் பிரச்னைக்கு அவனுக்கு வழி பிறந்து விட்டது. அடுக்கி வைத்திருந்த பிளேட்டுகளிலிருந்து

இரண்டை எடுத்துக் கொண்டு வழக்கமான மார்வாடி கடைக்குப் போனுன்.

கனமான பிளேட்டை வாங்கிக் கொண்டு கிழவன் கேட்ட சொல்பத் தொகையைக் கொடுக்கப்போன மார் வாடி அந்தப் பிளேட்டுகளில் மின்னிய கல்லூரியின் பெயரைப் பார்த்து விட்டுப் பொறி கலங்கிப் போனுன். ஆனுல் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், போனில் எனக்குத் தன் கடை விலாசத்தைக் கூறி உடனே நேரில் வரும்படி கூறினுன்.

நான் உடனே மார்வாடிக்கு இதோ புறப்பட்டு வரு கிறேன் என்று போனில் பதில் கூறிவிட்டு கிளம்ப எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் மூர்த்தி என் அனுமதி கேட்டு என் அறைக்கு வந்தான்.

நான் அவனிடம் அப்போது போன் காலைப் பற்றி ஏதுமே பேசவில்லை.

என்ன விஷயம்? என்று பாபுவின் விஷயமாகப் பேச்சை ஆரம்பித்தேன். உடனே மூர்த்தி, ஹாஸ்டல் சாமான்கள் பாபுவின் வீட்டில் ஒளிந்து வைக்கப் பட்டிருப்பதாகவும், உடனே புறப்பட்டால் அதைக் கண்டு பிடித்து விடலாம் என்று கூறி என்னைப் பிடிவாதமாக அழைத்தான்.

மார்வாடி கடைக்குப் போவதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று மூர்த்தியுடன் பாபுவையும் அழைத்துக் கொண்டு பாபுவின் வீட்டிற்குச் சென்றேன்.

அங்கு நாங்கள் சென்ற பிறகு மூர்த்தி ஏமாந்த வித மும் அவனையும் அழைத்துக் கொண்டு நான் மார்வடி கடைக்குப் போனதும் தெரிந்திருக்கும்.

வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த வேலைக்காரி பானைக்கடியில் பதுக்கி வைத்திருந்த பையைக் காணுமல் பதறிப் போனுள். தன் புருஷனின் குணம் தெரிந்த அவள் மறு நிமிஷம் மார்வாடி கடைக்கு ஓடோடியும் வந்திருக்கிருள். அவளையும் மார்வாடி மிரட்டி அங்கேயே உட்கார வைத்திருந்தான்.

மார்வாடி கடைக்குள் நாங்கள் நுழைந்ததும் மேஜை மீது வைத்திருக்கும் சாமான் பையையும் பாபு வீட்டு வேலைக்காரியையும் பார்த்துவிட்டு மூர்த்தி அப்படியே மூர்ச்சையாகி விட்டான்.

இந்தக் காட்சியையும் எங்களையும் பாபுவையும் பார்த்து விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டதென்று அறிந்த வேலைக்காரி 'கோ' வென்று அழுதாள். குற்றத்தை ஒப்புக் கொண்டு ''தயவு செய்து போலீசுக்கு சொல்லிப் பிடாதீங்க'' என்று என் கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சி அழுதாள்.

மயக்கம் தெளிவிக்கப்பட்ட மூர்த்தி இந்தக் காட்சியைப் பார்த்துத் தலையைத் தாழ்த்திக் கொண்டான். நான் அவனிடம் ''உன்னுடைய இந்தச் செயலுக்கு மூன்று பேர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டும். என்ன சொல்லுகிருய்'' என்று அதட்டினேன். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடியது.

அந்தக் கண்ணீர்த் திரையினூடேயே பாபுவைப் பரிதாபமாகப் பார்த்தான் மூர்த்தி. தன்னுடைய செய்கைக்காக அவன் வருந்தி பாபுவிடம் மானசீகமாக மன்னிப்பு வேண்டுவது போல் இருந்தது அந்த உருக்கமான காட்சி. நானும் பாபுவைக் கவனித்தேன். அவனது கண்களும் கலங்கிப்போய் தளும்பிக்கொண்டிருந்தன.

பிறகு மெல்லிய குரலில் பாபு என்னைப் பார்த்து ஸார் ஒரு விண்ணப்பம் என்றான்.

நான் அவனைக் கூர்ந்து நோக்கினேன்.

''ஸார், இந்த ஹாஸ்டல் சாமான் திருட்டை நானே ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் காரியத்தை நான் செய்த தாகவே இருக்கட்டும். இதற்காகத் தாங்கள் மூர்த்திக்கு விதிக்கப் போகும் தண்டனையை எனக்கு அளியுங்கள். நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். மனப்பூர்வமாகத் தான் இதை நான் சொல்கிறேன் என்றான் குரல் தழுதழுக்க.''

நான், ''உனக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதா பாபு?'' என்று போலியாக ஒரு அதட்டு அதட்டினேன்.

உடனே பாபு, இல்லை சார் மூர்த்தியின் பிரசாரத்தினால் என் மீது திருட்டுப் பட்டம் விழுந்து என்னை அந்தக் கண்ணோடு பார்க்கிறவர்களைப் பார்த்துப் பார்த்து நான் பழகி விட்டேன். ஆகவே எனக்குப் புதிய அவமானம் வந்து விடப் போவதில்லை. ஆனால் மூர்த்தியின்நிலை அப்படி அல்ல. அவன் நல்லவன் என்று பல மாணவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையைக் குலைக்கவேண்டாம் என்பதற்காகவே அந்தப் பழியை நிஜமாகவே ஏற்கச் சம்மதிக்கிறேன் என்றான்.

பாபுவின் இந்த வார்த்தைகளைக் கேட்ட மூர்த்தி புழுப் போல் துடித்துப் போனான்.

அந்த நிலையில் தன்னைபாபு பரிகசிப்பான்; ஏளனமாகப் பார்ப்பான். நாளை கல்லூரியையே திரட்டிக் கொண்டு வந்து தன் மானத்தை வாங்கி விடுவான் என்றெல்லாம்தான் மூர்த்தி பாபுவைப் பற்றி எண்ணியிருந்தான். ஆனால் அவன்

எண்ணியதற்கு மாறாக நடந்ததை அவன் மறந்து—மன்னித்து பாபு காட்டிய பரிசுத்தமான அன்பு மூர்த்தியின் இதயத்தைத் தாக்க வேண்டிய இடத்தில் தாக்கி விட்டது போலும்.

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சட்டென்று என்கால்களைப் பற்றிக் கொண்டு சார் தயவு செய்து பாபுவை இனி அப்படியொரு காரியத்தை வேறு செய்ய அனுமதித்து விடாதீர்கள். முன்னர் நான் செய்த தீய காரியங்களும் எண்ணங்களுமே என்னைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குரிய தண்டனையை இன்னும் நான் அனுபவிக்க ஆரம்பிக்கவில்லை. அது நடை பெறவேண்டும் என்றான்.

என் நண்பர்களுக்கெல்லாம், நான் எவ்வளவு கெட்டவன்—கேவலமானவன் என்பது தெரியவேண்டும். அவர்கள் அதற்காக காறித்துப்பினாலும் ஏற்றுக் கொள்வேனே தவிர மீண்டுமொரு முறை பாபுவை அவமானத்திற்காளாக்க இடம் கொடேன்.

புதன்கிழமை கூட்டத்தில் என் குற்றங்கள் குறைகளை எல்லாம் என் நண்பர்களிடம் எடுத்துக் கூறி விமரிசித்து விடுங்கள். இன்னும் சர்வர் சுப்பையாவைவிட நான் ஆயிரம் மடங்கு தாழ்ந்தவன் என்பதையும் மறவாமல் எடுத்துக் கூறுங்கள் என்று வேண்டிக் கொண்டான்.

மாணவர்களே இங்கு உங்களுக்கு ஒரு சந்தேகம் எழவாம் பாபுவைவிடக் கேவலமாகத் தன்னை மூர்த்தி குறைத்து பேசிக் கொள்ளட்டும்; பரவாயில்லை. திடீரென்று சர்வர் சுப்பையாவின் பெயரை ஏன் மூர்த்தி கூறவேண்டும் என்று தோன்றலாம். காரணம் இதுதான்.

சுப்பையாவைத் தாக்கியதற்காக அவனிடமும் ஹாஸ்டல் ரகளை, சேதம் ஆகியவற்றுக்காக பாபுவிடமும் வார்ட

னிடமும் மன்னிப்புக் கோரும்படி மூர்த்திக்கு உத்தரவு பிறப்பித்திருந்தேன் அல்லவா?

அதைப்பார்த்ததும் சுப்பையா என்னிடம் ஓடிவந்தான். சார் ரகளை நடந்த அன்றே அரைமணிக்கெல்லாம் மூர்த்தி என்னிடம்வந்தார். தன்னுடைய செய்கைக்காக வருந்தினர். தனக்காகவும் தன் நண்பர்களின் பொருட்டும் என்னிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டு விட்டார் சார். நான்தான் சார் உங்களிடம் சொல்லவில்லை. ஆகவே இனி மீண்டும் ஒரு முறை எதற்கு? வேண்டாம் சார் என்று கூறிச் சென்று விட்டான்.

ஆனல் பிறகுதான் கேள்விப்பட்டேன். நான் யாரிட மும் எதற்காகவும் மன்னிப்புக் கேட்கத் தேவை இல்லைஎன்று மூர்த்தி கூறிக் கொண்டு அலைவதாக. ஒரு நாள் மூர்த்தியை அழைத்து தவறு செய்துவிட்டு பாபுவிடமும், வார்டனிட மும் மட்டும் ஏன் மன்னிப்புக் கேட்க மறுக்கிருய்? இதில் ஒரு கௌரவப் பிரச்னையும் இல்லை. சுப்பையாவிடம் நீ மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டது எனக்கு உன்னைப் பற்றி எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா? என்று கேட்டேன்.

அவ்வளவுதான். மறுகணம் அவன் விழிகள் சிவந்து விட்டன.யார் சார் உங்களுக்குச் சொன்னது? சர்வர் சுப்பை யாவிடம் மன்னிப்புக் கேட்டதாக. எங்களுக்கும் மானமிருக் கிறது சார் என்ருன் ரோஷமாக.

''சுப்பையாதான் சொன்னுன்!' என்றேன் நான்.

''சுத்தப் பொய் சார். இப்படிச் சொல்லித் தனக்குப் பெருமை தேடிக்கொள்ளப் பார்க்கிருன்'' என்று கூறிப் போய்விட்டான்.

பிறகுதான் யூகித்துப் புரிந்து கொண்டேன்;—என் அறிக்கையின் பேரில் யாரும் தன்னிடம் வந்து மன்னிப்புக்

கேட்க வருவதை சுப்பையா விரும்பவில்லை; அதை உடனே தடுக்கத்தான் அவன் என்னிடம் வந்து இப்படி ஓர் உபாயம் செய்திருக்கிறுன் என்று.

ஓ? சுப்பையா எவ்வளவு பெரிய மனுஷன்.

இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்துதான் மூர்த்தி அவ்வாறு கூறினுன்.

என் இனிய மாணவர்களே, நடந்து முடிந்துபோன விஷயங்களைப் பற்றித்தான் இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மூர்த்தியால் எழுந்த இந்த ஹாஸ்டல் தகராறினுல் பொதுவாக எனக்கு ஓர் உண்மை புலனுயிற்று.

பிறப்பில் எல்லோரும் உயர்ந்தவர்களே என்பது மட்டுமல்ல; இயற்கையிலும் எல்லோரும் நல்லவர்களே! சூழ்நிலையும் சந்தர்ப்பமும்தான் மனிதனை அந்தந்தக்கால கட்டத்திற்கேற்ப நல்லவனுகவும் கெட்டவனுகவும் இன்னும் புரிந்துகொள்ளவேமுடியாத விசித்திரமானவனுகவும் எல்லாம் உருவாக்குகிறது. இதையே நான் உங்களிடமும் கண்டேன்.

சட்டென்று அணுக முடியாத விளாம்பழ இதயம் கொண்டவர்களையும் பளிங்கு மனமுள்ளவர்களையும் பனிக்கட்டி இதயம் படைத்தவர்களையும் பார்த்துப் பரவசமடைந்தேன்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப அடுக்கடுக்கான தவறுகளைச் சுயநலத்திற்காகச் செய்துகொண்டே சென்ற மூர்த்தி அதே சந்தர்ப்ப சூழ்நிலைகளின் இரும்புப் பிடிகளில் சிக்கித் தவிக்க நேர்ந்தபோது சரணடைந்துவிட்டான். இதைத் தவிர அவனுக்கு அப்போது வேறு வழி இல்லை என்று கொள்வதைவிட அவன் தனது தவறுகளுக்காக நெஞ்சுருகி

கண்ணீர் வடித்தான் என்பதுதான் சரி. அதனாலேயே நான் அவனை அப்போதே பூரணமாக மன்னித்து விட்டேன்.

அன்பான மாணவர்களே, அன்பின் வழியது இவ்வுலகம். ஆணவத்தால் எதையும் பெறமுடியாது; யாரையும் அடிமைப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து திருந்திய மூர்த்தியை நான் மன்னித்துவிட்டதில் உங்களில் எவருக்கேனும் கருத்து வேறுபாடு உண்டா? என்ன ஆனாலும், அவனைத் தண்டித்தே ஆகவேண்டும் என்று எண்ணுகிறவர்கள் உங்களில்யாராவது இருக்கிறார்களா? என்று கேட்டபடி முதல்வர் தன் பேச்சை ஒருகணம் நிறுத்தினார்.

உடனே எதிரிலிருந்த மாணவர் கூட்டம் முழுவதும் ஏகோபித்த குரலில் 'இல்லை இல்லை' என்று கூறினர்.

முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டுத் தன் உரையைத் தொடர்ந்தார் :

அன்பார்ந்த மாணவர்களே, மன்னிக்கத் தெரிந்தவனே மகத்தான மனிதன். நீங்கள் மூர்த்தியை மன்னித்து விட்டால் மட்டும் போதுமா? நடந்ததை ஒரு கெட்ட கனவாகப் பாவித்து மறந்து விட்டு மூர்த்தியை முன்போல், உங்களில் ஒருவனாக இணைபிரியாத தோழனாக ஏற்றுக்கொண்டு அன்பு செலுத்த வேண்டும். அதுவே அவன் எதிர்கால வாழ்க்கைக்கும் அவனது மனப்புண் மாறுவதற்கும் மருந்தாகும்.

ஆன்மாவின் பெருந்தன்மை என்பது, எத்தனை சந்தர்ப்பங்களில் நாம் இரக்கம் காட்டுகிறோம் என்ற அளவைப் பொறுத்ததே என்று மேதை 'பேக்கன்' கூறியதையும்—பட்சமாயிருத்தல் என்பது எந்தக் காலத்தும் பழிவாங்குதலினும் பெருந்தகைமை உடையதே என்கிற ஷேக்ஸ்பியரின் வாக்கை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

பாபுவின்மீது மூர்த்தி எந்தப் பழியும் சுமற்றியது சரியல்ல; அவன் நிரபராதி என்று நான் அறிவித்தவுடன் உங்கள் முகங்களில் பூத்து நின்ற மகிழ்ச்சியையும், விண் அதிர நீங்கள் எழுப்பிய கரவொலியையும் கேட்டுப் பூரித்தேன். ஆனால் இதுமட்டும் போதாது. மூர்த்தியிடம் நீங்கள் மீண்டும் பழகத் துவங்கும்போது, எந்த நெருக்கடியான கட்டத்திலும் அவனைக் குத்திக் காட்டலாகாது. ஏனெனில் நெறி பிறழுவது மனித இயல்பே.

மிதமான இளம் வெயிலில் வளரவேண்டிய பசுமையான இளஞ்செடியைப் போன்றவர்கள் நீங்கள். கடும் வெயிலைப் போன்ற கொடிய சூழ்நிலைகளிலிருந்து விவேகமாக உங்களைக் காப்பாற்றிக் கொள்வது என்பது உங்கள் கையில் தான் இருக்கிறது.

குயவன் கை பச்சை மண்ணைப்போன்ற நீங்கள்— விரும்புகிறவர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ற அவர்கள் விரும்புகிற பாத்திரங்களாகவெல்லாம் மாறாமல் உங்களிடம் ஒரு தனித்தன்மை உருவாகட்டும். நீங்கள் அடைய வேண்டிய 'அன்பு, நேர்மை, சத்தியம், கடமை' ஆகிய உயர்வான பாத்திரங்களாக உருவாகுங்கள்.

மூர்த்தியை மன்னித்து, உங்களில் ஒருவனாக அன்பு காட்ட நீங்கள் அளித்த வாக்குறுதி என்னைப் பெருமை கொள்ளச் செய்கிறது. இதற்கு மேலும் மூர்த்தி உங்களைப் பார்க்க வெட்கப்பட்டாலோ, வேதனைப்பட்டாலோ அல்லது இந்த மேடைக்கு வரத் தயங்கி, திரைக்குப் பின்னால் துயரத்தோடு நின்று கொண்டிருப்பதாலோ ஏதேனும் பொருள் உண்டா என்பதை நீங்களே கூறுங்கள் என்று முதல்வர் கூறி முடிக்கு முன்னர் கூடியிருந்த மாணவர்கள், 'இல்லை, இல்லை. நண்பர் மூர்த்தி உடனே மேடைக்கு வரவேண்டும். மூர்த்தியைக் காண நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்'' என்று நாற்புறமிருந்தும் குரல் எழுப்பினர்.

மேஜையைத் தட்டி அவர்களை அமைதிப்படுத்திய முதல்வர் அன்பான மாணவர்களே, இந்த மாறுதலைத்தான் நான் உங்களிடம் என்றும் எதிர்பார்க்கிறேன்.

தெரிந்தே தவறு செய்தாலும், உன் சகோதர மனுஷனின் தவறுகளை அன்போடு ஆராய்வாய். அதனிலும் அதிக அன்போடு, உன் சகோதரி மனுஷியின் தவறுகளை ஆராய்வாய். நெறி பிறழ்வது மனித இயல்பே—என்னும் 'பர்ன்ஸ்' ஸின் பொன்னான வாக்கை என்றும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இதற்கு மேலும் நான் ஏதாவது பேசிக்கொண்டு உங்களுக்கும் நீங்கள் ஆர்வத்தோடு வரவேற்கத் துடிக்கும் மூர்த்திக்கும் குறுக்கே நிற்க விரும்பவில்லை. இன்னும் சில கணங்களில் மூர்த்தி உங்கள் முன்னால் வந்து நிற்பான். ஆனால் நீங்கள் சற்று முன் அழைத்ததைப் போல் வெறும் நண்பர் மூர்த்தியாக மட்டும் இங்கு வரப்போவதில்லை. இது என்ன புதிர் என்று உங்களுக்குத் தோன்றுகிறதல்லவா? —

ஆம்! இது ஒரு புதிர்தான். நீங்கள் எத்தனை முயன்றாலும், இதனை உங்களால் ஊகிக்க முடியாது. முடிச்சை நானே அவிழ்க்கிறேன்.

—தன் மீது மூர்த்தி திருட்டுக் குற்றம் சாட்டியதற்காக, பாபு தன்னுடைய பதவியை ராஜினாமாச் செய்தான் அல்லவா? அந்தப் பதவியை இப்போது ஏற்கக்கூட பாபு பிடிவாதமாக மறுத்து விட்டான். தன்னுடைய எந்தத் தொண்டையும் ஒரு குடையின் கீழ் நின்று செயலாற்றுவதில்லை என்று முடிவு செய்து விட்டானாம். ஆகவே தன்னை எந்தப் பதவியையும் ஏற்க அல்லது தன் தலையில் கட்ட வற்புறுத்த வேண்டாம் என்று என்னிடம் பிடிவாதமாக மறுத்தான்.

பாபுவின் கோரிக்கைகளை எல்லாம் ஏற்றே பழக்கப்பட்டுப் போன எனக்கு,—ஏனெனில் அவை என்றும் நியாயமானவையாகவே இருக்கும் என்பதால்தான் இதையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அது மட்டுமல்ல.

தன்னுடைய செகரட்டரி போஸ்டை மூர்த்தியே மீண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவனைப் பிடிவாதமாக வற்புறுத்தி மூர்த்தியைச் சம்மதிக்கவும் வைத்து விட்டான். அதற்கு மேலும் பாபுவின் விருப்பத்திற்கு நான் குறுக்கே நிற்கவிரும்பவில்லை. ஆனால், உங்களில் யாருக்கேனும், இந்த ஏகோபித்த முடிவில் ஆட்சேபணை இருந்தால் அதைத் தாராளமாகத் தயங்காமல் கூறலாம் என்று முதல்வர் கூறியதும் மறுகணம் 'செகரட்டரி மூர்த்தி வாழ்க; பொன் மனத் தியாகி பாபு வாழ்க; பெருமதிப்பிற்குரிய முதல்வர் வாழ்க' என்று அந்தக் கட்டிடமே அதிரும் வண்ணம் எழுப்பிய கோஷமே அனைவருடைய சம்மதத்திற்கும் சாட்சியாக ஒலித்தன.

அதைத் தொடர்ந்து, இருகரம் கூப்பியபடி உள்ளேயிருந்து வெளியே வந்த மூர்த்தியைக் கண்டதும் மாணவர்களின் உணர்ச்சி அணை கடந்து விட்டது.

அத்தனை காலம் தாங்கள் பார்த்துப் பழகிய பழைய மூர்த்திக்குப் பதில் பாபுவால் புடம் போட்ட புதிய ஒரு மூர்த்தியைப் பார்க்க ஆவல் கொண்டவர்களைப்போல் அனைவரும் தங்கள் ஆசனத்தின் மீது ஏறி நின்று கொண்டு ஆரவாரம் செய்தனர்.

இந்தக் காட்சியைக் கண்ட பாபுவின் விழிக் கடையிலே கண்ணீர் பூத்து நின்றது. அளவுக்கு மீறிய மகிழ்ச்சியினால் கண்களில் நீர் நிரம்பி வழிகிற இன்ப உணர்ச்சியை அப்போது தான் பாபு தன் வாழ்க்கையில் முதல் தடவை

யாக அனுபவிக்கத் துவங்கியிருந்தான். இதை முதல்வர் கவனித்தார்.

இந்தத் துவக்கம் தொடரும். அதை அவனால் தொடராமல் இருக்க முடியாது. அதற்கான விதை அவன் உள்ளத்தில் ஊன்றப் பட்டு முளை விடத் துவங்கி விட்டது. அது அவன் வாழ்க்கையில் பல கிளைகளில் பல ரூபத்தில் சேவையும் தியாகமுமாக பரிணமித்து படர்ந்து பெருகி பூவும் கனியுமாகப் பூத்துக் குலுங்கப் போகின்றன.

அந்தப் புதிய அனுபவத்தினால் ஏற்படும் இன்பத்தைச் சுவைத்துச் சுவைத்து செயல் படட்டும். அது நிச்சயம் அவனை என்றோ ஒரு நாள் எங்கோ ஓர் உயர்ந்த பீடத்தில் ஏற்றி நிறுத்தியே தீரும். என்னுடைய அதற்கான ஆசி அவனுக்கு என்றும் உண்டு என்று பாபுவைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த முதல்வரின் அருகில் நின்று கொண்டிருந்த மூர்த்தி மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

உணர்ச்சி வசப்பட்டுப் போயிருந்த அவனால் உற்சாகமாகப் பேச முடியவில்லை. ஆனால் அவன் பேச்சு உருக்கமாக இருந்தது.

அன்புள்ள நண்பர்களே, எவ்விதம் இறந்தான் என்பதன்று கேள்வி—எவ்விதம் வாழ்ந்தான் என்பதே கேள்வி. என்று கூறிய டாக்டர் ஜான்சனின் வார்த்தை தான் இப்போது என் நினைவிற்கு வருகிறது.

முன்பு நான் எதைப் பற்றியும், ஏன் என்னைப் பற்றியே கூடக் கவலைப் படாமல் தான் வாழ்ந்தேன். ஆனால் என் முன் இப்போதுள்ள ஒவ்வொரு நிமிஷமும் என்னை நோக்கிப் பயமுறுத்துவதுபோலவும் எனக்கு அவற்றை எண்ணிப் பார்க்கவே பயமாயிருப்பது போலவுமே தோன்றுகின்றன.

நான் எத்தனை மறுத்தும் கேளாமல் நண்பர் பாபு என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டார். காட்டாறாக வாழ்ந்து பழகிப் போன நான், எப்படி ஒரு இனிய நீரோடையாக மாற முடியும் என்று எனக்கே புரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில் பாபு இந்த விதத்தில் என்னைத் தண்டித்து விட்டதாகவே தோன்றுகிறது.

என் நண்பர்களிடம் இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுத்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். இப்போதுள்ள நம்முடைய நல் மாணவர் சங்கம், புதிய நல் மாணவர் சங்கம் ஆகிய பெயர்கள் நீக்கப்பட்டு அனைத்தும் ஒரே சங்கமாகச் செயல் பட வேண்டும்.

அந்தப் புதிய சங்கத்திற்கு பாபுவின் பெயரை வைக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஆனால் அதை நிச்சயமாக பாபு எதிர்ப்பான் என்பது எனக்குத் தெரியும். ஆனால் பாபுவால் எதிர்த்துப் பேசவேமுடியாத ஒரு பெயரை நம் சங்கத்திற்கு நான் சூட்டப் போகிறேன். அதன் பெயர் 'பாபுஜி மாணவர் சங்கம்' ன்பதே என்று மூர்த்தி கூறியபடியே பாபுவை இறுகத் தழுவிக் கொண்டான். மாணவர்களின் கை தட்டல், பல நிமிஷங்களுக்கு நிற்கவே இல்லை. அந்த ஓசையில் ஒரு புதிய நம்பிக்கை பிறந்தாற்போல் கல்லூரி தலை நிமிர்ந்து நின்றது.